REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2023 மார்ச் 9 வியாழக்கிழமை
THINAKARAN தினகரன்
1932 - 2022

வரு. 91 இல. 58 | Thursday 09, March, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## ஜூலை, டிசம்பர் மாதங்களில் மின் கட்டணங்களில் திருத்தம்

### 06 மாதங்களுக்கொருமுறை திருத்தம் செய்வதே நோக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நடைமுறையிலுள்ள மின்கட்டணம் ஆறு மாத காலத்துக்கு ஒருமுறை மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளதுடன் எதிர்வரும் ஜூலை மற்றும் டிசம்பர் மாதங்களில் மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுமென அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

மின்கட்டணத் திருத்தம் தொடர்பில் இலங்கை மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு ஆகியன ஒன்றிணைந்து தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டுமென சபையில் தெரிவித்த அவர், எதிர்வரும் ஜூலை மற்றும் டிசம்பர் மாதங்களில் மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுமென்றும்

06

## பேரீச்சம்பழத்துக்கான இறக்குமதி வரி குறைப்பு

### ஜனாதிபதி ரணில் விஷேட உத்தரவு



இறக்குமதி செய்யப்படும் பேரீச்சம்பழத்துக்கு விதிக்கப்பட்டிருந்த விசேட பண்டங்கள் வரியைக் குறைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சரென்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

எதிர்வரும் ரமழான் பண்டிகை காலத்துக்கான நிவாரண நடவடிக்கையாக ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இதன்படி, 01 கிலோ பேரீச்சம்பழத்துக்கு 200

06

## பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள ஆதரவளித்த பெண்களுக்கு பாராட்டு

### நிர்மலா சீதாராமன், ஜெனட் யெலன், கிறிஸ்டலினா ஜோர்ஜிவா ஆகியோருக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்



இலங்கை நெருக்கடியை எதிர்கொண்டபோது அதிலிருந்து விடுபட ஆதரவளித்த நபர்களிடையே உலக அளவில் மூன்று பெண்கள் உள்ளதாகவும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜெனட் யெலன், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா

06

## அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சி

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் வெகுவாக குறைவு



### சீனி, பருப்பு, வெங்காயம், மா, பாண் நேற்று நள்ளிரவு முதல் விலை குறைப்பு

**03 நாட்களுக்குள் அமெ.டொலரின் பெறுமதி 50 ரூபாய் குறைந்துள்ளதாக ஏற்றுமதியாளர்கள் சங்கம் தெரிவிப்பு**

இலங்கையின் ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி நாளுக்கு நாள் குறைவடைவதன் காரணமாக கடந்த சில நாட்களாக சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் விரைவாக குறைந்து வருகின்றன. சில வாரங்களுக்கு முன்னர் சந்தையில் சீனி ஒரு கிலோ கிராமின் மொத்த விலை 220 ரூபாவாக இருந்ததோடு இன்று அது 200 ரூபாவாக குறைவடைந்துள்ளது. ஒரு கிலோ பருப்பின் மொத்த விலை 340 விலிருந்து 325 வரை குறைவடைந்துள்ளது. 115 ரூபாவாக காணப்பட்ட பெரிய வெங்காயம் ஒரு கிலோ இன்று 95 ரூபாய் வரை குறைந்துள்ளது.

அத்துடன் நேற்று நள்ளிரவு முதல் பாணின் விலை குறைடைந்துள்ளது. நேற்று (8) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், 450 கிராம் (ஒரு இறாத்தல்) நிறையுடைய பாணின் விலையை 10 ரூபாவினால் குறைக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கமும்

06

## நெருக்கடியான சூழலில் நட்பு நாடுகள் உதவ வந்திருப்பது நாட்டின் அதிர்ஷ்டம்



நாடு மிகவும் நெருக்கடியான தருணத்திலுள்ளபோது அக்கறையுடன் உதவும் நட்புநாடுகள் கிடைத்திருப்பது. இலங்கையின் அதிர்ஷ்டமெனக் குறிப்பிட்ட வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தற்போதைய சூழ்நிலையில் அவசியமான அனைத்து உத்தரவாதங்களுடனும் முன்னோக்கிப் பயணிப்பது சிறந்ததென்றும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் கடனுதவியை இலங்கை பெற்றுக் கொள்வதற்கான நிதியியல் உத்தரவாதத்தை முதலாவதாக

06



### மூன்று வேளை உணவு, சலுகைகளை பெறும் துறைமுக ஊழியர்களே இன்று ஆர்ப்பாட்டம்

03

## எரிபொருளுக்கான QR முறைமையில் மாற்றம்



எரிபொருளுக்கான QR கோட்டா முறை நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் நள்ளிரவில் புதுப்பிக்கப்படுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார். அமைச்சர் கஞ்சன தனது ட்விட்டர் பதிவிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக QR ஒதுக்கீடு ஒவ்வொரு வாரமும்

06

## நாட்டில் இதுவரை முட்டைகள் இறக்குமதி செய்யப்படவில்லை

### பொய்யான செய்திகளே பரவுகின்றன



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்தியாவிலிருந்து இதுவரை முட்டை எதுவும் இறக்குமதி செய்யப்படவில்லை என்றும் 24 இலட்சம் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டதாக வெளிவந்த தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் வர்த்தக

06

சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை விவகாரம்:

## ஆங்கில மொழிப் பிரச்சினைக்கு பாராளுமன்றத்தின் மூலமே தீர்வு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சட்டக் கல்லூரி பரீட்சையை ஆங்கிலத்தில் எழுதுவது தொடர்பான தீர்மானத்தினால் எழுந்துள்ள பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறுப்பை, பாராளுமன்றத்திடமே ஒப்படைக்கப் போவதாக நீதியமைச்சர்

06

## இந்தியக் கடன் உதவியை நீடிக்க இலங்கை பேச்சு



இந்தியாவிலிருந்து பெறப்பட்ட ஒரு பில்லியன் டொலர் கடனை மேலும் சில மாதங்களுக்கு நீடிப்பதற்கான பேச்சுவார்த்தையில் இலங்கை தற்போது ஈடுபட்டுள்ளது. இந்தியாவின் கடனுதவி மார்ச் (17) நிறைவடைகின்றது. இதையடுத்து இலங்கை

06



தமிழகத்தின் ஓசூர் மற்றும் நாமக்கல்லிலுள்ள கோழிப் பண்ணைகளுக்கு இந்தியாவுக்கான இலங்கை பிரதி உயர்ஸ்தானிகர் வெங்கடேஸ்வரன் அண்மையில் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். ஓசூரிலுள்ள மிகப்பெரிய குஞ்சு பொரிப்பகம் மற்றும் நாமக்கல்லிலுள்ள முட்டை அடுக்கு கோழிப்பண்ணையை இவர் பார்வையிட்டார். இவ்விஜயத்தின் போது கோழி வளர்ப்பு மற்றும் பண்ணைத்துறையில் இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான ஒத்துழைப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

உயர்தரக் கல்வியை இழக்கும்

## மலையக மாணவர்களுக்கு விஷேட தொழிற் பயிற்சித் திட்டம்

**11ஆம் திகதி பதுளையில்**

### கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவிப்பு



க.பொ.த. உயர்தரத்துக்கு செல்ல முடியாத மலையக இளைஞர், யுவதிகளுக்கு விஷேட தொழிற்பயிற்சித் திட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி பதுளையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார். கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையின் பின்னர் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களே உயர்தரத்தில் கல்வியைத் தொடர்கின்றனர். பல்வேறு

06

## மனசாட்சியுள்ள எவரும் அவசரமாக தேர்தலைக் கோரப்போவதில்லை

### அதிகாரத்துக்கு செலவிடும் பணத்தை வயிற்றுப்பசிக்கு போராடுவோருக்கு வழங்குவதே சிறந்தது



தேர்தலை நடத்துமாறு கோரும் எந்தத் தரப்புக்களிடமும் மக்களின் ஜனநாயக உரிமைகள் பற்றிய அக்கறை கிடையாதென அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

மக்களின் உயிரைவிடப் பெரியதாக எதுவுமில்லை. உயிர் வாழ்ந்தால்தான் உரிமை பற்றிப் பேசமுடியும் என்பதை தேர்தலைக் கோரும் தரப்பினர் அறிந்து கொள்வது அவசியமென்றும் அவர் குறிப்பிட்டார். தேர்தலை நடத்துமாறு எதிரணியினர் மேற்கொள்ளும்

06



### காத்திரமான நடவடிக்கைகளால் ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரிப்பு

03

### கொலைக் குற்றத்தில் தொடர்புற்ற ஐவருக்கு மரண தண்டனை தீர்ப்பு



03

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கும்

## ஜனாதிபதியின் வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள் பாராட்டுக்குரியவை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரோடு இணைந்த அதிகாரிகள் மேற்கொண்டு வரும் வேலைத் திட்டங்கள், வரவேற்கத்தக்கவையென

06

## மஹிந்தவிற்கு எதிரான வெளிநாட்டு பயணத்தடை நீக்கம்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான வெளிநாட்டு பயணத்தடை நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஏப்ரல்

06

## ரூபாவின் பெறுமதி நேற்றும் அதிகரிப்பு



அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக நேற்றும் வலுவான நிலைக்கு உயர்ந்துள்ளது.

இதன்பிரகாரம், இலங்கை மத்திய

06

## மீட்டெழுச்சியை தொடர்ந்தும் வெளிப்படுத்தும் மக்கள் வங்கி



அசாதாரணமான, மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் மக்கள் வங்கி தொடர்ந்தும் அதன் மீண்டெழுதலை வெளிப்படுத்தி வருகிறது. டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரிக்குப் பிந்திய இலாபம் ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படையில்

06




ஆர். சுகா

# புதிய தொழில்நுட்பமும் உருளைக்கிழங்கு உற்பத்தியும்

'எங்கும் எதிலும் புதிய தொழில்நுட்பம், இதில் விவசாயம் மட்டும் விதி விலக்கல்ல'

யாழ்ப்பாணத்தின் அச்செழுப்பகுதியில் வசித்து வரும் விவசாயியான ராஜரட்ணம் லட்சுமணனர் என்பவர் தனது தந்தையின் காலத்திலிருந்து 30 வருடங்களுக்கும் மேலாக விவசாயத்தில் ஈடுபட்டு வருவதுடன், தற்போது 73 வயதானாலும் அவர், இன்றையகால ஓட்டத்திற்கேற்ப உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தி, அதன் மூலமாக அதிகளவு விளைச்சலைப் பெற்று ஏனைய விவசாயிகளின் மத்தியில் முன்மாதிரியாகத் திகழ்கின்றார்.

அவர் தன்னிடம் உள்ள 16 பரப்பு வயல் நிலத்தில் கத்தரி, புகையிலை, வெங்காயம் போன்றவற்றுடன், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உருளைக்கிழங்குக் கன்றுகளையும் பயிரிடுகின்றார். இப்பயிர்ச் செய்கைகளுக்கு சேதன உரங்களுடன் ஆர்க்கா, கினிக்கா, டிசிரி போன்ற இரசாயன உர வகைகளையும் சற்றுப் பயன்படுத்துகிறார்.

இந்நிலையில், அவரது வாழ்வுடன் ஒன்றித்துப் போயுள்ள விவசாயத்தின் பங்களிப்புப் பற்றி வினாவிய போது,

இன்றைய காலச் சூழ்நிலையில் அரசாங்கத் தொழிலை விட விவசாயச் செய்கையே சிறந்தது. ஒரு குடும்பத்தின் தற்கால வாழ்க்கைச் செலவுக்கு அரசாங்கச் சம்பளம் போதுமானதாக இருக்காது. அரசாங்கத் தொழிலுடன் பகுதி நேரமாக சுயதொழிலில் ஈடுபட்டால் மட்டுமே போதியளவு வருமானத்தினைப் பெற முடியும். தனது மகன் கூட அரசாங்க வேலையில் இருந்தாலும், பகுதி நேரமாக தன்னோடு இணைந்து விவசாயத்தினைச் செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தினை பெற்றுக்கொள்கிறார்.

நாங்கள் வாழ்ந்த காலப்பகுதிகளில் அநேகமான மக்கள் விவசாயத்தில் வரும் பணத்தினை வைத்து வீடு, காணி, தோட்டம் போன்றவற்றை வாங்கியுள்ளனர். ஆனால், இன்றைய காலகட்டத்தில் விவசாயத்துக்கான பசளைகள் உட்பட ஏனைய கருவிகளின் விலை ஏற்றத்தினாலும் அதிக இலாபத்தினை ஈட்ட முடியாதுள்ளது. அதாவது, இன்றைய காலகட்டத்தில் 7 இலட்சம் செலவு 7 இலட்சம் வரவு என முதலுக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். அன்று 7 இலட்சம் செலவுக்கு 14 இலட்சம் சரிக்குச்சமன் இலாபம் கிடைக்கும் என்றும் கூறினார்.

அத்துடன், புதிய தொழில்நுட்ப முறைகளை உட்புகுத்தி உருளைக்கிழங்கு நடுவது முதல் விற்பனை செய்வது வரையான சில உத்திமுறைகள் பற்றியும் அவர் கூறியிருந்தார்.

அதாவது, உருளைக்கிழங்கை நிலத்தில் நடுவதற்கு முன் கவனிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக அவர் கூறுகையில்,

'கெட்டுப்போன மற்றும் சேதமடைந்த உருளைக்கிழங்குகளை அகற்றி, விதை உருளைக்கிழங்குகளை அளவு அடிப்படையில் தரம் பிரித்து வயலில் நடுவதற்கு முன் அவற்றை கிருமி நீக்கம் செய்ய வேண்டும். 45 முளை கொண்ட விதை உருளைக்கிழங்குகளை தேர்ந்தெடுத்து ஏக்கருக்கு 5 ஆயிரம் கிலோகிராம் உக்கிய சாணகத்தை மண்ணில் இட வேண்டுமெனவும் கூறினார்.

உருளைக்கிழங்குகளை பயிரிடும் நிலத்தினை தயார் செய்தல் முறை பற்றி கூறுகையில்,

குறைந்தபட்சம் ஒரு அடி ஆழத்துக்கு சட்டிக் கலப்பையைக் கொண்டு மண்ணைப் பண்படுத்திய பின் ஒரு வார இடைவெளியின் பின்னர், ஓர் அடி ஆழத்தில் மறுத்து உழுதல் வேண்டும். அத்துடன், குறைந்தபட்சம் ஓர் அடி ஆழத்தில் முதலாவது தூர்வையாக்கள் நடைபெற்று மாட்டுச் சாணத்தை வயலில் பரப்பி, ஓர் அடி ஆழத்தில் இரண்டாவது தூர்வையாக்கள் முறையினை நடைமுறைப்படுத்தலாமென கூறினார்.

நடுகை மேடை தயாரிக்கும் முறை பற்றி கூறுகையில் உருளைக் கிழங்குகளை நடும் மேடையை கிழக்கு மேற்கு திசையில் தயார் செய்து, மேடையின் அகலம் 2 அடி, ஓர் அடி சால் இருக்க வேண்டும்.

வடிகால் அமைப்பினை வயலுக்கு ஏற்ப தயார் செய்து, பிரதான வடிகால் அகலம் 1.5 அடி, துணை வடிகால் ஓர் அடி அகலமாகவும் ஓர் அடி ஆழமாகவும் இருக்க வேண்டும்.

அத்துடன், மூடுபடை படலம் இடுவதற்கு முன் அனைத்து சொட்டு நீர் உமிழ்பான்களும் சரியாக வேலை செய்வதை உறுதி செய்தல் வேண்டும். சொட்டு உமிழ்ப்பான் துளைகள் மேல் நோக்கி இருப்பதை உறுதிப்படுத்தி மூடுபடை படலத்தை சமச்சீராக விரித்து, காற்று அதை தூக்கி செல்லாதவாறு மூடுபடை விளிம்புகளை இறுக்கமாக நிலைப்படுத்தல் வேண்டும். ஜிக்ஜாக் நுட்பங்களின்படி தயாரிக்கப்பட்ட அளவுகோலை பயன்படுத்தி துளையை இடுதல் வேண்டும். அத்துடன், விசைக்கு இடையே ஓர் அடி இடைவெளியும் செடிக்குள் ஓர் அடி இடைவெளியும் பேணப்பட வேண்டும். அவ்வாறு நடுகை செய்யப்படும் பயிர் அடர்த்தி 14,700 - 15,000 இருக்குமெனக் கூறினார்.







உருளைக்கிழங்கு விதையின் நடுகை நுட்பங்கள் பற்றிக் கேட்டபோது,

விதை உருளைக்கிழங்கிலிருந்து அதிகப்படியான முளை வளர்ச்சியை அகற்றிய பின் பருமனுக்கு ஏற்ப தரம் பிரிக்கப்பட்டு நடுகை குழிகளை கப்டான் மூலம் பரிகரணம் செய்து விதையை 4 முதல் 5 அங்குல ஆழத்தில் நட வேண்டும். முக்கோண முறையில் சொட்டு நீர்ப்பாசனத் தொகுதி பொருத்தப்பட்டு நீர்ப்பாசனம் செய்து, மேடையில் 2 நாடாக்கள் பொருத்தப்பட்டு வாரம் 2 முறை நீர் பாய்ச்ச வேண்டும். இப்பயிர்ச் செய்கைக் காலத்தில் ஒரு முறை களை எடுப்பது போதுமானதாக இருக்கும்.

கல்சியம் படிவதை தவிர்க்க வாரத்திற்கு 2 முறை பொஸ்பரிக் அமிலம் பயன்படுத்தி, நுண் போசனைக் குறைபாடுகள் ஏதேனும் தென்பட்டால் நுண்ணூட்டச் சத்தைப் பயன்படுத்த வேண்டும். சீரான ஓட்ட விகிதத்தை பேணுவதற்கு பசளைப் பாசன அமைப்பின் பராமரிப்பு மிகவும் முக்கியமானதெனக் கூறினார்.

நாற்றுமேடை முகாமைத்துவம் பற்றி கேட்டபோது,

விதைக் கிழங்குகள் சேமித்து வைக்கும் பகுதி உலர்ந்த மணல் மண்ணால் பரப்பப்பட்டு அழுகலை தவிர்ப்பதற்கு ஹோமை தூளை விதைக் கிழங்குடன் கலந்து 2 அல்லது 3 விதை உருளைக்கிழங்கு தடிமனான அடுக்கை பேணி சாக்குகளால் மூடி வைத்தல் வேண்டும். அத்துடன் நாற்றுமேடையை உன்னிப்பாகக் கண்காணித்து தேவைப்பட்டால் 2 அல்லது 3 மணி நேரம் திறந்து மூட வேண்டும். பூச்சி மற்றும் நோய் தாக்கத்தின் அளவை தெரிந்து,பொருளாதார தாங்குதிறன் மட்டத்தை விட அதிகமாயின் இரசாயனப் பீடைநாசினிகளை விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசின் அடிப்படையில் பாவிக்க வேண்டுமெனக் கூறினார்.

உலக வங்கித் திட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களம் மூலம் ஒவ்வொரு விவசாயிகளின் மத்தியிலும் விவசாயத்தில் புதிய தொழில்நுட்பத்தினைப் புகுத்தி புதிய வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதாவது, விவசாயிகளிற்கு பைப் லைன் உதவியுடன் 34,000 பெறுமதியான கிழங்கை 13,000 ரூபாபடி உலக வங்கி திட்டத்தின் கீழ் பெறுவதற்கு விவசாயத் திணைக்களம் உதவி செய்கின்றது.

அத்துடன், ஆரம்ப காலங்களில் தண்ணீரை காண் உருவாக்கி இறைத்தனர். ஆனால், இன்றைய புதிய தொழில்நுட்பத்தின் மூலம் தண்ணீரை மீதப்படுத்துவதற்காக சொட்டு நீர்ப்பாசன முறைகள் மூலம் ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு லீற்றர் தண்ணீர் என பயிர்களிற்குப் பாய்ச்சப்படுகிறது.

மேலும், விவசாயத் திணைக்களம் மூலம் விவசாயப் பயிற்சி நிலையங்களால் பயிற்சிகள் நடாத்துதல், வெளிநாட்டிலிருந்து விவசாயத்தினைப் பற்றி அறிந்தவர்களை வரவழைத்து விவசாயத்தினைப் புதிய தொழில்நுட்பத்துடன் செய்யும் நுட்பங்களை விவசாயிகளுக்கு கூறுவதுடன், அது தொடர்பான புத்தகங்களும் வழங்கப்படுகின்றன.

இவ்வாறாக, விவசாயிகள் மத்தியில் புதிய தொழில்நுட்ப முறைகள் முன்னெடுக்கப்படுவதால் ஒப்பீட்டு ரீதியில் முன்னையதை விட அதிக விளைச்சல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆளணிச் செலவினைக் குறைக்கிறது போன்ற கருத்துக்கள் நிலவுகின்றது. ஆனால், விவசாயிகள் மத்தியில் இப்புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை விவசாய விருத்திச் செயற்பாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டாலும் அதனால் பாதிப்புக்களும் இருக்கத்தான் செய்கின்றன என எத்தனைபேருக்குத் தெரியும்?

அதாவது, இத்தகைய கூலித் தொழிலையே நம்பி வாழ்ந்தவர்கள் இன்று தங்களது வாழ்க்கைச் செலவினைப் பூர்த்தி செய்வதில் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றார்கள், எமது மண் வளங்கள் பாதிக்கப்படுகின்றன போன்ற தீமைகளும் நன்மைகள் மத்தியில் இலைமறைகாயாக இருக்கத்தான் செய்கின்றன.



**ப.சிவதர்சினி...**
விவசாய விரிவாக்க கற்கைகளுக்கான பட்டப் பின்படிப்பு, பேராதனைப் பல்கலைக்கழகம்.

# மூன்று வேளை உணவு, சலுகைகளை பெறும் துறைமுக ஊழியர்களே இன்று ஆர்ப்பாட்டம்

## 1,71,000 சம்பளம் பெறும் இவர்களே வரியை எதிர்க்கின்றனர்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஒரு இலட்சத்து 71 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சம்பளம், மூன்று வேளை உணவு மற்றும் சலுகைகளைப் பெற்று வரும் துறைமுக ஊழியர்களே வரி அதிகரிப்பு தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாகவும், இதனை ஒருபோதும் ஏற்க முடியாதெனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த முறை இவ்வாறு துறைமுக ஊழியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டதால், இலங்கைக்கு வருகை தந்த 17 கப்பல்கள் வேறு நாடுகளை நோக்கிச் சென்றன. இதனால் நாட்டுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது. அந்தக் கப்பல்களை மீளக் கொண்டு வருவதற்கு நாம் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டோம். எனினும் அவற்றில் சில கப்பல்களே மீண்டும் நாட்.டுக்கு வருகை தந்தன. தொடர்ச்சியான நட்டத்தை தவிர்த்து தற்போது துறைமுக அதிகார சபை 15 பில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது. இந்த இலாபத்தை தொடர்ந்து தக்க வைக்கும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.



இத்தகைய சந்தர்ப்பத்தில் மீண்டும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை நடத்தி, அத்துறையில் மீண்டும் நட்டம் ஏற்பட இடமளிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், எதிர்க்கட்சி எம். பி துஷார இந்துனில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

துறைமுகம் போன்ற துறைகளுக்கு ஆர்ப்பாட்டம், போராட்டங்கள் சற்றும் பொருந்தாது. எமக்கான வருமானத்தை தடுத்து நிறுத்துவதற்கு இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளின் துறைமுகங்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றன. இத்தகைய போராட்டங்கள் அதற்கு வாய்ப்பளித்து விடும் என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டியுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்கங்களுடன் நான் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களை பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம். அந்த வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானங்களை மாற்ற முடியாது. இதுபற்றி, அவர்களிடம் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

துஷார இந்துனில் எம்பி தமது கேள்வியின் போது, துறைமுகத்தின் கனியங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து துறைமுக ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுவதாகவும் சபையில் தெரிவித்தார்.

எனினும் அதற்கு பதில் அளித்த அமைச்சர் அவ்வாறில்லை. அவர்கள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதாகவும் தெளிவுபடுத்தினார்.

# தவக்கால சிந்தனை



## உதவுதலின் மகத்துவம்

(லூக்கா 16: 19 – 31)

தவக்காலத்தில் இரண்டாம் வாரத்தில் பயணிக்கின்றோம்.

வாழ்வென்பது செல்வத்திலும் பணத்திலுமே தங்கியுள்ளது என்கிற வாழ்க்கைச் சித்தாந்தத்தில் தங்கியுள்ள தற்போதைய காலத்தில் பயணம் செய்கிறோம்.

பணமுள்ளவன் மதிக்கப்படுகிறான். ஏழை உதறித் தள்ளப்படுகிறான். இதுவே இன்றைய யதார்த்தமும்கூட. இன்றைய தினத்துக்கான நற்செய்தியானது, ஏழையான இலாசர் மற்றும் பணக்காரன் இவர்களின் உவமையினூடாக அன்றைய இயேசுவின் சமூகத்தில் ஏழைகள் எவ்வாறு நடத்தப் பெற்றார்கள் என்பதனை வெகுதுலாம்பரமாகப் படம்பிடித்துக் காண்பிக்கிறது.

பணம் படைத்தவன் தனக்கு அனைத்தும் உண்டு என்கிற மமதையிலும், செருக்கிலும் வாழ்கிறான். தன் வீட்டின் அண்டையில் கிடக்கின்ற ஏழையின் அழுகுரலை கண்டுகொள்ள மறுக்கிறான். அது மட்டுமல்லாது அத்தகையவர்களை வெறுக்கிறான். அவர்களின் கண்ணீரைத் துடைக்க முன்வரவுமில்லை.

ஆயினும் அவனது முடிவு எவ்வாறு நிறைவுற்றது என்பதனையும், இலாசரின் வாழ்வில் இறைவனின் அருட்கரம் எவ்வாறு செயலாற்றியது என்பதனையும் காண்பிக்கிறது.

இன்றும் இந்நிலை தொடர்வதைக் காண்கிறோம். ஏழைகள் உண்ண உணவின்றியும் உடுத்த உடையின்றியும் உறைய உறைவிடமின்றியும் தவிப்பதைக் காண்கிறோம். அவர்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றவே இறைவனே பணம் படைத்தோர் பலரைப் படைத்துள்ளார் என்பதனை மறந்துவிடக்கூடாது.

உள்ளவர்கள் இல்லாதவர்களுடன் பகிர வேண்டியதே வாழ்வின் யதார்த்தமாகும். அதனைச் செய்கிறபோது தவக்காலம் எமது வாழ்வில் வசந்தகாலமாகும்.

அருட்தந்தை நவாஜி...



சீன எக்ஸிம் வங்கியினால் வழங்கப்பட்ட நிதி உத்தரவாதக் கடிதத்தை பிரதி சீனத் தூதுவர் ஹு வெய், நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தனவிடம் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் முன்னிலையில் உத்தியோகபூர்வமாக கையளித்தபோது..

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் மகளிர் தின நிகழ்வு

SLMMF

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச பெண்கள் தின நிகழ்வு "கிழக்கு மற்றும் மேற்கில் பெண்களின் உரிமைகளும், மதிப்புகளும்" எனும் தொனிப் பொருளில் எதிர்வரும் (12) ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3:30 க்கு கொழும்பு 07, இல 24, ஹோர்டன் பிளேஸில் உள்ள லக்ஷ்மன் கதிர்காமர் மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீ இப்திகார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னாள் தலைவி டாக்டர் தீபிகா உடகம, கொழும்பு பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பரீனா றுசைக், சட்டத்தரணி சிவஸ்திகா அருலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

ஈரான் இஸ்லாமிய குடியரசிலிருந்து வருகை தந்திருக்கும் கலாநிதி ஸஹேரேஹ்

06



மஹிந்த தலைமையில் SLPP விசேட கலந்துரையாடல் SLPP முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பில் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளனர். பொருளாதார நெருக்கடி, வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் மற்றும் கட்சியை முன்னோக்கி நகர்த்துவதற்கு எவ்வாறு உதவ முடியும் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

# சிறையிலிருந்து தப்பியோடிய கைதி, துப்பாக்கிச் சூட்டில் பலி

கேகாலை சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய கைதி ஒருவர், துப்பாக்கிச் சூட்டில் உயிரிழிந்துள்ளார். கேகாலை விளக்கமறியல் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்ற கைதியை நோக்கி,நேற்று (08) அதிகாலை 2.45 மணியளவில் சிறைச்சாலை அதிகாரி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டார். இதன்போதே, இவர் உயிரிழந்தார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இவர், கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக கேகாலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் 33 வயதான நபரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த இந்நபர், காணியில் வீழ்ந்து கிடந்தார். இவரை மீட்ட சிறைச்சாலை அதிகாரிகள், கேகாலை வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின்னர் சிகிச்சைப் பலனின்றி இவர், உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 40 வயதுக்கு மேற்பட்டோருக்கு கண் பரிசோதனை அவசியம்

## வருடத்தில் 2 அல்லது 3 முறைகள் பரிசோதிக்கவும்

உலக குளுக்கோமா தினம் மார்ச் 12

உலக குளுக்கோமா தினம் எதிர்வரும் 12 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அனறைய தினம் தொடக்கம் 18ஆம் திகதி வரை தேசிய குளுக்கோமா வாரமும் அனுஷ்டிக்கப்படுகிறது.

"உலகம் பிரகாசமாக உள்ளது உங்கள் பார்வையை காப்பாற்றுங்கள்" எனும் தொனிப் பொருளில் கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் சங்கம், விஷன் 2020 திட்டம் மற்றும் இலங்கை தேசிய கண் வைத்தியசாலை சுகாதார அமைச்சுடன் இணைந்து கருத்தரங்கொன்றை (07) கொழும்பு தேசிய கண் வைத்திய சாலையில் நடத்தியது.

குளுக்கோமா நோய் நிலைமை காரணமாக ஏற்படும் விழிப்புலன் இழப்புத் தன்மையிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை பெற்றுக் கொடுக்கும் நோக்கில்

06

# காத்திரமான நடவடிக்கைகளால் ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரிப்பு

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரசாங்கத்தின் காத்திரமான செயற்பாடுகளே ரூபாவின் பெறுமதி அதிகரிக்க காரணமாகியுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது தவணை நிதி எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நாட்டுக்குக் கிடைக்குமென்றும் அவர் சபையில் நம்பிக்கை வெளியிட்டார்.

வீழ்ச்சியுற்றுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், அதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் அரசாங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.



பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கலால் சட்டவிதிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர்:

சட்டபூர்வமாக அரசாங்கத்துக்கு வரிகளை வழங்கி மேற்கொள்ளப்படும் மதுபான விற்பனையை உறுதிப்படுத்துவதற்காக, அரசாங்கத்தினால் ஸ்டிக்கர் முறையொன்று கடந்த வருடம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த பத்து மாதங்களின் பின்னர் தற்போது ரூபாவின் பெறுமதி மீண்டும் அதிகரித்துச் செல்கின்றது. அரசாங்கத்தின்

06

# கொலைக் குற்றத்தில் தொடர்புற்ற ஐவருக்கு மரண தண்டனை தீர்ப்பு

கேகாலை தேவாலகம கஹல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைத்து நபரொருவரை கொலை செய்த குற்றத்தில், ஐந்து பிரதிவாதிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சீமெந்து கல்லால் தாக்கப்பட்டே குறித்த நபர் உயிரிழந்தார்.

குருவிட்ட ஆராச்சிலாகே தொன் சமிந்த கிறிசாந்த பெரேரா, திக்கெல்ல, கேகாலை முகவரியில் வசிக்கும் வில்கம யந்தெஸ்ஸலாகே வசந்தகுமார, டிகிரா கொட்டுவ, உடபோகல உதுகொட முகவரியில் வசிக்கும் அசங்க பிரதீப்குமார, கரதெடியான தேவாலகமவில் வசிக்கும் கலன்சூரியலாகே கயான் சிந்தக்க கலன்சூரிய, கந்தே கெதர தேவாலகம முகவரியில் வசிக்கும் ஜயலத்கே சுரங்க தர்ஷன ஜயலத் ஆகியோர்களே மரண தண்டனைக்குள்ளாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் வழக்கை விசாரித்த சந்தர்ப்பத்தில் பிரதிவாதிகள் ஐவரும் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தனர். உயர்நீதிமன்ற நீதிபதி ஜயகீ த அல்விஸ் நீதிமன்றத்திற்கு கூறியதாவது, பிரதிவாதிகள் ஐவரும் மனித படுகொலை தொடர்பாக குற்றவாளிகளாக்கப்பட்டுள்ளனர்.

மரண தண்டனை விதிப்பதற்கு முன்னர் ஏதேனும் தெரிவிக்க விரும்புகின்றீர்களா என வினவினார். அவ்வேளையில் பிரதிவாதிகள் அனைவரும் தனித்தனியாக தங்களுக்கு இந்த மரணம் தொடர்பாக எதுவும் தெரியாது எனத் தெரிவித்தனர். பின்னர் உயர் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு தொடர்பாக மேல்முறையீடு செய்ய முடியும்

06


செங்கடகல பினான்ஸ் உங்கள் நிலையான வைப்பிற்கு உயர் வட்டி வீதத்தை வழங்குகின்றது

Est. 1968 செங்கடகல பினான்ஸ் பி எல் சி

55 வருட தொடர்ச்சியான நம்பிக்கை



சிரேஷ்ட நிலையான வைப்பு விகிதங்கள் (60 வயதிற்கு மேல்)

| காலம் | மாதாந்தம் | வ.வ.வீ. | முதிர்வுறும் போது | வ.வ.வீ. |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | | 18.25% | 19.86% |
| 3 மாதங்கள் | | | 18.75% | 20.11% |
| 6 மாதங்கள் | | | 21.00% | 22.10% |
| 9 மாதங்கள் | 20.00% | 20.48% | 22.00% | 22.58% |
| 1 வருடம் | 19.75% | 21.64% | 21.50% | 21.50% |

பொதுவான நிலையான வைப்பு விகிதங்கள்

| காலம் | மாதாந்தம் | வ.வ.வீ. | முதிர்வுறும் போது | வ.வ.வீ. |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | | 18.25% | 19.86% |
| 3 மாதங்கள் | | | 18.75% | 20.11% |
| 6 மாதங்கள் | | | 21.00% | 22.10% |
| 9 மாதங்கள் | 20.00% | 20.48% | 22.00% | 22.58% |
| 1 வருடம் | 19.25% | 21.04% | 21.00% | 21.00% |

"நிபந்தனைகளுக்குட்பட்டது" "வட்டி விதங்கள் மாற்றத்துக்குரியவை"

விபரங்களை அறிய: ஈஷா - 077 3 090 370 ஹர்ஷனி - 077 4 789 212 நிரோஷன் - 076 3 770 932

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தில், ஒரு வைப்புத்தொகையாளருக்கு அதிகபட்சமாக ரூ. 1,100,000 வரை இழப்பீடு வழங்குவதற்கு தகுதியான வைப்புப் பொறுப்புகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

FITCH RATINGS SL BBB+(lka) 'Under Negative Watch'

கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு 29.12.1968. 2011 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் "இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால்" உரிமம் அளிக்கப்பட்டது. நிறுவனப் பதிவு இல. PB 238 PQ
பதிவுபெற்ற அலுவலகம்: இல.267, 2வது மாடி, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: (011) 2 301 301 தொலைநகல்: (011) 2 375 780 மின்னஞ்சல்: info@senfin.com Web: www.senfin.com

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 25ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 16

### குறள் தரும் சிந்தனை



அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு

உடனிருப்போரிடம் அன்பு இல்லாமல், வலிமையான துணையுமில்லாமல், தானும் வலிமையற்றிருக்கும் போது பகையை எப்படி வெல்ல முடியும்?

## நெருக்கடிகள் நீங்குவதற்கான நம்பிக்கை தரும் அறிகுறிகள்

நாடு கடந்த வருட ஆரம்பம் முதல் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. அந்நெருக்கடியில் இருந்து கடந்த வருடம் ஓகஸ்ட் முதல் நாடு படிப்படியாக மீட்சிபெறத் தொடங்கியது. இதற்கு கடந்தாண்டு ஜுலை மாதப் பிற்பகுதியில் நாட்டின் தலைமைப் பதவியை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்த வேலைத்திட்டங்கள் வழிவகுத்துள்ளன.

நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து முழுமையாக மீட்டெடுப்பதற்குத் தேவையான வேலைத்திட்டங்கள் விரிவான அடிப்படையில் தூர நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் பயனாகப் பொருளாதார நெருக்கடி காலத்தில் நாடும் மக்களும் முகம்கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் பெரிதும் நீங்கியுள்ளன. குறிப்பாக எரிவாயு மற்றும் எரிபொருட்களுக்கு நீண்ட வரிசைகளில் காத்திருந்த யுகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அவற்றின் விலைகளும் கட்டம் கட்டமாக குறைக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு பல அத்தியாவசியப் பொருட்களது விலைகளும் கூட குறைவடைந்துள்ளன.

இதேவேளை, நெற்செய்கையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பெரும்போக செய்கை அறுவடை நெல்லை உத்தரவாத விலையில் கொள்வனவு செய்வதற்கு விஷேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மரக்கறிச் செய்கைகளின் அறுவடையிலும் பெரிதும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன் பயனாகச் சந்தையில் மரக்கறி வகைகளின் விலைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உல்லாசப் பயணிகளின் வருகையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க, ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி கடந்த சில தினங்களாகத் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருகின்றது. குறிப்பாக இரண்டொரு வாரங்களுக்குள் டொலரின் பெறுமதி ரூபா 50.00 இற்கு மேல் குறைவடைந்துள்ளது.

இவ்வாறான சூழலில் இலங்கை மத்திய வங்கி ஆளுனர் நந்தலால் வீரசிங்க, 'ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி வீழச்சியடைந்து வருவதால் நாட்டின் பணவீக்கம் வேகமாக வீழ்ச்சியடையும். அதன் பயனாக அடுத்த வாரமளவில் எரிபொருட்களின் விலைகள் குறைவடையும். அது அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களின் விலைகள் குறைவடைய வழிவகை செய்யும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் மக்களின் எதிர்பார்ப்பும் அதுதான். அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலைகள் குறைவடைய வேண்டும் என்பதாகும். அப்போதுதான் பொருளாதார ரீதியில் மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களிலும் நெருக்கடிகளிலும் தளர்வுகள் ஏற்படும்.

இந்நிலையில்தான் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ன, 'எதிர்வரும் ஜுலை மாதத்திற்குள் பஸ் கட்டணத்தில் பயணிகளுக்கு சலுகைகளைப் பெற்றுக்கொடுக்க முடியும்' எனச் செய்தியாளர் மாநாடொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று நள்ளிரவு முதல் பாணின் விலையை குறைப்பதற்கு பேக்கரி உரிமையாளர்கள் சங்கமும், கோதுமை மாவின் விலையை குறைக்க ஷெரண்டீப் மற்றும் பிரிமா நிறுவனமும், சீனியின் விலையைக் குறைப்பதற்கு ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்கள் சங்கமும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அறிவித்துள்ளன.

இந்த அறிவிப்புக்கள், பொருளாதார நெருக்கடியில் இருந்து நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் நாடு மீட்சி பெற்று வருவதையே வெளிப்படுத்தி நிற்கின்றன. இதன் பயனாக மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளன.

அதன் காரணத்தினால் பொருளாதார நெருக்கடிக்கு முன்னரான பொருளாதார நிலையை நாட்டில் ஏற்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதனை ஒவ்வொரு பிரஜையும் தம் பொறுப்பாகவும் கடயைாகவும் கருத வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வரும் நாட்டிற்கு ஆற்ற வேண்டிய பாரிய பங்களிப்பே இது.

இதைவிடுத்து ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் முன்னெடுப்பதன் விளைவாக, நாட்டில் பொருளாதார மீட்சி ஏற்படப் போவதில்லை. ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையவே வழிவகுக்கும். அதன் ஊடாக நாடு மேலும் பின்னடைவுக்கு உள்ளாகும். அதனால் நாடு பொருளாதார பின்னடைவுக்கு உள்ளாகப் பங்களித்த பரம்பரையினர் என வரலாற்றில் பதியப்படக் கூடியவர்களாகும் நிலை ஏற்படும்.

ஆகவே அவ்வாறான நிலைக்கு உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களுக்கு நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஆதரவும் ஒத்துழைப்பும் அளிப்பது இன்றியமையாதது. அதுவே இன்றயை அவசியத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# புற்றுநோய் சிகிச்சைக்கு உதவி வழங்கவென கண்டியில் தன்னார்வத் தொண்டு நிறுவனம்

## மருத்துவர் சியாமளா நடேசனால் ஆரம்பம்

இலங்கையில் புற்றுநோய்ச் சிகிச்சைக்கு தேவைப்படும் உதவிகளை வறிய மக்களுக்கு வழங்கும் நோக்கத்துடன் அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் மருத்துவர் சியாமளா நடேசன், தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் கண்டி, ரீஜன்னர் விடுதியில் நடைபெற்றது. குறிப்பிட்ட புற்றுநோய் சிகிச்சைக்கு உதவி வழங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் இணையத்தளத்தை, மகப்பேற்று மருத்துவ நிபுணர் இந்தர்ஜித் சமரசிங்க தொடக்கி வைத்தார்.

பேராதனை மருத்துவ, பல்மருத்துவ மற்றும் கால்நடை மருத்துவபீட முதல்வர்களுடன் புற்றுநோய்ச் சிகிச்சை மருத்துவர்களும் இந்நிகழ்ச்சியில் சமுகமளித்திருந்திருந்தனர்.

இந்த நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான மருத்துவர் நிரஜ்ஜலா டீ சில்வா தமது வரவேற்புரையில், "இந்த நிறுவனத்தின் நோக்கங்கள் செயல்கள் அனைத்தும் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்கான வாய்ப்பு வசதிகளற்ற ஏழை மக்களுக்கு உதவும் முகமாகவே அமையும்" எனத் தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தை இலங்கையில் ஆரம்பித்திருக்கும் மகப்பேற்று மருத்துவ நிபுணர் திருமதி சியாமளா நடேசனின் கணவர் நோயல் நடேசன் இந்நிகழ்வில் உரையாற்றுகையில், தனது மனைவி சியாமளா சிறிது காலத்திற்கு முன்னர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர். எனினும் விரைவில் குணமாகியதையடுத்து, எங்கள் தாயகத்தில் புற்றுநோயால் பாதிக்கப்படும் ஏழை மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தையே கனவாகக் கொண்டிருந்தார். அந்தக் கனவை நனவாக்குவதற்காக தற்போது இலங்கை வந்து இந்த தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை தொடக்கியிருக்கிறார்" என்றார்.





மருத்துவர் சியாமளா நடேசன் தனதுரையில், புற்றுநோய் தனக்கு வந்த காலத்தில் தான் பெற்ற அனுபவங்களை விளக்கினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய இதர மருத்துவர்கள், எமது மக்களில் பெரும்பாலானவர்கள் வெற்றிலை பாக்கு பாவனையினால் புற்றுநோய்க்கு ஆளாவதாகக் குறிப்பிட்டதுடன், இலங்கையில் விவசாயிகள், மற்றும் தேயிலைத்தோட்டத் தொழிலாளர்களிடம், பாக்குப்பாவனையின் பக்கவிளைவுகள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மிகவும் அவசியமானவை என்றும், புற்றுநோய்க்கான அறிகுறி தென்பட்டதுமே மருத்துவர்களின் ஆலோசனைகளை நாடுவதிலும் மக்கள் ஆர்வம் காண்பிப்பதில்லை எனவும் குறிப்பிட்டனர்.

இந்த நிறுவனத்தின் தொடர் செயற்பாடுகள் புற்றுநோய் சிகிச்சைக்கான மருத்துவர்களோடு இணைந்திருக்கும் என்று இதன் இயக்குனர்கள் தமது கருத்துரையில் தெரிவித்தனர்.

லெ. முருகபூபதி...
அவுஸ்திரேலியா

# வவுனியாவில் எட்டாம் வருடத்தில் தடம் பதிக்கும் அன்னை புவனேஸ்வரி நினைவு அறப்பணிகள்

வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்பவர்கள் கடும் உழைப்பு மற்றும் அந்த நாடுகளின் சமூகச் சூழலில் முழுமையாக மூழ்கி விடுவதுண்டு. இதனால் தங்களது குடும்பத்துடன் கொண்டாடுகின்ற இனிய நிகழ்வுகள் கூட சில வேளைகளில் பாதிப்படைவதுண்டு. இந்த நிலையில் அவர்கள் முன்னர் வாழ்ந்த சமூகத்துடனான தொடர்புகளும் சீராக அமைவதில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். மறுப்பதற்கில்லை.

பல குடும்பங்களில் பிள்ளைகள் அனைவருமே புலம்பெயர்ந்திருப்பதனால் வயோதிப தாய், தந்தையர் அந்திமக் காலத்தில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் அன்பையும் ஆதரவையும் இழந்து தனித்து விடப்படுகின்றார்கள். இவர்கள் அன்புக்காக ஏங்குவதுண்டு. அவசர நேரங்களில் மட்டுமல்லாமல் சாதாரண நிலைமையிலும் உரிய ஆதரவின்றி அவல நிலைமைக்கு ஆளாகியிருப்பதை சாதாரணமாகக் காணக்கூடியதாக உள்ளது.

பிள்ளைகள் அவர்களுக்குத் தேவையான பண உதவியைச் செய்வார்கள். ஆனால் வயோதிபப் பருவத்தில் தமது பிள்ளைகள் அருகில் இல்லததனால், அவர்களுக்குத் தேவையான துணையும் அன்பும் ஆதரவும் இன்றி அவர்கள் தனிமையில் ஏங்கித் தவிக்க நேர்ந்து விடுகின்றது.

புலம்பெயர்ந்துள்ளவர்களின் குடும்ப நிலைமை இவ்வாறிருக்கும்போது, அவர்கள் வாழ்ந்த சமூகத்துடனான தொடர்புகளை மேற்கொள்ள முடியாதல்லவா? ஆனால் இதற்கு விதிவிலக்கானவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். சமூகத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக, அவர்கள் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருவதையும் காண முடிகின்றது. ஆனால் இந்த சமூகப் பணியானது பெருமளவில் ஒரு கட்டமைப்பின் கீழ் செயற்படுவதில்லை.





இத்தகைய பின்னணியில் வவுனியா குடியிருப்பைச் சொந்த இடமாகக் கொண்ட 'புவனேஸ்வரி அக்கா' என்று அயலவர்களாலும் சமூகத்தில் உள்ளவர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்ட அன்னை புவனேஸ்வரியின் நினைவாக ஆண்டுதோறும் அவரது பிள்ளைகள் பல லட்சம் ரூபா செலவிலான அறப்பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

வவுனியா குடியிருப்பு வவுனியா நகரத்தை அண்டியதொரு பாரம்பரிய புராதன கிராமமாகும். அங்கு வாழ்பவர்கள் ஒருவருக்கு ஒருவர் பற்றுடையவர்களாகவும், அன்பைப் பொழிபவர்களாகவும் சமூகப் பற்றுடையவர்களாகவும் திகழ்கின்றனர். அத்தகைய சூழலில் வந்துதித்த அன்னை புவனேஸ்வரியின் பிள்ளைகள் மறைந்த தமது அன்னையில் பெயரில் வவுனியா பூந்தோட்டத்தில் ஒரு நினைவிடத்தை அமைத்து அறப்பணிகளை கட்டுக்கோப்புடன் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்த வகையில் எட்டாவது ஆண்டாக அன்னை புவனேஸ்வரியின் நினைவாக அறப்பணிகள் மார்ச் மாதம் முதலாம் திகதி இடம்பெற்றன. இந்த நிகழ்வில் 400 ஏழை மாணவர்களுக்குப் பெறுமதிமிக்க கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அங்கு இடம்பெற்ற வருடாந்த வயோதிபர்களுக்கான மருத்துவ முகாமில் 200 பேர் மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

(07ஆம் பக்கம் பார்க்க)





பி.மாணிக்கவாசகம்...

# டயலொக் ஆசிஆட்டா ACCA வழங்கிய நிலைத்தன்மை அறிக்கையிடல் விருதுகள்

'நிலைத்தன்மை அறிக்கையிடல் விருதுகள் – 2022' இற்காக ACCA வினால் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நிறுவனம் வெற்றியாளராகவும், பொதுச் சேவைகள் பிரிவில் வெற்றியாளராகவும் அங்கீகரித்து கௌரவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான விருதுகள் தொடர்பாக பல்வேறு தொழில்துறைகளைச் சார்ந்த நிறுவனங்களிடமிருந்து கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவிலான ஏராளமான விண்ணப்பங்களை பெற்றிருந்தபோதிலும், அவற்றுள் டயலொக் நிறுவனமே அதன் விரிவான மற்றும் நன்கு கட்டமைக்கப்பட்ட நிலைத்தன்மை அறிக்கைக்காக அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி டயலொக் நிறுவனமானது, நாட்டின் முதல் மூலோபாயம், நிலைத்தன்மை சிக்கல்களின் பொருள் பற்றிய தெளிவான புரிதல் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான உறுதியான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்காக நடுவர் குழுவால் பாராட்டப்பட்டது.

"ACCA இடமிருந்து இந்த அங்கீகாரத்தைப் பெறுவதில் நாங்கள் பெருமையடைகிறோம், இது நிலைத்தன்மைக்கான எங்கள் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறது" என டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் "நிலைத்தன்மை என்பது எங்கள் வணிக மாதிரியின் மையப் பொருளாக அமைந்துள்ளது, மற்றும் நாம் செய்யும் எல்லா விடயங்களிலும் அதுவே நமது நோக்காக உட்பொதிந்துள்ளது. நமது பங்குதாரர்கள் அனைவருக்கும் நிலையான எதிர்காலத்தை நோக்கி நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம்" எனவும் குறிப்பிட்டார்.



இடமிருந்து வலமாக: டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் டிஜிட்டல் உள்ளடக்க நிபுணர் திஷாரா பெரேரா, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் இடர் மற்றும் இணக்க பிரிவு குழும தலைவர் அசங்க பிரியதர்ஷன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும தலைமை நிதி அதிகாரி Hong Zhou Wong, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் நிலைத்தன்மை நிறைவேற்று பிரிவு நிபுணர் அஷினி பொதுபிட்டிய, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழு நிறுவன திட்டமிடல் மற்றும் வியூகத்தின் துணைத் தலைவர் முனேஷ் டேவிட், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் சமூக புதுமை பிரிவு சிரேஷ்ட முகாமையாளர் அசித் டி சில்வா, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் நிலைத்தன்மை நிறைவேற்று பிரிவு நிபுணர் ரக்சிகா நெடுமாறன்.

2004ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் வழங்கப்பட்டு வருகின்ற ACCA நிலைத்தன்மை அறிக்கையிடல் விருதானது, வணிக உத்தி, பெருநிறுவன நிர்வாகம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றுக்கு இடையேயான வலுவான தொடர்பை மேம்படுத்தி, நிலைத்தன்மை அறிக்கையிடலில் சிறந்து விளங்கும் நிறுவனங்களை அங்கீகரித்து விருது வழங்கி கௌரவித்து வருகின்றது. இந்த விருதுகள் அறிக்கையிடல் மற்றும் நடைமுறைகளில் நிலைத்தன்மைக்கு உறுதி பூண்டுள்ள நிறுவனங்களை ஊக்குவித்து அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகநாடுகளின் தலைவர்கள் வரிசையில் முன்னணியில் திகழும் நரேந்திர மோடி



## சர்வதேச புகழ் மற்றும் கவர்ச்சியான தலைமைக்கு நிகராக வேறெவரும் இல்லை!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் புகழ் மற்றும் கவர்ச்சியான தலைமைக்கு எல்லையே இல்லை. உள்நாட்டில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் ஏறக்குறைய ஒரு தசாப்த காலமாக அவரது அபிமானிகள் மற்றும் இந்திய நலன்விரும்பிகள் அவரது தலைமையின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

இவ்வாறு கூறுகின்றார்கள் உலகெங்கும் வாழ்கின்ற இந்திய அபிமானிகள்.

'மோர்னிங் கன்சல்ட்' என்ற உலகப் புகழ்பெற்ற பத்திரிகை சமீபத்தில் வெளியிட்டுள்ள உலகளாவிய தலைவர்கள் தரவரிசையில், பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவர் உலகின் மிகவும் பிரபலமான தலைவர், அதிகபட்ச ஒப்புதல் மதிப்பீடுகள் 78 வீதம் என்று அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

பிரபலம் மற்றும் ஒப்புதல் தரவரிசையில் பிரதமர் நரேந்திர மோடிக்கு நிகரான வேறு எந்தத் தலைவரும் இல்லை. அவரது நெருங்கிய போட்டியாளர் மெக்சிகோ ஜனாதிபதி லோபஸ் ஒப்ராடோர் ஆவார், ஆனால் வெறும் 61 வீதம் ஒப்புதல் மதிப்பீடுகளுடன் அவர் இந்திய எதிரணியுடன் ஒப்பிடுகையில் தொலைதூர இரண்டாவது இடத்தில் இருக்கிறார்.

அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் 57%, பிரேசில் ஜனாதிபதி லுலா டா சில்வா 55% மற்றும் இத்தாலிய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி 54% ஒப்புதல் மதிப்பீடுகளுடன் தங்கள் நாட்டு மக்களிடமிருந்து நல்ல அங்கீகாரத்தையும் ஏற்றுக்கொள்ளலையும் அனுபவிக்கும் மற்ற உலகத் தலைவர்கள் வரிசையில் உள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பட்டியலில் மிக முக்கியமான பெயராக இருந்தாலும், முதல் ஐந்து உலகத் தலைவர்களில் இடம்பெறத் தவறி விட்டார். அமெரிக்க குடிமக்களிடமிருந்து வெறும் 42% ஒப்புதலுடன், உலகின் மிக சக்திவாய்ந்த ஜனநாயகத்தின் தலைவராக இருந்த போதிலும், பைடன் புகழ் அட்டவணையில் இடம்பெறத் தவறிவிட்டார்.

'மோர்னிங் கன்சல்ட்' என்பது அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட அரசியல் உளவுத்துறை நிறுவனமாகும், இது அவுஸ்திரேலியா, ஜெர்மனி, இந்தியா, நெதர்லாந்து, நோர்வே, போலந்து, அமெரிக்கா மற்றும் பல நாடுகளில் உள்ள அரசாங்கத் தலைவர்களின் ஒப்புதல் மதிப்பீடுகளை தொடர்ந்து கண்காணித்து வருவதுடன் அவர்களின் புகழ்ப் பாதையை வரைபடமாக்குகிறது.

சமீபத்தில் ஒரு உயர்மட்ட உச்சிமாநாட்டின் போது இத்தாலியப் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியிடம் இருந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு பாராட்டுக்கள் குவிந்தன என்பது குறிப்பிடத்தக்கது. பிரதமர் நரேந்திர மோடி உலகின் மிகவும் விரும்பப்படும் தலைவர் என்று இத்தாலியப் பிரதமர் கூறினார். இந்தியாவின் வளர்ச்சிக்காக பிரதமர் நரேந்திர மோடி செயற்படுத்தி வருகின்ற சிறப்பான திட்டங்கள் காரணமாகவே அவர் சர்வதேசரீதியில் பாராட்டுப் பெறுகின்ற தலைவராக இருந்து வருகின்றார்.



பிரதமர் நரேந்திர மோடி முன்வைத்த 'துடிப்பான கிராமங்கள்' திட்டத்தின் மூலம் எல்லைக் கிராமங்கள் முழுமையாக மேம்படுத்தப்பட்டு வலிமையான எல்லைக் கிராமங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



'துடிப்பான கிராமங்கள்' திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியாவில் 1400 எல்லையோர கிராமங்கள் கண்டறியப்பட்டு, மத்திய அமைச்சர்கள் எல்லையோரக் கிராமங்களில் ஓர் இரவு தங்கி அங்குள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுப்பார்கள்.

இதற்கிணங்க 'துடிப்பான கிராமங்கள்' திட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய அமைச்சர் ஒருவர் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் இந்திய எல்லையிலுள்ள லடாக்கிற்கு பயணம் மேற்கொண்டார். அங்கு அவர் எல்லைக் கிராமங்களான சாகா பாஸ்சுர், ரெசாங்லா, சுஷுல் உள்ளிட்ட கிராமங்களுக்குச் சென்றிருந்தார்.

கூடாரங்களில் வாழ்ந்து சிறந்த

## உலகப்புகழ் பெற்ற 'மோர்னிங் கன்சல்ட்' பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில் இந்தியப் பிரதமருக்கு 78 வீத மதிப்பெண்!

பஷ்மினா கம்பளி தயாரிக்கும் நாடோடிகளான ரெபோ பழங்குடியினருடன் அமைச்சர் உரையாடினார். அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்தார். மத்திய அரசின் திட்டங்களின் பலன்கள் அவர்களை வந்தடையும் என மக்களுக்கு உறுதியளித்தார்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, அமெரிக்காவில் பிறந்து ஜேர்மனியின் வளர்ந்து வரும் சந்தை நிதி மேலாளர் மார்க் மொபியஸ், பொருளாதார வாய்ப்புடன் இந்தியா முதலாவது முதலீட்டு மாற்றாக இருப்பதாக நம்புகிறார். சீனர்கள் செய்யக் கூடியதை இந்தியாவும் செய்ய முடியும் என்று அவர் நம்புகிறார்.

அதேசமயம், மைக்ரோ சொப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் சமீபத்தில் இந்தியாவின் தலைமைத்துவத்தைப் பாராட்டியுள்ளார்.

"இந்தியா அனைத்திலும் முன்னேற்றம் அடைந்துள்ளது. எந்த நாட்டிலும் இல்லாத வேகமான முன்னேற்றம் இந்தியாவில்தான் உள்ளது. இந்தியாவின் சிறந்த தலைமைத்துவமே இதற்கெல்லாம் காரணம்" என்று பில்கேட்ஸ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

கடுமையான மேக்ரோ பொருளாதார சூழல் மற்றும் மந்தமான உலகப் பொருளாதாரம் இருந்தபோதிலும், இந்தியா ஒரு பிரகாசமான இடமாக உள்ளது என்று குவாண்டம் ஏ.எம்.சி மற்றும் செல்வ மேலாண்மை தளமான குவேராவின் முக்கிய முதலீட்டு மூலோபாய நிபுணர்கள் கூறியுள்ளனர்.

**எஸ். சாரங்கன்...**

# சுவாமி விவேகானந்தரின் வரலாற்று சிறப்புமிக்க இலங்கை விஜயத்தின் 125 ஆண்டுகள் நிறைவு



சுவாமி விவேகானந்தரின் வரலாற்றுச் சிறப்புமிக்க இலங்கை விஜயத்தின் 125 வது ஆண்டு நிறைவின் ஓராண்டு தொடர்விழாவின் நிறைவுநாள் நிகழ்வு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் ஸ்ரீமத்சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் அவர்களின் ஏற்பாட்டில் கடந்த திங்களன்று நடைபெற்றது.

இலங்கைக்கான இராமகிருஷ்ண மிஷன் கிளைத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மஹராஜ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் வளாகத்திலிருந்து பிரதம அதிதிகள் உள்ளிட்ட அதிதிகளுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. பாண்ட் வாத்திய இசை முழங்க வரவேற்பு வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து, சுவாமி விபுலானந்த அடிகளாரின் சமாதியில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் பிரதான அரங்க நிகழ்வுகள் சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இடம்பெற்றன.

வரவேற்புரை, வரவேற்பு நடனம், தலைமையுரையினை தொடர்ந்து 'சுவாமி விவேகானந்தரின் இலங்கைக்கான விஜயம்' எனும் தலைப்பில் மாணவர்களினால் கூத்து அரங்கேற்றப்பட்டதுடன், சுவாமி விவேகானந்தரின் இலங்கைக்கான விஜயத்தின் 125 ஆவது நிறைவு தொடர்விழா கொண்டாட்டம் எனும் தலைப்பில் கானொளிக்கண்காட்சி நடைபெற்றது. கலார்ப்பனா நாட்டிய நிலையத்தின் அழகிய கண்கவர் நடனம் அரங்கேற்றப்பட்டதுடன், பிரதம அதிதி உரை இடம்பெற்றதனைத் தொடர்ந்து, விழிபுலன் அற்றவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் சமூக நல உதவித்திட்டங்கள் என்பன அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.





## மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனில் பிரமாண்டமான நிகழ்வு

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவி பொதுச்செயலாளர் ஸ்ரீமத் சுவாமி சுரார்ச்சிதானந்தஜி மஹராஜ் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்திருந்தன.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக உலகளாவிய இராமகிருஷ்னமிஷன் மற்றும் மடங்கள், இந்தியா பேலூர் தலைமையகத்தின் உதவி பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சத்யேஷானந்தஜி மஹராஜ் அவர்களும் சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி. கலாமதி பத்மராஜாவும் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தியாகராஜா சரவணபவனும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அத்தோடு இராமகிருஷ்ணமிஷன் வளாகத்தில் பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சி மையம் அன்றைய தினத்தில் திறந்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் காசிமின் கல்விச் சேவைகளை சித்தரிக்கும் சிறப்பு மலர்

முப்பத்தேழு வருடகால கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற, முன்னாள் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளரும், இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்_1 சிரேஷ்ட அதிகாரியுமான மௌலவி ஏ.எல்.எம்.காசிம் அவர்களின் வாழ்வு மற்றும் பணிகளைச் சித்தரிக்கும் 'அபிமானம்' சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது.



அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகம் இதனை வெளியிட்டுள்ளது. பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஏ.ஜி.பஸ்மில் தலைமையில் வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில், வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ், பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் உட்பட கல்விப் பணிப்பாளர்கள், சிரேஷ்ட அதிகாரிகள், அதிபர்கள் ஆகியோரின் வாழ்த்துரைகளுடன் அபிமானம் மலர் வெளிவந்துள்ளது.

மலர்க்குழு இணைப்பாளர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சித்தி பாத்திமா மற்றும் மலர்க்குழு உறுப்பினர்களான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.பாயிஸ், ஆசிரிய ஆலோசகர்கள் எஸ்.எல்.மன்சூர், ஏ.எஸ்.நஜாத் அஹமட் ஆகியோர் அபிமானம் சிறப்பு மலரை வலயக் கல்விப் பணிப்பாளர் றஹ்மத்துல்லாஹ்வுக்கு வழங்கி வெளியிட்டு வைத்தனர். அதனைத் தொடர்ந்து சிறப்பு மலர் ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். காசிமுக்கு கையளிக்கப்பட்டது. தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் தனது வாழ்த்துரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு சமூகம் எப்படியெல்லாம் மேன்மையடைய வேண்டுமோ அப்படியெல்லாம் மேன்மையடைய கல்வி எனும் ஆதாரமூலம் அவசியம். அத்தனை மகிமை பொருந்திய கல்விக்கு உயிர்கொடுத்து உரமானோர் காலத்தின் மடியில் எப்போதும் பேசப்படுவர். அந்தவகையில் கிழக்கு பிராந்தியத்தின் அக்கரைப்பற்று கல்வி வலயப் பயணத்தில் பல மைல்கற்களை எய்திய வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம் அவர்களது பணிக் காலம், சந்ததிகள் மாறினாலும் நிச்சம் பேசப்படும்."

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் உட்பட பலரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

"நிறைந்த கல்வித்துறைசார் அனுபவமும், நிர்வாகத் திறனும், தற்துணிவோடு செயலாற்றும் ஆளுமைப் பண்பும் ஏ.எல்.எம்.காசிம் அவர்களுக்கென்றே அமையப்பெற்ற தனித்துவப் பண்புகளாகும். நாம் அவரோடு கடமையற்றிய காலம் தொடக்கம் எவருடனும் மனம்நோகாது நடந்து கொண்டதுடன், புன்சிரிப்போடு எல்லோருடனும் பழகும் சுபாவம் அவரின் நட்பிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்" என்று கிழக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி என்.புள்ளநாயகம் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் கூறுகையில், ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் காசிமின் கல்விப் பணிகள், சேவைகளை நூலுருவில் வெளிக்கொணர்ந்தமை பாராட்டுக்குரியது. 100 வருடங்களுக்குப் பின்னரும் பயனளிக்கும் முயற்சி இதுவாகும்" என்றார்.


"பின்தங்கிய பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்திக்காகவும், ஏழை மாணவர்களின் கல்விக்காகவும் தனது 37 வருட சேவைக்காலத்தில் அதிகம் உதவக் கிடைத்தமை வாழ்வில் கிடைத்த பேறாகும். நல்லதையே சிந்தித்தேன், நல்லதையே செய்தேன். இறுதிவரை சிறப்பாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி ஓய்வுபெற்றேன். அதற்குக் கிடைத்த பரிசாக அபிமானம் சிறப்பு மலரைக் காண்கின்றேன்" என்று ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம் பேசுகையில் கூறினார்.

பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.றிம்ஸான், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# சபரிமலையில் 133 அடி உயரமான ஐயப்பன் சிலை

மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமான சபரிமலை ஐயப்பனுக்கு கோவிலுக்கு அருகே 133 அடி உயரச் சிலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சிலைக்கு உள்ளே அய்யன் ஐயப்பனுக்காக ஒரு அரும்பொருள் காட்சியகமும் அமைக்கப்படவிருக்கிறது.



அய்யனின் மகிமையை உணர்ந்து ஆண்டுதோறும் புதிதாக கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. பக்தியுடன் இந்த புனிதத் தலத்தில் ஒரு முறை கால் வைத்தாலும் போதும், அய்யனின் கருணையை நீங்கள் பெறலாம் என்பது நம்பிக்கை.

பத்தனம்திட்டாவில் உள்ள சுத்திபாரா மலையின் உச்சியில் மகாதேவர் கோவில் உள்ளது. இங்கு ரூ. 25 கோடி செலவில் 133 அடி உயர ஐயப்பன் சிலை அமைக்க கோயில் அறக்கட்டளை முடிவு செய்துள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 400 அடி உயரத்தில் உள்ள இந்த மலையில் 66 மீட்டர் சுற்றளவு கொண்ட சிலை அமைக்கப்படவுள்ளது. 35 கிலோமீட்டர் தூரத்தில் இருந்து பார்த்தால் கூட சிலை தெரியும். ஐயப்பன் பிறந்த பந்தளத்தில் இருந்தே கூட சிலையைப் பார்க்கலாம்.

சபரிமலை ஐயப்பனின் பிறப்பு துவங்கி, வாழ்க்கை வரலாற்றை விளக்கம் அருங்காட்சியகம் ஒன்றும் இங்கு அமைக்கப்பட உள்ளது. இதில், அய்யப்பன், சாஸ்தாவின் நண்பர் வாவர், பந்தளம் அரண்மனை, சபரிமலை, பம்பை, ஆருத நதிகளின் வரலாறு தத்ரூபமாக அமைக்கப்படும். சிலை அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு ஐந்தாண்டுகளில் பணிகள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் ஐந்தாண்டுகளுக்கு பிறகு மிக உயரமான ஐயப்பன் சிலையையும் அதற்கு உள்ளே இருக்கும் நூதனசாலையையும் காணலாம் என்று கோவில் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அய்யப்பன் சிலை அமைக்க எண்ணிய சுட்டிப்பாரா மலையில் இராமரும் சீதையும் சில காலம் தங்கியிருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. ஐயப்பன் யோக நிலையில் அமர்ந்திருப்பது போல் சிலை இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மிகப்பெரிய ஐயப்பன் சிலையை தரிசிக்க ஐயப்ப பக்தர்கள் ஆர்வமாக காத்திருக்கிறார்கள்.

## அத்தியாவசிய பொருட்களின்...

தெரிவித்துள்ளது. இதேவேளை, பாண் தற்போது, 160, 170 மற்றும் 180 ரூபா ஆகிய வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக அண்மையில் வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்திருந்தது.அதேபோன்றுநேற்று (8) முதல் அமுலாகும் வகையில் கோதுமை மாவின் விலையை குறைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பிறீமா மற்றும் செரண்டிப் ஆகிய நிறுவனங்கள் கோதுமை மாவின் விலையை 15 ரூபாவினால் குறைக்க தீர்மானித்துள்ளன.

அமெரிக்க டொலரின் பெறுமதி இவ்வாறு நாளுக்கு நாள் குறைவடைவதன் காரணமாக ஏற்றுமதியாளர்கள் பில்லியன் ரூபாய் அளவில் நட்டம் அடைவதாக அத்தியாவசிய பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன நேற்று தெரிவித்தார். கடந்த மூன்று நாட்களுக்குள் டொலரின் பெறுமதி 50 ரூபாய் குறைந்துள்ளதோடு அது நூற்றுக்கு பத்து தொடக்கம் பதினைந்து வீத டொலரின் பெறுமதி குறைவு என அவர் தெரிவித்தார்.

ரூபாவுக்கு இணைந்ததாக டொலரை நிலையாக வைத்திருக்க மத்திய வங்கி தலையிட வேண்டுமெனவும் இந்த நிலைமை ஏற்றுமதியாளர்கள்,இறக்குமதியாளர்கள், சாதாரண மொத்த வர்த்தகர்கள் போன்று அனைத்து வர்த்தகர்களுக்கும் தாங்க முடியாதது எனவும் அவர் தெரிவித்தார்.

## மஹிந்தவிற்கு...

மாதம் 20 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையில் இவ்வாறு வெளிநாட்டு பயணத் தடை நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஜூலை, டிசம்பர் மாதங்களில்...

தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 27/2 இன் கீழ், எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

2023 ஜனவரி முதலாம் திகதி முதல் நட்டமடையும் அரச நிறுவனங்களுக்காக நிதி ஒதுக்க முடியாதென திறைசேரி சகல அரச நிறுவனங்களுக்கும் உத்தியோகப்பூர்வமாக அறிவித்ததையடுத்தே, மின்சார சபை மின்கட்டணத்தை அதிகரிக்கும் பரிந்துரையை இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு முன்வைத்தது. அரசியல் மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக அந்த ஆணைக் குழுவின் தலைவர் மின்கட்டண அதிகரிப்புக்கு இடமளிக்கவில்லை.

பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தமது தனிப்பட்ட மற்றும் அரசியல் நோக்கங்களினால் மின்சார சபைக்கும் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கும் இடையில் தேவையற்ற முரண்பாடுகளைத் தோற்றுவித்தார்.

நாட்டின் மின் உற்பத்தி தொடர்பில் கூறுவதானால் இந்த வருடத்தில் 16,520 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

நீர்மின் உற்பத்தி மூலம் 27 வீத மின்சாரத்தையும் அரசாங்கத்தின் மின் உற்பத்தி நிலையங்களூடாக 13 வீத மின்சாரத்தையும் நிலக்கரியூடாக 28 வீதம், காற்றாலையூடாக 02 வீதம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தியினால் 13 வீதமான மின்சாரத்தையும் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்து.

நூறு வீதத்திற்கு மேல் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுவது அடிப்படையற்றதாகும்.

வீட்டு மின்பாவனைக்கான மின்கட்டணம் 87 வீதத்தாலும்,மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின்கட்டணம் 67 வீதத்தாலும்,பொது சேவைகளுக்கான மின்கட்டணம் 55 வீதத்தாலும்,அரச நிறுவனங்களுக்கான மின்கட்டணம் 62 வீதத்தாலும், கைத்தொழில் துறைகளுக்கான மின்கட்டணம் 35 வீதத்தாலும்,ஹோட்டல் சேவைத்துறைக்கான மின்கட்டணம் 66 வீதத்தாலும், விவசாயத்துறைக்கான மின்கட்டணம் 49 வீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பது போல் 30 முதல் 90 வரையான அலகு மின்சாரத்தை உபயோகிக்கும் பாவனையாளர்களுக்கான மின்கட்டணம் நூற்றுக்கணக்கில் அதிகரிக்கப்படவில்லை. 30 முதல் 90 வரையான மின் அலகுகளை பாவிக்கும் பாவனையாளர்கள் எவரும் நாட்டில் கிடையாது.

மின்சார சபை எதிர்கொண்டு வரும் நட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்ல முடியாது என்ற காரணத்தினாலேயே மின் கட்டண அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டது. அந்த வகையில் இந்த ஆண்டில் 287 பில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது

மின்சார சபை கடந்த 2018 ஆம் ஆண்டு 30.3 பில்லியன் ரூபா,2019 ஆம் ஆண்டு 97.3 பில்லியன் ரூபா ,2020 ஆம் ஆண்டு 60.4 பில்லியன் ரூபா,2021 ஆம் ஆண்டு 21.5 பில்லியன் ரூபா,2022 ஆம் ஆண்டு 166.2 பில்லியன் ரூபா நட்டத்தை எதிர்க்கொண்டுள்ளது இந்த நிலை தொடர முடியாது. கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள நட்டத்தை நிவர்த்தி செய்வதற்கு அன்றி எதிர்காலத்தில் நட்டம் ஏற்படுவதை தவிர்க்கும் வகையிலேயே மின் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## மலையக மாணவர்களுக்கு...

திறமைகளுள்ள மாணவர்கள் சாதாரண தரத்தின் பின்னர் உயர்தரத்துக்கு செல்லமுடியாது தொழிலின்றி அலைய நேரிட்டுள்ளது.

இத்தகைய இளைஞர், யுவதிகளை அடையாளம் கண்டு கல்வி அமைச்சின்கீழ் இயங்கும் தொழிற்பயிற்சி நிலையங்களூடாக

அவர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். இந்நோக்கிலே,

இவ்விஷேட திட்டம் முதற்கட்டமாக 11ஆம் திகதி பதுளை மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கல்வி இராஜாங்க அமைச்சின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மலையக இளைஞர் யுவதிகளிடத்தில் பலதரப்பட்ட திறமைகள் ஒளிந்து கிடக்கின்றன. இவற்றை வெளிக்கொணர்வதற்கு வழிகாட்டல்கள், விழிப்புணர்வுகள், தொழில்சார் பயிற்சிகள் அவசியமாகின்றன. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் உரிய அடைவை எட்டாதோர் பின்னர் உயர்தரத்துக்கு செல்லமுடியாமலும், தொழிலின்றியும் அவலப்படுவதை காணமுடிகிறது.இதனால்,இவர்கள்

மனதளவில் வலுவிழந்து தவறான பாதைகளையும் தேர்ந்தெடுத்து விடுகின்றனர். நமது நாட்டின் எதிகாலமே இளைஞர் யுவதிகளின் கைகளில்தான் தங்கியிருக்கிறது.

அகவே அவர்களுக்கு கைகொடுக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் எமக்கு இருக்கவேண்டும். அந்தவகையில்தான் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் தொழிற்பயிற்சி நிலையங்களூடாக இளைஞர், யுவதிகளின் திறமைக்கேற்ப தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தவகையில் ,அமைச்சின் செயலாளர், தொழிற்பயிற்சி நிலையங்களின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிராந்திய பணிப்பாளர்கள், செயலாளர்கள் ஆகியோரது ஆலோசனைகளுடன் கல்வி இராஜாங்க அமைச்சரின் கண்காணிப்பின் கீழ் 11ஆம் திகதி பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு பயிற்சிக்கான ஆரம்ப செயலமர்வு நடைபெறவுள்ளது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மார்க்கண்டன் ரூபவதனன், ஆசிரியர் ஆலோசகர் (ஓய்வுநிலை) எஸ். பிரபாகரன், பதுளை தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (Naita) தொழில் ஆலோசகர் ஏ.கே.எல். சத்துரங்க, பதுளை தொழிநுட்ப கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் ( Tec ) ஆலோசனை அதிகாரி சாமிக்க சுரங்க, பதுளை உயர்தொழில்நுட்ப கல்லூரி ஆலோசனை அதிகாரி ரங்கண விதான கமகே ஆகியோர் இதில் பங்கேற்கவுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## மனச்சாட்சியுள்ள எவரும் அவசரமாக...

ஆர்ப்பாட்டங்கள் குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது, நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தின் படுகுழியில் வீழ்ந்த சூழலில்தான், ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்குமாறு அழைப்பு விடுத்தபோது, இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் எவரும் முன்வரவில்லை. ஏன்? குழம்பிய குட்டையில் நல்ல மீன்களைப் பிடிக்கலாமென்ற சுயநல அரசியலிலே அவர்கள் ஊறியிருந்தனர். ஆனால், ரணில் விக்கிரமசிங்க துணிந்து வந்து நாட்டைப் பொறுப்பேற்றார். இன்று, படிப்படியாக நிலைமைகள் சீரடைகின்றன. ரூபாவின் பெறுமதி உயர்ந்து டொலரின் பெறுமானம் வீழ்ச்சியடைந்து வருகிறது.சர்வதேச நாணய நிதியம் உட்பட சகல அமைப்புக்களும் உதவி வழங்க முன்வந்துள்ளன. இவ்வுதவிகள் கிடைத்தால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நிலைத்துவிடலாமென இவர்கள் அஞ்சுகின்றனர். இதனால், இவ்வாறு நிகழ்வதற்குள் நிலைமைகளைக் குழப்பவே எதிரணியினர் முயற்சிக்கின்றனர். வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் மனநிலையில் மக்கள் இல்லை. குடும்பத்தை வாழ வைப்பதற்கான சுழற்சியில்தான் இவர்களின் காலங்கள் கழிகின்றன. இந்த நிலையிலா,தேர்தலைக் கோருவது.?

மக்களின் பிணங்களைக் கடந்து சென்றும் அதிகாரத்தை அடைவதுதான் இவர்களின் விருப்பம். இவ்வாறானவர்கள் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு லாயக்கற்றவர்கள். அதிகாரப்பகிர்வின் அடையாளமாக, சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு நிவாரணமாகக் கிடைத்த மாகாண சபைத் தேர்தல், ஆறு வருடங்களாக இழுத்தடிக்கப்படுகிறது. இதுபற்றி, இவர்கள் வாயே திறக்கவில்லை. இத்தேர்தலை இழுத்தடிப்பதற்கு சூழ்ச்சி செய்தவர்களில் முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளை சேர்ந்தவர்கள் பிரதானமானவர்கள்.

அதிகாரப்பகிர்வின் அடையாளமான மாகாணசபையை காப்பாற்ற போராட முன்வராத சுமந்திரன் உள்ளிட்ட சில அரசியல்வாதிகள், உள்ளூராட்சி தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம்கொடுக்கின்றனர். அந்தளவுக்கு இவர்களின் அரசியல் தரம் குறைந்து விட்டதாகவே நான் கருதுகிறேன். அதிகாரத்தை அடைந்து கொள்ளச் செலவிடும் பணத்தை, அடிவயிறுடனும் மற்றும் வெறும் வயிறுடனும் வாழ்க்கையின் இறுதி மூச்சைவிடப் போராடும் மக்களுக்கு வழங்குவதுதான், உண்மையான மக்கள் பிரதிநிதியின் உயர் பண்பாக இருக்குமென்றும் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் வேலைத்திட்டங்கள்,...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பி சார்ள்ஸ் நிர்மலநாதன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டம் தொடர்பான விடயங்கள் நாட்டின் தற்போதைய சூழ்நிலையில், மிகச் சிறந்த நடவடிக்கையாகவே நாம் பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுங்க இறைவரி தீர்வை சட்டவிதிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட ந்த சில தினங்களுக்கு முன் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது, நிதி அமைச்சர் என்ற வகையில் தானும் மத்திய வங்கியின் ஆளுநரும் சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளில் கையெழுத்திட்டு நிறைவேற்றியதாக நாட்டு மக்களுக்கு அறிவித்திருந்தார். அதனை சிறந்த செயல்பாடாக நாம் கருதுகின்றோம்.

பொருளாதார ரீதியில் அவரினதும், அவரது அதிகாரிகளினதும் திறமையாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம். பொருளாதார நிலைமைகளுக்கு ஈடுகொடுப்பதற்காக முன்னெடுத்த இந்த வேலைத்திட்டங்களுக்காக, நாம் நன்றி தெரிவிக்கிறோம். அரசாங்கத்தின் குறைபாடுகளை நாம் சுட்டிக் காட்டினாலும் நல்ல விடயங்களை வரவேற்க வேண்டும். ஜனாதிபதியிடம் பல்வேறு கோரிக்கைகளை நாம் முன்வைத்துள்ளோம். அதில், வட மாகாணத்திலுள்ள கடற்பரப்பில் வெளிநாட்டு மீனவர்கள் மீன் பிடிப்பதால் எமது மீனவர்களின் வாழ்வாதரம் பாதிக்கப்படுகிறது.

அது தொடர்பில் நிரந்தர தீர்வை ஜனாதிபதியிடம் கேட்கிறோம். இந்திய மீனவர்களுக்கு எமது கடலில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.இதனால், வடக்கில் மீனவர்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. எமது மீனவர்களுக்கு கடலுக்கு செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது. வெளிநாட்டவர்களுக்கு எமது கடலில் மீன் பிடிக்க அனுமதி வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நானும், சிறீதரன் எம்.பியும் ஜனாதிபதியை சந்தித்து வடக்கு மீனவர் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துமாறு கூறியிருந்தோம்.

## நாட்டில் இதுவரை முட்டைகள்...

அமைச்சர் நளின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து ஒரு குறுகிய காலத்திற்காக முட்டை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது எனினும் இதுவரை அது இறக்குமதி செய்யப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தி எம். பி ரோஹண பண்டார எழுப்பிய வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

நாட்டில் ஏற்பட்டுள்ள வெளிநாட்டுக் கையிருப்பு பற்றாக்குறை காரணமாக முட்டை உற்பத்திக்கான மூலப் பொருள் இறக்குமதிக்கு பாதிப்பு ஏற்பட்டது. அத்தகைய சூழ்நிலையில் முட்டை உற்பத்தி தொழிற்துறை பாதிக்கப்பட்டதால் முட்டைக்கான தட்டுப்பாடும் ஏற்பட்டதுடன் முட்டை விலையும் அதிகரித்தது. முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்ட போதும் அந்த விலையை தொடர்ச்சியாக பேண முடியாத நிலை காணப்படுகிறது.

இவ்வாறான சூழ்நிலையில் எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டை நுகர்வுக்கான கேள்வி அதிகம் காணப்படுவதால் முட்டையை இறக்குமதி செய்து சாதாரண விலையில் சந்தையில் விநியோகிக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்கள்.

முட்டை இறக்குமதிக்கான நடவடிக்கைகளை ஆரம்பித்த போது முட்டை உற்பத்தி நாடுகளில் பறவைக் காய்ச்சல் நோய் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் விவசாயத்துறை அமைச்சின் கீழ் உள்ள உணவு பாதுகாப்பு மற்றும் கால்நடை பாதுகாப்பு பிரிவு விசேட அவதானம் செலுத்தி ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து உலகின் தலைசிறந்த 5 முட்டை உற்பத்தி நாடுகளிடமிருந்து முட்டை இறக்குமதி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அந்த 5 நாடுகளில் இந்தியாவும் உள்ளடங்குவதால் இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதி செய்வது குறித்து இராஜதந்திர மட்ட பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்ட போது இந்தியாவில் முட்டை உற்பத்தி நிறுவனங்களில் சிறந்த 3 நிறுவனங்களை இந்திய அரசாங்கம் பரிந்துரை செய்தது.

அந்த. நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்ட போது ஒரு நிறுவனம் மாத்திரம் நாம் கோரிய விலைக்கு முட்டையை வழங்க இணக்கம் தெரிவித்தது. எவ்வாறெனினும் இதுவரை ஒரு முட்டை கூட இறக்குமதி செய்யப்படவில்லை. முட்டை இறக்குமதி செய்து இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்ற செய்திகளிலும் எந்த உண்மையும் கிடையாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஆங்கில மொழிப் பிரச்சினைக்கு...

விஜேதாச ராஜபக்ச சபையில் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டம் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக விடப்பட்டு அதனை நிறைவேற்றும் பொறுப்பை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் ஒப்படைக்கப் போவதாக தெரிவித்த அவர், அது சபையில் நிராகரிக்கப்பட்டால் கட்டளைச் சட்டம் செல்லுபடியற்றதாகிவிடும் என்றும் தெரிவித்தார்.

சட்ட ஆய்வுக் கவுன்சில் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆகிய இருதரப்பினராலும் முன்வைக்கப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவையே.எனினும், அதில் ஒரு இணக்கப்பாட்டை எட்டிக் கொள்வதற்காக கடந்த நான்கு மாதங்களாக, தாம் மேற்கொண்ட முயற்சிகள் சாத்தியப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சட்டக் கல்லூரி மாணவர்கள் தமது கோரிக்கையை முன்வைத்து நேற்று முன் தினம் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

இது தற்போது புதிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இந்நிலையில் அதற்கு தீர்வு காணப்பட வேண்டும். அதற்காகவே அந்தப் பொறுப்பை பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று அத்துரலிய ரதன தேரர் முன்வைத்த விசேட கூற்றொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர், சபையில் மேலும் தெரிவித்ததாவது,

சட்டக் கல்லூரி தொடர்பான விடயங்களை சட்ட ஆய்வுக் கவுன்சிலே மேற்கொள்கின்றது.

ஆங்கில மொழியில் மாத்திரமே சட்டக் கல்லூரி பரீட்சை எழுதப்பட வேண்டும் என்ற விடயம் கட்டளைச் சட்டமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.எனினும், அது இதுவரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த வகையில் சட்ட ஆய்வு கவுன்சிலின் காரணங்களும் ஏற்றுக்கொள்ளத் தக்கவையே.

ஆங்கில மொழியில் பரிச்சயமான சட்டத்தரணிகள் குறைவடைவதை தடுப்பதற்கும்,அதேவேளை வெளிநாடுகளில் சட்டக் கல்வி கற்று இங்கு வந்து பணிபுரியும் போது, ஆங்கில மொழியில் பரிச்சயம் இல்லாதவர்கள் புறக்கணிக்கப்படுவதை தவிர்க்கும் வகையிலுமே அந்தக் கவுன்சில் இத்தகைய தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை நூற்றுக்கணக்கான சட்டக் கல்லூரி மாணவர்கள் என்னை சந்தித்து அது தொடர்பில் கலந்துரையாடி மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்துள்ளனர். சட்டக் கல்லூரி பரீட்சையை தமிழ் அல்லது சிங்கள மொழியில் எழுதவும் அதன் பின்னர் தாம் ஆங்கில மொழியில் திறமையை வெளிப்படுத்த முடியும் என்றும் அவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டனர்.

உண்மையில், நானும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமும் கூட எமது தாய் மொழியிலேயே சட்டக் கல்லூரி பரீட்சைக்குத் தோற்றினோம். அதன் பின்பு ஆங்கில மொழியில் திறமையை வெளிக்காட்டினோம். இந்த கட்டளைச் சட்டம் உருவாக்கப்படும் போதே அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை ஒரே ஒரு தடவை அந்த சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளதே தவிர இதுவரை அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள...

ஆகியோருக்கும் சர்வதேச மகளிர் தின தேசிய விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

ஆசிய பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் பெண்கள் முன்னிலையில் இருப்பதாகவும், அந்த நிலைமையை மேலும் விரிவுபடுத்தி, உலகில் முன்னேறிய நாடுகளைப் போன்று பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். "பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டல் தொடர்பான தேசிய கொள்கை" மற்றும் "பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய செயற்திட்டம்" ஆகியவை அதற்கு உறுதுணையாக இருக்கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சார்க் அமைப்பில் பெண்களின் உரிமைகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படாததால், அந்த உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக சார்க் நாடுகளின் பிரதான பெண் செயற்பாட்டாளர்களின் கூட்டம் இந்த வருடம் இலங்கையில் நடைபெறவுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, ஆசிய பிராந்தியத்தில் பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் இலங்கை முன்னிலையில் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா... 03ஆம் பக்கத் தொடர்

மிப்ராஜி, நிகழ்வில் விசேட பேச்சாளராகக் கலந்து கொள்கிறார்.

நிகழ்வுகளை, ஸடடே எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையின் பிரதம ஆசிரியை ஹனா இப்ராஹிம் நெறிப்படுத்துவார்.

மீடியா போரத்தின் உயர்பீட உறுப்பினர்கள், கல்விமான்கள், இலக்கியவாதிகள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வருகை தருபவர்கள் தங்கள் வருகையை முன்கூட்டியே கீழே உள்ள இலக்கத்தை தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறு முஸ்லிம் மீடியா போரம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 0772612288

## காத்திரமான... 03ஆம் பக்கத் தொடர்

காத்திரமான வேலைத் திட்டங்களே இதற்கு காரணமாகும்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால் அதன் மூலம் 436 மில்லியன் டொலர் நாட்டுக்கு இந்த வருடத்தில் கிடைத்துள்ளது. அத்துடன் டொலர் கையிருப்பு அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் திட்டங்களை எதிர்க்கட்சிகள் தாராளமாக முன்வைக்கலாம். நாட்டை மீட்டெடுக்க அனைவரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொலைக் குற்றத்தில்... 03ஆம் பக்கத் தொடர்

என தெரிவித்தார். பின்னர் பிரதிவாதிகள் ஐவருக்கும் மரண தண்டனை விதித்தார். 2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மூன்றாம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் தேவாலேகம பொலிஸ் பிரிவின் கஹல்ல கிராமத்தில் தற்காலிகமாக வசித்து வந்த, அலககோன் முதியான்சலாகே நந்த அலககோன் என்னும் 39 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவர்கள் கொலை செய்தனர்.

கொலை செய்யப்பட்டவர் விமானப்படையில் சேவையாற்றி சட்டபூர்வமாக வெளியேறியவராவார். பின்னர் அவர் தேவாலேகம கேகாலை பிரதேசத்தில் வசித்து வந்த ஆசிரியையான யுவதி ஒருவரைக் காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

## 40 வயதுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

இந்த கருத்தரங்கு நடைபெற்றது.

உலக குளுக்கோமா தினத்துக்கு இணைந்ததாக மார்ச் மாதம் 12 தொடக்கம் 18 ஆம் திகதி வரை தேசிய குளுக்கோமா வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு அவ் வாரத்தில் ஊடகங்களின் ஊடாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சி திட்டங்கள், வைத்திய மாணவர்கள் மற்றும் வைத்தியர்களுக்கான பயிற்சி வேலை திட்டங்கள், கிளினிக் மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளும் நாடு பூராவும் மேற்கொள்ளப்படவுள்ளன. குளுக்கோமா என்பது இலங்கையில் மாத்திரமல்ல உலகம் முழுவதுமுள்ள மக்களை நிரந்தரமாக விழிப்புலனை இழக்கச்செய்யும் பிரதானமான நோய் நிலைமையாகும். அது விழிப்புலன் தன்மையை ஏற்படுத்தும் மூன்றாவது காரணியாகும். குளுக்கோமா காரணமாக 4.5 மில்லியன் மக்கள் கண்பார்வையை இழந்துள்ளார்கள். மேலும் மில்லியனளவினருக்கு குறைந்தளவு கண்பார்வையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குளுக்கோமா ஆரம்ப நிலையில் எவ்வித நோய் அறிகுறியையும் காட்டாததோடு கண் நரம்புகளுக்கு நிரந்தர பாதிப்பை ஏற்படுத்துவதன் காரணமாக படிப்படியாக கண்பார்வை இழப்பு ஏற்படும். நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் கண்பார்வையை பாதுகாத்துக் கொள்ள முடியும். 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருடத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் குளுக்கோமாவுக்கான கண் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். இலங்கையிலும் ஆயிரக்கணக்கானோர் முற்றாக கண் பார்வை இழந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் குறைந்தளவு கண் பார்வை இழப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## பேரீச்சம்பழத்துக்கான இறக்குமதி...

ரூபா வீதம் விதிக்கப்பட்டிருந்த வரி , 01 கிலோவுக்கு 01 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணி செலவிடப்படாத வகையில், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பரிந்துரையின் பேரில் பல்வேறு நாடுகள், நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் நலன் விரும்பிகளிடமிருந்து அன்பளிப்புக்கள் அல்லது நன்கொடைகள் மூலம் பெறப்படும் பேரீச்சம்பழத்துக்கு மட்டுமே இந்த வரி விலக்கு பொருந்தும்.

நேற்று (08) முதல் அமுலுக்கு வரும் வகையில் 2022 நவம்பர் 30 இல், வெளியிடப்பட்ட இலக்க 2308/17 வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஜனாதிபதியினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## நெருக்கடியான சூழலில் நட்புநாடுகள்...

இந்தியாவும், அதனைத்தொடர்ந்து பாரிஸ் கிளப் உறுப்புநாடுகளும் வழங்கியிருந்தன. இருப்பினும் இலங்கையின் மிகப் பாரியளவிலான இருதரப்புக் கடன் வழங்குனரான சீனா, உரியவாறான உத்தரவாதத்தை வழங்குவதில் தொடர்ந்தும் தாமதம் காட்டியது.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த வாரம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருந்துவெளியிட்ட சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்பை வழங்கத்தயாராக இருப்பதாக உத்தரவாதமளித்திருந்தார்.

நேற்று முன்தினம் (07) செவ்வாய் கிழமை தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் (07) பக்கத்தில் பதிவையிட்டிருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, 'தற்போதைய கடினமான சூழ்நிலையில் அக்கறையுடன் உதவக்கூடிய நட்புநாடுகள் கிடைத்திருப்பது இலங்கையின் அதிஷ்டமாகும்.

அவசியமான சகல உத்தரவாதங்களும் கிடைத்துள்ளதால், அடுத்த கட்டத்தை நோக்கிப் பயணிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## எரிபொருளுக்கான QR...

ஞாயிறு நள்ளிரவில் புதுப்பிக்கப்பட்டது. இதனால் ஏற்படும் விநியோகச் செலவைக் குறைக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், QR கோட்டா மூலம் வாரத்துக்கு பெறப்படும் எரிபொருளின் அளவுகளில் எந்த மாற்றமுமில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## இந்தியக் கடன் உதவியை...

அந்தக் கடன் தொகையில் மூன்றிலிரண்டை மாத்திரம் பயன்படுத்தியுள்ளது. மருந்து, உணவுகளுக்காக மாத்திரம் இலங்கை இதனைப் பயன்படுத்தியுள்ளது. இலங்கைக்கான நிதி உதவியை வழங்க சர்வதேச நாணய நிதியம் தயாராகி வருவதால், இலங்கை இந்த வருடத்துக்கான நிதியை பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இவை தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கடனில் சுமார் 300 மில்லியன் டொலர்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதால், இலங்கை இந்த கடனுதவியை ஆறு முதல் 10 மாதங்களுக்கு நீடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

## ரூபாவின் பெறுமதி...

வங்கியினால் வெளியிடப்பட்ட நேற்றைய நாணய மாற்று விகிதங்களுக்கமைய, அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் பெறுமதி 313 ரூபா 77 சதமாக பதிவாகியுள்ளது.

## மீட்டெழுச்சியை தொடர்ந்தும்

ரூ. 20.5 பில்லியன் மற்றும் வங்கியின் தனிப்பட்ட அடிப்படையில் ரூ. 17.2 பில்லியன் ஆகும். மக்கள் வங்கி டிசம்பர் 31, 2022 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான தீர்மானங்களை அறிவித்துள்ளது. மொத்த ஒருங்கிணைந்த வருவாய், மொத்த இயக்க வருமானம் மற்றும் வரிக்கு முந்திய இலாபம் ஆகியவை முறையே ரூ. 391.2 பில்லியன், ரூ. 130.0 பில்லியன் மற்றும் ரூ. 26.7 பில்லியனாகக் காணப்பட்டது. (இது 2021 இல் முறையே: ரூ. 236.8 பில்லியன், ரூ. 110.7 பில்லியன் மற்றும் ரூ. 37.2 பில்லியன் ஆகும்).

# மேற்கு, கிழக்கு அழுத்தங்களுக்கு அடிபணியாத வெளியுறவு கொள்கை

## இந்தியாவை பாராட்டும் சவூதி ஆய்வாளர்

இந்தியா தன் வெளிநாட்டுக் கொள்கையை எந்தவொரு மேற்கத்திய அல்லது கிழக்கு நாட்டின் அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் சுதந்திரமாக வடிவமைத்துள்ளது. ஏனெனில் இந்தியாவின் தேசிய நலன்களே இந்தியாவுக்கு முக்கியம், இவ்வகையில், எந்தவொரு சுதந்திர நாட்டையும் போல இறைமைக்கே சவூதி அரேபியா முதலிடம் வழங்குவதில் நம்பிக்கை கொண்டிருப்பதால் இந்தியாவின் இச் சுதந்திரமாக நடந்து கொள்ளும் முறையானது சவூதியை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

சவூதி அரேபியாவின் ஆய்வாளரும் அரசியல் பகுப்பாய்வாளருமான சல்மான் அல் அன்சாரி, ஏஎன்ஐ செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு இந்திய வெளியுறவுக் கொள்கையை பாராட்டியிருக்கிறார். உக்ரேன் யுத்தத்திலும் இந்தியாவின் நிலைப்பாடு சரியானது என்றும் சவூதி அரேபியாவும் அவ்வாறே கருதுவதாகவும் மேலும் தெரிவித்தார். உக்ரேனிய யுத்தம் மேலும் நீண்டு செல்வதை எந்த நாடுமே விரும்பவில்லை. அரேபிய முஸ்லிம் நாடுகளின் இதயமான சவூதி அரேபியாவும் பேச்சுவார்த்தை மேசைக்கு இரு தரப்பினரையும் கொண்டுவரவே விரும்புவதைப் போலவே உலகின் 'சுப்பர்' நாடான இந்தியாவும் விரும்புகிறது. உக்ரேனை ரஷ்யா ஆக்கிரமித்தது தவறானது. ஆனால் அதைத் தொடரவிடாமல் சமாதானத் தூதர் என்ற வகையில் இந்தியா பங்களிப்பு செய்யவேண்டும் என்று சவூதி அரசியல் ஆய்வாளர் தன் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

சவூதி இந்தியா நல்லுறவை பொருளாதார சுபீட்சத்துக்கும் உலக அமைதிக்கும் இன்றியமையாதது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஆட்டிறைச்சி எலும்பு குருதிக் குழாயில் சிக்கி குடும்பப் பெண் மரணம்

யாழ்.விசேட நிருபர்

ஆட்டிறைச்சி எலும்பு மார்பு குருதிக் குழாயில் சிக்கிக் கொண்டதனால் குடும்பப்பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கைச் சேர்ந்த லோகந்திரகுமார் மேரி ஜெனிஸ்ரா (வயது 46) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

“கடந்த 25ஆம் திகதி அவர் ஆட்டிறைச்சி சாப்பிட்டுள்ளார். ஆட்டிறைச்சி எலும்பு தொண்டைக்குள் சிக்கியுள்ளது. அதனால் அவர் வாழைப்பழம் சாப்பிட்டுள்ளார். எலும்பு மார்பு பகுதி வரை இறங்கி சிக்கிக்கொண்டுள்ளது.

மறுநாள் யாழ்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். அவரது வாய் ஊடாக கமரா செலுத்தி ஆராய மருத்துவர்கள் முற்பட்டுள்ளனர். எனினும் அதற்கு அனுமதிக்காத குடும்பப் பெண் வீடு திரும்பியுள்ளார்.

அந்நிலையில் கடந்த திங்கட்கிழமை குருதி வாந்தி எடுத்துள்ளார். அதனை அடுத்து உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

கமரா மூலம் பார்த்தபொழுது ஆட்டிறைச்சி எலும்பு குருதிக் குழாயில் குத்தியதாலேயே குருதி வாந்தி ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது” என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

# தங்க நகையை திருடிய பெண் உட்பட இருவருக்கு விளக்கமறியல்

யாழ்.விசேட நிருபர்

ஐந்தரைப் பவுண் தங்க நகையை திருடிய குற்றத்தில் கைதான பெண் உட்பட இருவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, நுணசை சிவன் கோவிலில் நடந்த உற்சவத்தில் சங்கிலி அறுக்கப்பட்டது. முச்சக்கர வண்டியில் வந்த மூவர் கொண்ட குழுவே திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டனர் என விசாரணைகளில் கண்டறிந்த இளவாலை பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளதுடன் ஒரு பெண் தலைமறைவாகியுள்ளார்.

கைதான இருவரும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை பொலிஸார் செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.





வலம்புரி விசேட லொத்தரின் வெற்றிகரமான மூன்றாவது சீட்டிழுப்பிற்குரிய லொத்தர்களை சந்தைக்கு வெளியிடும் நிகழ்வு அண்மையில் அபிவிருத்தி லொத்தர் சபை தலைவர் அஜித் குணரத்ன நாரகல தலைமையில் நடைபெற்றது. அபிவிருத்தி லொத்தர் சபையின் பொது முகாமையாளர் அநுர ஜயரத்ன,பிரபல தடகள விளையாட்டு வீராங்கனை திருமதி. ஸ்ரீயாணி குலவங்ஷ,அறிவிப்பாளர், பாடகி திருமதி.சரிதா பிரியதர்ஷனி ஆகியோர் கலந்து கொண்டனர்.





மாவனல்லை சாஹிரா தேசியப் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள பாடசாலை பற் சிகிச்சைப் பிரிவு மற்றும் பழைய மாணவியர் சங்கத்தின் அலுவலக கட்டடத் தொகுதி நிர்மாண பணிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்த கட்டட திர்மாணத்துக்கான காணி சாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவியர் ஒருவரினால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளதோடு, நிர்மாண வேலைக்கான செலவீனமான அறுபது இலட்சம் ரூபாவும் பழைய மாணவியர் சங்கத்தினரால் பொறுப்பெடுக்கப்பட்டுள்ளது.இவ் நிகழ்ச்சியில் பழைய மாணவியர் சங்கத்தின் உறுப்பினர்களும்,விஷேட பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர். (பாரா தாஹீர்)

# ரஷ்ய ஆக்கிரமிப்பை அப்படியே விட்டு விடுவது தவறான முன்மாதிரி

## புதுடில்லியில் அந்தனி பிளிங்கன் தெரிவிப்பு

ரஷ்யா தற்போது உக்ரேனில் செய்வதை அப்படியே விட்டு விடுவோமானால் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அது பச்சை விளக்கு காட்டிய மாதிரி ஆகிவிடும் என்பதோடு ஆக்கிரமிப்பை செய்துவிட்டு அப்படியே இருந்துவிடலாம் என்ற செய்தியை நாம் கொடுத்து விடுவதாகிவிடும் என்று அமெரிக்க வெளியுறவு செயலாளர் அந்தனி பிளிங்கன் புதுடில்லியில் தெரிவித்தார்.

கடந்த மூன்றாம் திகதி டில்லியில் நடைபெற்ற குவாட் வெளிவிவகார அமைச்சர்களுக்கான மாநாட்டில் கலந்து கொண்ட அவர், இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு தெரிவித்திருந்தாhர். இந்த அமர்வில் அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பென்னிவொங், ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் யொஷிபாஸா ஹயாஷி ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த வெளிவிவகார அமைச்சர் மாநாட்டை மிகச் சிறப்பானது என்று வர்ணித்துள்ள அமெரிக்க வெளியுறவு செயலாளர், 21ம் நூற்றாண்டின் போக்கை இந்தோ – பசுபிக் பிராந்தியம் தீர்மானிக்கும் என்றார்.



அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் நடத்திய ஆடற்கலைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற திருகோணமலை ஸ்ரீநாகம்மாள் அறநெறி பாடசாலை மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்றை நிர்வாகசபை அண்மையில் நடத்தியது. இதில் திருகோணமலை பிரதேச செயலாளர் பொன்னம்பலம் தனேஸ்வரன், கிராம உத்தியோகத்தர் சந்திரசேகரம், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி இலக்குமி ஸ்ரீதரன், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தாட்சாயினி, நடன ஆசிரியை திருமதி பிரேமா சாறுந்தன், பிரதேச சபை உறுப்பினர் தயாளன், வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் லக்ஷிதரன், கிராம முன்னேற்ற சங்கத்தின் முன்னாள் தலைவர் முருகதாஸ், ஆலய தலைவர் முகுந்தன், அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி தர்ஷனி, முன்பள்ளி ஆசிரியை பிரகாசினி நாகேஸ்வரன், ஆலய அறநெறி பாடசாலை தலைவர் சு. சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# பயங்கரவாதத்துக்கு எதிரான குவாட் பணிக்குழு நியமனம்; டில்லி வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மானம்

குவாட் உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொண்ட புதுடில்லி சந்திப்பில், பயங்கரவாதத்துக்கு எதிரான பணிக்குழுவொன்று ஏற்படுத்தப்படும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. இது, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் குவாட் அமைப்பு கொண்டுள்ள தீவிரத்தை வெளிப்படுத்துவதாக விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

புதுடில்லியில் கடந்த மூன்றாம் திகதி நடைபெற்ற இக் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், மும்பைத் தாக்குதலில் 26 வெளிநாட்டவர்கள் உட்பட 174 பேர் கொல்லப்பட்டதைப் போன்ற பயங்கரவாத சம்பவங்களுக்கு எதிராக மாற்று பயங்கரவாதத்தை ஏவாமல் சம்பந்தப்பட்ட தரப்புகளையே பொறுப்பாளர்களாக ஆக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. இவ்விடயத்தில் குவாட் நாடுகள் மற்றும் இந்தோ – பசுபிக் நாடுகளின் ஆதரவை கோரவுள்ளோம். வன்முறை மற்றும் அதி தீவிர வன்முறைகளை தீவிரமாக அணுகுவோம். ஏனெனில் நவீன தொழில் நுட்பங்களை பயங்கரவாதிகள் பயன்படுத்துகின்றனர். சமூக வலைத்தளங்கள் ஊடாக புதியவர்களை சேர்த்துக் கொள்வதோடு நிதி, திட்டமிடலையும், தொழில் நுட்பத்தின் வாயிலாகப் பெறுகின்றனர் என்று இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபரில் அவுஸ்திரேலியாவில் பயங்கரவாதத்துக்கு எதிரான கொள்கை முடிவுகள் மீது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் இம் மாதம் வொஷிங்டனில் நடத்தப்படவுள்ள சந்திப்பில் இவை தொடர்பாக மேலும் ஆராயப்படும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## வவுனியாவில் எட்டாம் வருடத்தில்... (04ஆம் பக்கத் தொடர்)

கண் மாத்திரமல்லாமல் அவர்களின் பொதுவான தேகநிலை குறித்த பரிசோதனைகளும் நடைபெற்று அவர்களது ஆரோக்கிய நிலைமை உறுதிப்படுத்தப்பட்டது.

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லும் பல மாணவர்கள் போக்குவரத்துக்கான பண வசதியின்றியும். போக்குவரத்துச் சாதனமின்றியும் வறுமை காரணமாகத் தமது கல்வியை இழந்திருக்கின்றார்கள். அத்தகைய குடும்பங்களை, கிராம சேவகர்கள் மற்றும் கிராம மட்டத்திலான பொது நிறுவனங்களின் ஊடாகத் தேடியறிந்து தெரிவு செய்யப்பட்ட 20 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. விஷன் கெயர் நிறுவனத்தின் தொழில்நுட்பவியலாளர்களும் கண் சிகிச்சை துறைசார்ந்தவர்களும் 200 முதியவர்களுக்கு கண் பார்வையைப் பரிசோதனை செய்து இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கினர்.

இதையும் விட வசதியற்ற 100 குடும்பங்களுக்கு பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. வவுனியா பிரதேச செயலாளர் நாகலிங்கம் கமலதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த நிகழ்வை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். இவருடன் வவுனியா பொதுவைத்தியசாலையின் உணர்வு நீக்கி (மயக்க) மருந்து நிபுணர் யோகானந்த், மருத்துவர்கள், குடியிருப்பு பிள்ளையார் ஆலய பிரதம குருக்கள் உள்ளிட்ட சமயத் தலைவர்கள் மற்றும் பணி ஓய்வுபெற்ற கல்வித்துறை உயரதிகாரிகள், வங்கித்துறை சார்ந்த உயரதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர், முதியோர் என பலதரப்பட்டவர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தனர்.

கடந்த ஏழு வருடங்களாகத் தொடர்ந்து இடம்பெற்ற இந்த அறப்பணி நிகழ்வின் மூலம் ஆயிரக்கணக்கான ஏழை மாணவர்கள் கற்றல் உபகரணங்களைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர். இதேபோன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த முதியவர்கள் மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர். அத்துடன் வறிய குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள், பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய வறிய குடும்பங்களைச் சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் மாதாந்த நிதியுதவி பெற்று தமது உயர்கல்வியைத் தொடர்கின்றார்கள். அதேவேளை இந்த நிதியுதவியின் மூலம் தமது பட்டப்படிப்பை முடித்த மாணவர்கள் சிலர் அரச தனியார் துறைகளில் தொழில்வாய்ப்புப் பெற்று வாழ்க்கையில் உயர்ந்துள்ளார்கள்.

வருடந்தோறும் மார்ச் மாதம் நடைபெறுகின்ற அன்னை புவனேஸ்வரியின் நினைவுதின அறப்பணிகளுக்கான சமூகப் பொதுநிகழ்வு சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. அதேவேளை புவனேஸ்வரியின் நினைவாக அவரது புதல்வர்களினால் பூந்தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவு இல்லத்தின் ஊடாக கல்வி, வயோதிபர்களின் நல்லாரோக்கியம் போன்ற துறைகளில் மேலும் பல அறப்பணிகளை முன்னெடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இந்த சமூக அறப்பணி நிகழ்வானது சமூகத்தில் பொதுச்சேவையில் ஈடுபடுபவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவல்லது. அத்துடன் பலருக்கு இது ஒரு முன்மாதிரியான செயற்பாடாகவும் திகழ்கின்றது.

2023 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு
மகளிரின் வசதிக்கான புதிய வேலைத்திட்டம்!
மகளிருக்கான பொது மலசலக்கூடங்கள்/ அலுவலகங்களில் மலசலக்கூடங்களை பயன்படுத்தும் போது, மகளிரின் கைப்பைகளை கொழுவி வைப்பதற்கான வசதியொன்றை அமைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
மாநகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.03.07
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5052 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 9 5 4 9 4 5

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3294 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,707,366.80
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 02 26 53 80

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1507 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,340,022.80
வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 2 3 2 4 8 4

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1400 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 306,053,938.00
ஆங்கில எழுத்து G — சுப்பர் இலக்கம் 12 — வெற்றி இலக்கங்கள் 25 42 60 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1082 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,296,263.20
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 09 32 47 60

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் 361 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,033,708.60
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 03 36 47 55 — விசேட இலக்கினம் மேஷம்



# மருதமுனை அல்–மனார் மத்திய கல்லூரியில் 27 பேர் தரம்–05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி





கடந்த டிசம்பர் மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில், மருதமுனை அல்–மனார் மத்திய கல்லூரியைச் சேர்ந்த 27 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இப்பாடசாலை மாணவியான முகம்மட் நிஹால் மரியம் 179 புள்ளிகளைப் பெற்று பாடசாலை, பிரதேச, கோட்ட, வலய மட்டங்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இந்நிலையில், சித்தி பெற்ற மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் பாடசாலை சமூகம் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

(மருதமுனை தினகரன் நிருபர்)

# நிலநடுக்கம்; அம்பாறை மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம்

## அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஏற்பாடு

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அம்பாறை மாவட்ட மக்கள் மத்தியில் நிலநடுக்கம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, அம்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸ் நேற்று (08) தெரிவித்தார்.

துருக்கியில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கம் மற்றும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட சிறியளவிலான நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, பொதுமக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ள நிலையிலேயே, இந்த விழிப்புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நிலநடுக்கம் உள்ளிட்ட அனர்த்தங்களின் போது பின்பற்ற வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள், பாதுகாப்பு யுக்திகளைக் கையாளும் விழிப்புணர்வூட்டல் ஆகியன அனைத்து மக்களையும் சென்றடையத்தக்க வகையில் விழிப்புணர்வூட்டும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



இதற்கு அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள், பிரதேச செயலகங்களின் உதவியும் பெறப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

முதலுதவிப் பெட்டிகளைத் தயார்படுத்துதல், வெளியேறும் வழிகளை அடையாளப்படுத்துதல், எரியக்கூடிய பொருட்களை வெளியில் அகற்றுதல், தீயணைப்புக் கருவிகளை தயார் நிலையில் வைத்திருத்தல் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டு வருகின்றன.

நிலம் நடுங்கும் போது, கட்டடங்களுக்குள் இருக்க நேர்ந்தால், மேசைகளின் கீழ் அமர்ந்து அவற்றின் கால்களை நன்றாகப் பிடித்துக்கொள்ளுதல், யன்னல் கண்ணாடிகளுக்கு

அருகில் இருப்பதைத் தவிர்த்தல், தொங்கும் உடைமைகள் மற்றும் மின்னாளிக ளுக்கு அருகில் இருப்பதைத் தவிர்த்தல் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளது.

நிலம் நடுங்கும் போது, திறந்த வெளியிடங்களுக்கு வெளியேறுதல், வாகனங்களுக்குள் இருப்பவர்கள் உடனடியாக வெளியேறுதல், நிலம் சரியக்கூடிய இடங்கள் மற்றும் மரங்கள், மின்கம்பங்களின் கீழ் இருப்பதைத் தவிர்த்தல் தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனர்த்த நிலைமைகளின் போது, பொதுமக்களுக்கு உதவும் வகையில் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் அனர்த்த முகாமைத்துவ தொண்டர் படையணி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் படையணியிக்குத் தேவையான ஆலோசனை, வழிகாட்டல் மற்றும் பயிற்சி ஆகியன பிரதேச ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

# திருகோணமலையில் இலவச கண் சிகிச்சை

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



திருகோணமலை மாவட்டத்துக்குட்பட்ட கட்டைபறிச்சான் விபுலானந்த வித்தியாலயத்திலும் அலஸ் தோட்டம் ஸ்ரீமாதுமை அம்பாள் வித்தியாலயத்திலும் நடத்தப்பட இலவச கண் சிகிச்சை முகாமின் போது, கண்ணில் வெண்புரை நோயுள்ள 100 க்கும் மேற்பட்டோர் அடையாளம் காணப்பட்டதுடன், அவர்களுக்கு மேலதிக சிகிச்சைக்கான உதவி வழங்கப்படவுள்ளது.

அத்துடன், 200 க்கும் மேற்டோருக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

திருகோணமலை ரோட்டரிக் கழகமும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 'Global Hand Charity' மற்றும் 'Rotary Club of Mill Point' ஆகியன இணைந்து இலவச கண் சிகிச்சை முகாமை, கட்டைபறிச்சான் விபுலானந்த வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமையும் அலஸ் தோட்டம் ஸ்ரீமாதுமை அம்பாள் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையும் நடத்தியது.

இரு தினங்களிலும் சராசரியாக 500 க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

# மகளிர் தின உதவியாக 11 பெண்களுக்கு நிதி



**திருக்கோவில் தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில், கஞ்சிகுடிச்சாறு மீள்குடியேற்றக் கிராமத்தில் வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வரும் 11 பெண்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான நிதி உதவி நேற்று (08) வழங்கி வைக்கப்பட்டது.

கனடாவில் வாழும் ரஜி பீட்டர்சனின் ஊடாக சர்வதேச மகளிர் அமைப்பின் நிதிப் பங்களிப்புடன் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் தலைமையில் ஒவ்வொருவருக்கும் 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

உணவுப் பாதுக்காப்பை பேணும் வகையில் கஞ்சிகுடிச்சாறுக் கிராமத்தில் கிராமிய நலன்புரிச் சங்கத்தின் உதவியுடன் இந்தப் பெண்கள் வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தினகரன் பத்திரிகை அனுசரணையில் தொழில் வழிகாட்டல் செயலமர்வு

**சாய்ந்தமருது விசேட, திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்**



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம், அட்டாளைச்சேனை பிரதேச செயலகம், எக்ஸ்டோ ஸ்ரீலங்கா, அவரோன் செரிடி சமூக சேவைகள் அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து லேக் ஹவுஸ் தினகரன் பத்திரிகை மற்றும் வாரமஞ்சரி பத்திரிகை இணைந்து நடத்திய தலைமைத்துவப் பயிற்சியும் தொழில் வழிகாட்டல் செயலமர்வும், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை (06) நடைபெற்றது.

இளைஞர் சேவை உத்தியோகத்தர் பீ.எம்.றியாத் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வின் போது, அவரோன் செரிட்டி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நஸாத் சம்சுதீன் பிரதம அதிதியாகவும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் பாத்திமா நஹிஜா முசாபீர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணக் காரியாலயத்தின் உதவிப் பணிப்பாளர் யூ.எல். அப்துல் மஜீத் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம். நளீல், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஜெளபர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர். இதில் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் அங்கத்தவர்கள், இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டதுடன், அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# 'எல்லாமும் ஒன்றல்ல' நூல் வெளியீட்டு விழா

பிரபல எழுத்தாளர் உமா வரதராஜனின் 'எல்லாமும் ஒன்றல்ல' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 12ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் நல்லதம்பி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பதிப்பிக்கப்பட்டுள்ள இந்நூலை, கல்முனை வியூகம் கலை இலக்கிய அமைப்பு வெளியிடவுள்ளதுடன், இவ்விழாவுக்கு ஓய்வுநிலை பேராசிரியர் செ.யோகராசா தலைமை தாங்கவுள்ளார்.

மூத்த ஊடகவியலாளர் க. குணராசா முதல் பிரதியை பெற்றுக்கொள்ளவுள்ளார்.

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் வெளியீட்டுரை நிகழ்த்தவுள்ளார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், டொக்டர் புஷ்பலதா லோகநாதன், சோலைக்கிளி மன்சூர் ஏ.காதர், சபா சபேசன், வாசுதேவன், சிவவரதராஜன், சஞ்சீவி சிவகுமார், பி.சஜிந்ரன் ஆகியோரும் இவ்விழாவில் உரையாற்றவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# கஞ்சாவுடன் கைதான ஒருவருக்கு விளக்கமறியல்

**பாலமுனை தினகரன் நிருபர்**

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நேருபுரம் காஞ்சிரங்குடா பிரதேசத்தில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நபர் வைத்திருந்தமை தொடர்பாக திருக்கோவில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் படி, அப் பிரதேசத்துக்குச் சென்ற பொலிஸார், இவரைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து 600 மில்லிகிராம் கஞ்சாவையும் கைப்பற்றினர்.


இதனைத் தொடர்ந்து மேற்படி நபரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே, இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.



கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட அல்அஸ்ஹர் வித்தியாலய மாணவியான பாத்திமா சேஹா, மாகாண மாணவர் பாராளுமன்ற அமர்வுக்கு பாடசாலை பாராளுமன்ற குழுவிலிருந்து அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், பாடசாலை அதிபர் ஏ.எச்.அலி அக்பர், பயிற்றுவித்த ஆசிரியர்கள், மாணவி பாத்திமா சேஹா, பாடசாலையின் மாணவர் பாராளுமன்றக் குழுவையும் படத்தில் காணலாம்.

(படம்: கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

# மலைச்சாரல்



# சீனாக்கலை டி.பி பிரிவில் மாணிக்கக்கல் அகழ்வு; குழிகளால் பாதிக்கப்படும் கால்நடை வளர்ப்பாளர்கள்





**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

சீனாக்கலை டி.பி பிரிவில் நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் மாணிக்கக்கல் அகழ்வுக்காக தோண்டப்பட்ட குழிகள் மூடப்படாததால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகார சபையின் ஊடாக பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் பொகவந்தலாவ சீனாக்கலை டி.பி பிரிவில் நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் கால் நடைகளுக்கு புல் அறுக்கும் காணியில் மாணிக்கக்கல் அகழ்வினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகார சபைக்கும் பொகவந்தலாவ பெருந்தோட்டநிறுவனத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் நிறைவடைந்த பின்னர் மாணிக்ககல் அகழ்வு இடைநிறுத்தப்பட்டு எட்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரையில் அந்த பகுதியில் தோண்டப்பட்டுள்ள மாணிக்கக்கல் சுரங்கக்குழிகள் மண் நிரப்பி மூடப்படவில்லையென சீனாக்கலை டி.பி.பிரிவில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த தோட்ட பகுதியில் கால் நடைகளுக்கு புல் அறுக்கும் காணி பகுதியினை மாணிக்கக்கல் அகழ்விற்கு அனுமதி வழங்கப்பட்ட பிறகு கால்நடை வளர்ப்பாளர்கள் கால் நடைகளுக்கு புல் அறுப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர் .

இவ்வாறான நிலைமையினால், கால்நடை வளர்ப்பாளர்கள் பாலாங்கொடை, பின்னவளை, மாரத்தென்ன ஆகிய பகுதிகளுக்கு வாகனங்களில் சென்று கால் நடைகளுக்கு புல் கொண்டு வருவதாகவும் ஆனால், தற்பொழுது எரிப்பொருள் விலை அதிகரித்துள்ளமையால் புற்களை கொண்டு வருவதற்கு பத்தாயிரம் ரூபாவிற்கு மேல் வாகனசாரதிகள் கோருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த பாரிய சுரங்க குழிகளை மூடுவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



மாத்தளை மாசிமகத் திருவிழாவை முன்னிட்டு கண்டி வர்த்தக சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை அன்னதானம் வழங்கி சிறப்பித்தனர். இந்த புண்ணிய புனித கைங்கரியத்தில் கலந்து கொண்ட வர்த்தக சங்க செயலாளர் செ. பரமேஸ்வரன் மற்றும் எஸ். சுப்பிரமணியம், எஸ்.ஆர்.தனராஜ், தேவஸ்தான தலைவர் சேதுராமன் சர்வானந்தா ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

# கண்டியில் மகளிர் தின ஊர்வலம்

**எம்.ஏ.அமீனுல்லா**



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கண்டியில் நேற்று (08) விழிப்புணர்வு ஊர்வலமொன்று நடைபெற்றது.

சமாதானம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த ஊர்வலத்தில் கண்டி மாவட்டத்தின் ஹாரிஸ்பத்துவ, பன்வில, பாத்ததும்பறை, குண்டசாலை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.

பெண்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பல்வேறு வன்முறைகள் மற்றும் இடர்பாடுகள் குறித்து அதற்கான தீர்வினை பெறும் வகையில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கண்டி மாவட்ட இணைப்பாளர் திருமதி குமுதினி விதானகே இடம் மகளிர் அமைப்புகளின் பிரநிதிகளினால் கோரிக்கை அடங்கிய மகஜரொன்றும் கையளிக்கப்பட்டன.

மேலும் அதனைத் தொடர்ந்து கண்டி வீதியிலுள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் மாவட்டக் காரியாலத்திலிருந்து கண்டி மணிக்கூட்டு சந்தி வழியாக ஊர்வலமாக பல்வேறு வாசகங்கள் எழுதிய பாதாதைகளுடன் கண்டி ஜோர்ஜ் டீ சில்வா பூங்காவை சென்றடைந்தனர்.

# மலையக மக்கள் முன்னணியின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை

**நுவரெலியா நிருபர்**

மலையக மக்கள் முன்னணியின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (12) மஸ்கெலியாவில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபை உறுப்பினரும் முன்னணியின் மகளிர் அணி பிரதித் தலைவியுமான சுவர்ணலதா இளங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார். சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் மலையக மக்கள் முன்னணியின் மகளிர் பிரிவினர் மகளிர் தின நிகழ்வுளை ஏற்பாடு செய்துள்ளனர். அதே போல இந்த வருடமும் எமது சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் எமது கட்சியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் மஸ்கெலியாவில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மலையக மகளிர் எதிர்காலமும் பொறுப்புகள் எனும் தலைப்பில் இந்த வருட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.விசேட பேச்சாளர்கள் இருவர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

மலையக பெண்களும் ஏனையவர்களுடன் எந்தவிதத்திலும் சலைத்தவர்கள் அல்ல.நாங்களும் தற்பொழுது எல்லாத்துறைகளிலும் எங்களுடைய திறமைகளை நிரூபித்து வருகின்றோம்.

# எமஸ்ட் தமிழ் வித்தியாலயத்தில் மாணவர் பாராளுமன்றம்

மாணவர்களின் தலைமைத்துவ பண்பினை வலுப்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைய வலப்பனை கல்வி வலையத்திற்குட்பட்ட உடப்புஸ்ஸலாவ எமஸ்ட் தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் ப.முகுந்கமலவண்ணன் தலைமையில் மாணவர் பாராளுமன்றம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வலப்பனை வலய கல்வி பணிமனையின் கோட்ட கல்விப் பணிப்பாளர் வி.யோகராஜ், ஆசிரியர் ஆலோசகர்கள் இளங்கோ,துரையரசன் ஆகியோர் கலந்து கொண்டு வாக்கெடுப்பை நடத்தினர். மேலும் வாக்கெடுப்பின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மாணவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பத்து மாணவர்கள் எதிர்வரும் (30.03.2023) வியாழக்கிழமை பதவியேற்க உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஆ.ரமேஸ்.



குருநாகல் மாவட்டத்தில் இப்பாகமுவ கல்வி வலையத்திற்குட்பட்ட தித்தவெல்கால அல் – ஹிக்மா முஸ்லிம் வித்தியாலயத்தில் குவைத் நாட்டைச் சேர்ந்த பரோபகாரி பாத்திமா அப்துல் வஹ்ஹாப் அல் ரிபாயின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட 4 வகுப்பறைகளைக் கொண்ட புதிய கட்டட திறப்பு விழா அண்மையில் வெகு விமரிசையாக இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் எஸ்.எம்.எஸ். மஸாஹிம் (நளீமி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேருவளை ஜாமியா நளீமியா கலாபீட முதல்வர் அஷ்ஷேய்க் ஏ.சி. அகார் முஹம்மத் (நளீமி) மற்றும் அல் ஹிமா இஸ்லாமிய சேவை அமைப்பின் பணிப்பாளர் எம்.ஏ.ஏ. நூருல்லாஹ் (நளீமி), குவைத் நாட்டின் தூதுவர் சார்பாக குவைத் தூதரக அதிகாரி அஷ்ஷேய்க் பிர்தௌஸ் (நளீமி)மற்றும் பாடசாலை பழைய மாணவர்கள், பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (படம் மாத்தளை சுழற்சி நிருபர்)

# நகர்வலம்



# இனப்பிரச்சினை தீராமல் நீடிக்க இவர்களே காரணம்

## பௌத்த தேரர்கள் மீது சி.வி.விக்கி பாய்ச்சல்

நாட்டில் நிலவும் இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாதுள்ளமைக்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களின் தலையீடுகளே காரணமென்பதே தனது நிலைப்பாடாகுமென சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்னவென்பதைக் கண்டறிவதற்கு ஆங்கிலம் அல்லது தமிழ்மொழி பேசக்கூடிய பௌத்த தேரர்கள் தமிழ் தலைவர்களுடன் கலந்துரையாடுவது இன்றியமையாதது என்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக்கூடாதென வலியுறுத்தி மல்வத்து, அஸ்கிரிய, அமரபுர மற்றும் ராமாஞ்ஞ பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் கடந்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கூட்டாகக் கடிதமொன்றைக் கையளித்திருந்தனர்.

அக்கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மேற்கோள்காட்டி, அவற்றுக்கு விளக்கமளித்து இந்நான்கு மகாநாயக்க தேரர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.



அக்கடிதத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் சிங்கள சமூகத்தின் மத்தியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், எனவே மகாசங்கத்தினரை விமர்சிப்பது ஏற்புடையதா? என்றும் எழுப்பப்பட்டுள்ள கேள்விக்கு பதிலளித்தே சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது; எனது கருத்துக்கள் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக நான் கருதவில்லை.

மாறாக அவை நேர்மறையான சூழ்நிலையொன்றையே தோற்றுவித்திருக்கின்றன. குறிப்பாக அரசியலில் பௌத்த தேரர்களின் வகிபாகத்தின் ஏற்புடைமை குறித்துப் பல சிங்கள பௌத்தர்கள் கேள்வியெழுப்ப ஆரம்பித்திருக்கின்றார்கள். நாட்டில் நிலவும் இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த தேரர்களால் மேற்கொள்ளப்படும் தலையீடுகளே காரணம் என்பதே எனது நிலைப்பாடாகும்.

வட, கிழக்கு வாழ் தமிழ்மக்களின் பிரச்சினைகள் என்னவென்பதைக் கண்டறிவதற்கு ஆங்கிலம் அல்லது தமிழ்மொழி பேசக்கூடிய பௌத்த தேரர்கள் தமிழ் தலைவர்களுடன் கலந்துரையாடுவது இன்றியமையாததாகும். போராட்டங்களில் ஈடுபடும் தேரர்களுக்கு, அதிகாரப்பரவலாக்கத்துக்கும் அதிகாரப்பகிர்வுக்குமிடையிலான வேறுபாடு தெரியவில்லை. ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கும் கூட்டாட்சி அரசியலமைப்புக்கும் இடையிலான வித்தியாசமும் தெரியவில்லை. அதுமாத்திரமன்றி அவர்களது தாய்மொழியின் வரலாறுகூட அவர்களுக்குத் தெரியாதுள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வில் குழப்பம் விளைவிக்க வேண்டிய தேவை அரசியல்வாதிக்கு இருக்குமாயின், அதற்குரிய உடனடி ஆதரவை பௌத்த தேரரிடமிருந்து இலகுவாகப் பெறமுடியும்.

'அந்த நபர் நாட்டைப் பிளவுபடுத்த முற்படுகின்றார்' அல்லது 'அந்த நபர் விடுதலைப்புலிகள் உறுப்பினர்' அல்லது அவர் இந்தியாவின் கைப்பொம்மை' போன்ற விடயங்களை மாத்திரம் அவர்களிடம் கூறினால் போதுமானதாகும். உடனே அவர்கள், காவி உடையுடன் வீதிக்கு இறங்கிவிடுவார்கள். அவர்கள் உண்மை நிலைவரத்தைப் புரிந்துகொள்ளாமல் 'சீன மத்தாப்பூ' போன்று உடனடியாக வெடித்துவிடுவார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# கணக்காய்வாளர் நியமன இழுத்தடிப்பு உடன் நடவடிக்கைக்கு வேண்டுகோள்

## சபையில் சாணக்கியன் எம்பி வலியுறுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்கும் விவகாரம் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருவதால், அது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி உடனடி தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பு எம். பி இராஜமாணிக்கம் சாணக்கியன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களென சம்பந்தப்பட்ட அனைவரும் அது தொடர்பில் பல தடவைகள் வாக்குறுதிகளை வழங்கி உள்ளபோதும், அந்த பிரச்சினைக்கு இன்று வரை தீர்வு காணப்படாமல் இன்னும் அது இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகிறது. அரசியல் நோக்கம் காரணமாகவே அதற்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்றும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையிலேயே, அது தொடர்பில் அவர் கேள்வி எழுப்பினார்.

அது தொடர்பில் தொடர்ந்தும் தெரிவித்த அவர், மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் 34 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கு முறையான சேவையை வழங்கும் வகையில் கணக்காளர் ஒருவரை நியமிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி, அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த போது அதற்கான பணிப்புரையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியிருந்தார்.

எனினும், இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை.

நாமல் ராஜபக்ஷ அமைச்சர் பதவி வகித்த காலத்திலும் அவர் அப்பகுதிக்கு விஜயம் செய்த போது இந்த பிரச்சனைக்கு உடனடி தீர்வு காணப்படும் என வாக்குறுதியளித்தார். எனினும் அதற்கான தீர்வு இதுவரை வழங்கப்படவில்லை.

பாராளுமன்றத்தில் நாம் பல தடவைகள் அது தொடர்பில் கேள்விகளை எழுப்பி விடயங்களை முன்வைத்தும், இதுவரை எந்த நிரந்தர தீர்வும் முன்வைக்கப்படவில்லை என்பதே உண்மை.

விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் அது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காய்வாளர் நியமிக்கப்படுவது தொடர்பில் எந்த அரசியல் நோக்கமும் கிடையாதென தெரிவித்தார்.

அந்த பிரதேச செயலகத்தின் நடவடிக்கைகளில் எந்த பிரச்சினையும் கிடையாது. அவ்வாறு பிரச்சனைகள் காணப்படுமானால் மீண்டும் அமைச்சின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

# தமிழ்ச் சங்க இலக்கிய களம்

கொழும்பு தமிழ்ச் சங்க தலைவர் நடராஜர் காண்டீபன் தலைமையில் நாளை (10) வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இலக்கியக்களம் நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் "ஸ்ரீதயாளன் பன்முகப் பணிகள்" என்னும் தலைப்பில் உரைகள் நிகழ்த்தப்படவுள்ளன.

கொழும்பு தமிழ்ச் சங்க துணைத் தலைவர், எழுத்தாளர் தி.ஞானசேகரன், கொழும்பு தமிழ்ச் சங்க பேரவை உறுப்பினர் காரைக்கவி கந்தையா பத்மானந்தன், கொழும்பு தமிழ்ச் சங்க நிதிச் செயலாளர் திரு. செல்வ திருச்செல்வன், கொழும்பு தமிழ்ச் சங்க இலக்கியக்குழுச் செயலாளர் திரு. தெ.மதுசூதனன் ஆகியோர் இங்கு உரை நிகழ்த்தவுள்ளனர். கொழும்பு தமிழ்ச் சங்க பேரவை உறுப்பினர் திரு.மு.சி.ஸ்ரீதயாளன் ஏற்புரையை நிகழ்த்தவுள்ளார்.

# இந்தியாவின் முன்னாள் விசேட தூதுவர் பார்த்தசாரதியுடன் மனோ கணேசன் சந்திப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் இலங்கைக்கான விசேட தூதுவர் "ஜீபி" என்றழைக்கப்படும் கோபாலசுவாமி பார்த்தசாரதி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனை நேற்று கொழும்பில் சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பில்,இந்திய தூதரக இரண்டாம் செயலாளர் அசோக்குமாரும் கலந்துகொண்டார். இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி கூறியதாவது,

கடுமையான நாட்களில், இலங்கை, இந்தியா, தமிழர்கள், சிங்களவர் ஆகிய அனைத்து தரப்புகளுக்கும் இடையே இயன்ற வரையில் நெகிழ்வு தன்மையுடன் சுழன்றோடி நம்பிக்கை தந்த கடும் பணிகளை



ஆற்றியவர், கோபாலசுவாமி பார்த்தசாரதி. அந்த கொடும் நாட்களை கடந்து வந்தவர்கள் பார்த்தசாரதியை மறக்க முடியாது.

தற்போது புதுடில்லி வான்வெளி சக்தி தொடர்பான இந்திய நிறுவனத்தில் இயக்குநராகவும், ஜம்மு பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ வேந்தராகவும், இந்திய கொள்கை வகிப்பில் உத்தியோகப்பற்றற்ற பங்காளராகவும் பணி செய்கிறார்.

இச் சந்திப்பின் போது, 1983-2023, இடைப்பட்ட நாற்பது வருடங்களில் நிகழ்ந்துள்ள புதிய மாற்றங்களை, எடுத்துக் கூறினேன். தமிழ் தரப்பில் இந்திய வம்சாவளி மலையக எழுச்சியை பற்றியும், ஈழத்தமிழர்களின் ஆதங்கங்கள் குறித்தும் உரையாடினோம். இலங்கை இந்திய உறவுகள், சர்வதேச புதிய நியமங்கள் பற்றியும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.



2022 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமை பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மே.மா/கம்/ஹொரகொல்ல, ஓர்ச்சட்வத்த முஸ்லிம் வித்தியாலய மாணவிகளான எம்.ஏ.எப் அமானி (155 புள்ளிகள்) எம்.எஸ்.எப் மஸ்னா (149 புள்ளிகள்) எம்.எப்.எப் ஸுமானா (147 புள்ளிகள்) ஆகியோர் அதிபர் ஏ.டப்ளியூ. அன்வர்தீன், பிரதி அதிபர் எம்.எஸ்.இஸட் முனவ்வரா மற்றும் வகுப்பாசிரியர் எம்.எம்.இஸட். நஸ்ஹா போன்றோருடன் காணப்படுகின்றனர்.

# ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்யும் இருநாள் செயலமர்வுகள் தர்கா நகரில்

**பேருவளை தினகரன் நிருபர்**

தர்கா நகர் மாதர் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலான ஆளுமை பண்புகளை விருத்தி செய்வது தொடர்பிலான இரு நாள் இலவச செயலமர்வு, தர்கா நகரில் அண்மையில் நடைபெற்றது.

தர்கா நகர் ஸாஹிரா கல்லூரி,அல் ஹம்ரா மகா வித்தியாலயம்,அளுத்கமை வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை உட்பட பிற பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் பரீட்சை எழுதிய மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

தர்கா நகரைச் சேர்ந்த சமூக நலன் விரும்பிகளின் பூரண பங்களிப்புடன் இடம்பெற்ற இச்செயலமர்வில், 80க்கும் மேற்பட்ட மாணவியர்கள் இதில்,கலந்து கொண்டனர்.

மாதர் ஒன்றிய தலைவியும் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளருமான நூருல் பாக்கியா கரீம் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வின், முதல் நாள் செயலமர்வில் உளப் பரிசுத்தம்" எனும் தலைப்பிலும்,டொக்டர் பாத்திமா ஹிமாஸா "ஆரோக்கிய வழிகாட்டல்" எனும்



தலைப்பிலும் திருமதி பாத்திமா மஷ்ஹூரா "குடும்ப வாழ்வு" எனும் தலைப்பிலும், அரும்பு சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் ஓய்வு பெற்ற அதிபருமான வை.ஐ.எம். ஹாபிஸ் இஸ்ஸதீன் "நேர முகாமைத்துவம்" எனும் தலைப்பிலும் உரையாற்றினர்.

இரண்டாவது செயலமர்வில், மௌலவியா பாத்திமா சமீனா "மன ஓர்மை" எனும் தலைப்பிலும், மௌலவி எம்.அர்ஷத் "அன்றாட வாழ்வில் இஸ்லாம்" எனும் தலைப்பிலும்,அஸ்மியா ஸஹீட் "சமூகப் பொருத்தப்பாடும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் திறனும்" எனும் தலைப்பிலும்,எம்.என்.முஹம்மத் "ஊடகப் பாவனை" எனும் தலைப்பிலும்,மௌலவி எம்.அம்ஹர் "தஸ்கியதுல் நப்ஸ்" எனும் தலைப்பிலும்,டொக்டர் முஸ்லிஹா ஜிப்ரி "உளவளத்துறை" எனும் தலைப்பிலும் உரையாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# அரசின் உத்தரவாத விலையை மீறி நெல் கொள்வனவு

**திறப்பனை தினகரன் நிருபர்**

பெரும் போகத்தில் செய்கை பண்ணப்பட்ட நெல்லை கிலோ நூறு ரூபாவுக்கு கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ள போதும், 82, 84 ரூபாவுக்கே நெல் கொள்வனவு செய்யப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தனியார் வியாபாரிகள் சிலரே இவ்வாறு அரசாங்கத்தின் தீர்மானத்தையும் மீறி குறைந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரம் மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்யப்படும் நெல்லில் ஈரப்பதன் உள்ளதாகக் கூறியே, இவர்கள் விலையைக் குறைத்து கொள்வனவு செய்கின்றனர்.

வயல் நிலங்களுக்கு நேரடியாகச் சென்றுதான் நெல் கொள்வனவு இடம்பெறுகிறது. சில விவசாயிகள் அரிசி ஆலைக்குச் சென்று நெல்லை விற்பனை செய்கின்றனர்.

# முன்பள்ளி பாடசாலைக்கு மாணவர்கள் அனுமதி



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் ஐ.எப்.எம் முன்பள்ளி பாடசாலைக்கு (2023) ஆண்டுக்கான புதிய மாணவர்களை அனுமதிக்கும் வித்தியாரம்ப நிகழ்வுகள் அண்மையில் (02) பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக முன்பள்ளியின் பழைய மாணவரும், புத்தளம் நகர பிதாவுமான எம்.எஸ்.எம்.ரபீக் கலந்து கொண்டார்.

நகர சபை உறுப்பினர்களான ரனீஸ் பதியுதீன், சிஹான் ஆரிப், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம்.நவவி, சமூக ஆர்வலர் ஆசிரியர் எஸ்.ஆர்.எம்.முஹுஸி, தொழில் அதிபர் எம்.எஸ்.எம்.நஸ்மீர், பிரதேச கிராம அதிகாரி எம்.ஆர்.ஜிப்ரி, அரசியல் பிரமுகர் எம்.என்.நுஸ்கி உள்ளிட்ட நகர சபை அதிகாரிகள், முன்பள்ளிகளின் ஆசிரியைகள், பெற்றார்கள் பலரும் கலந்து கொண்டனர்.

51ஆவது அகவையில் காலடி வைக்கும் இம்முன்பள்ளி, புத்தளம் நகரில் தமிழ் மொழி மூலம் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது முன்பள்ளியாகும். புதிதாக சேர்ந்த மாணவர்களை இவ்வருடம் அரச பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், மலர்ச் செண்டுகள், இனிப்புகள் வழங்கி வரவேற்றனர்.

இதன்போது ஆசிரியர் எஸ்.ஆர்.எம்.முஹ்ஸி முன்பள்ளிக்கு ஒரு தொகுதி கதிரைகளை அன்பளிப்புச் செய்தார்.

மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இங்கு அரங்கேற்றப்பட்டன.



சம்மாந்துறை ஹிஜ்ரா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுவிழா அதிபர் வை.பீ. முஹம்மத் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மல்வத்தை இராணுவப்பிரிவின் 24வது காலாட் படைப்பிரிவின் மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறிக்கு, வித்தியாலய அதிபர் வை.பீ.முஹம்மத் இஸ்மாயில் நினைவுப்பரிசு வழங்குவதை படத்தில் காணலாம். (படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

# நந்தவனம் பவுண்டேசன் ஏற்பாட்டில் சாதனைப் பெண்களுக்கு விருது

மகளிர் தினத்தையொட்டி நந்தவனம் பவுண்டேசன் நடத்தும் விருது வழங்கும் விழா எதிர்வரும் (12) ஞாயிற்றுக்கிழமை சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பார்க் எலேன்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

லிம்ரா பேக்ஸ் பிரைவட் லிமிட்டட் வழங்கும் இவ்விழாவில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், சென்னை மதுரா டிரவல்ஸ் நிறுவனத்தின் தலைவர் வி.கே. டீ. பாலன், கனடா விழித்தெழு பெண்கள் அமைப்பின் இயக்குநர் சசிகலா நரேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

நந்தவனம் பவுண்டேசனின் தலைவர் நந்தவனம் சந்திரசேகர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

இவ்விழாவில் 25 பெண்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த அமிர்தரத்தினம் ருத்ரா, சந்திரிக்கா நிரோசன், கீர்த்திகா மித்ரன், தஸ்யானி ரந்தீப், கவிதா பாரதி, பிரபா அன்பு ஆகியோர் உட்பட 25 பேர் இவ்விழாவில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுவர். இவர்களைத் தவிர இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண்களுக்கும் விருதுகள் வழங்கப்படவுள்ளன.



பிரதமர் தினேஷ் குணவர்தனவின் 74ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலைக்கு கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. தேசிய காங்கிரஸின் அட்டாளைச்சேனை மத்திய குழுவின் பொருளாளரும்,தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உத்தியோகத்தருமான ஏ.ஆர்.எம்.றிப்கான் இவற்றை வழங்கினார். பாடசாலை அதிபரிடம் கைதிரைகள் கையளிக்கப்படுவதை படத்தில் காணலாம்.பிரதியதிபரும் அருகில் காணப்படுகிறார். (படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

# பாரம்பரிய சீன மருத்துவ முகாம்


Dr.Ma Jiaci


Dr.Tharmalingam Tharesanan
Chairman
MIF Sri Lanka










Mother care International Global Foundation MIF Sri Lanka என்பது தெற்காசியாவின் முதன்மை வாய்ந்த சமூக மற்றும் நிலைபேரான அபிவிருத்தி அமைப்பாகும்.

கடந்த 10 வருடங்களாக பல்வேறு சமூக அபிவிருத்தி திட்டங்களை நிலைநாட்டிவந்த MIF Sri Lanka அமைப்பின் ஒரு முக்கிய திட்டமாக One belt, one Road Traditional Chinese Medicine Enters Large Scale Public Welfare Event in Sri Lanka. என்ற பெயரின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது. உலகப் பிரபலம் வாய்ந்த பாரம்பரிய சீன வைத்தியத்தின் மூலம் இலங்கையின் சுகாதார துறையில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்துவதே இந் நிகழ்வின் நோக்கமாகும்.

இந்த மருத்துவ முகாமில் உலக பிரபலம் வாய்ந்த பாரம்பரிய சீன மருத்துவர் Dr. Ma Jiaci மற்றும் மருத்துவர்களான Dr. Ma Jiakun, Dr. Yu hening கலந்து சிறப்பித்தார்கள்.

★ இந்த மருத்துவ முகாமானது 2023 Feb 25 மற்றும் 26ம் திகதிகளில் Colombo Lotus Tower இல் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வானது MIF Sri Lanka அமைப்பின் கௌரவ தலைவர் / பணிப்பாளர் நாயகம். Dr. Tharmalingam Tharesanan அவர்களின் தலைமையில், சர்வதேச ஒருங்கிணைப்பாளர் Mrs. Cyntia chan அவர்களின் வழிகாட்டலில் சிறப்பாக இடம் பெற்றது. இந்த முகாமில் 200 இற்கும் மேற்பட்ட சுகயீனமுற்றோர்/ நோயாளர்கள் பங்குபற்றி பூரண பயன்பெற்றனர்.

இலங்கையின் சுகாதார துறையில் ஒரு திருப்புமுனையாக எதிர்காலத்தில் Tcm மருத்துவ முறையை முன்னேற்றமடையச் செய்து வளம் மிக்க நாட்டை கட்டியெழுப்புவதே MIF அமைப்பின் குறிக்கோளாகும்.

































# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 108 நிஸான் கார் விற்பனைக்கு

301-1825 NISSAN E-B14 Motor Car 1996 - Silver கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் இல. 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 200272. 015344

### 118 ஜீப்புகள்,பிக்கப்புகள் விற்பனைக்கு

NW PT-2321 TATA 207D1 Single Cab 2012 - Dark Neptue Blue கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் இல. 187, கட்டுக ஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 200272. 015329

WP CAL-2040 Nissan X-Trail, 2015, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 015313

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

WP HH-5744 TATA LPT2515 Motor Lorry 2003 - Red Green Yellow கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் இல. 187, கட்டுக ஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 200272. 015317

WP LH-5469 LANKA ASHOK LEYLAND TAURUS 2516 Motor Lorry 2010 - White கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் இல. 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 200272. 015325

WP LJ-7317 TATA LPT2516 Motor Lorry 2011 - Black Green White கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் இல. 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 200272. 015337

WP PS-1218 TATA Ace, 2011, WP DAD-0741 Tata Ace, 2016, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 015326

48-1191 NISSAN, 1990, 47-3726 N ISSAN, 1 989, lor ries கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714542 958 . 015323

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SP AAY-2392 Bajaj, 2015, WP ABO-1097 Bajaj, 2016, WP QD-4695 Bajaj, 2005, SG YR-5837 Bajaj, 2011, NC YV-5837 Bajaj, 2011 T h reewh ee l கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 015318

Repeat Your ad For Better Offers

---

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## ரூ.180,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

22.00%2024'A' தொடர்களின் கீழ் ரூ. 70,000 மில்லியனையும், 18.00%2027'A' தொடர்களின் கீழ் ரூ.110,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2023 மார்ச் 13ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 22.00%2024'A' | 18.00%2027'A' |
|---|---|---|
| ISIN* | LKB00224K150 | LKB00527E019 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 70,000 மில்லியன் | ரூ. 110,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 22.00% ஆண்டொன்றிற்கு | 18.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2022 நவெம்பர் 15 | 2022 மே 01 |
| **முதிர்வுத் திகதி** | **2024 நவெம்பர் 15** | **2027 மே 01** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 மே & 15 நவெம்பர் | 01 மே & 01 நவெம்பர் |
| ஒன்றுசேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 7.2928 | ரூ. 100 இற்கு ரூ. 6.6630 |
| ஏல விற்பனைத் திகதி | 2023 மார்ச் 13, திங்கட்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2023 மார்ச் 13, திங்கட்கிழமை மு.ப. 11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2023 மார்ச் 15** | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்வெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சீ. வீரசிங்க**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/ பதிவாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்,
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

---

# மட்டக்களப்பில் அநாதரவாக தவித்த யானை, மான் குட்டிகள் மீட்பு





**புளியந்தீவு குறூப் நிருபர்**

அநாதரவான நிலையில் காணப்பட்ட யானைக் குட்டி ஒன்றையும் மான் குட்டி ஒன்றையும் சேனைப்பயிர்ச் செய்கையாளர்களின் உதவியோடு மட்டக்களப்பு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் காப்பாற்றியுள்ளதாக, அத்திணைக்களத்தின் மாவட்ட அதிகாரி ஏ.ஏ.கலீம் நேற்று (08) தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வந்த நிலையில், மூன்று அடி உயரமான யானைக் குட்டியும் ஒன்றரை அடி உயரமான மான் குட்டியும் அநாதரவான நிலையில் இருப்பதை மட்டக்களப்பு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை அவதானித்துடன், அவற்றை பாதுகாப்பாக காப்பாற்றினர்.

யானைக் குட்டி செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மயிலம்தன்னை சேனைப்பயிர்ச் செய்கையாளர்கள் வாழும் பிரதேசத்திலிருந்தும் மான் குட்டி பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அடர்ந்த காட்டுப் பிரதேசமான பன் சேனையிலுமிருந்தும் மீட்கப்பட்டன.

மான் குட்டியை அம்பாறை மாவட்டத்துக்கான வனவிலங்கு அதிகாரி தனது பொறுப்பில் எடுத்து அதற்கான வைத்திய சேவையை வழங்கி வருவதோடு, மான் குட்டிக்கு இனிமேல் உயிர் ஆபத்தே ஏற்பட இடமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

யானைக் குட்டியை தமது திணைக்கள அதிகாரிகள் நன்கு பராமரித்து வந்தனர். அது உயிர் ஆபத்திலிருந்து மீண்டு விட்ட நிலையில், அதனைத் தேடி யானைக் கூட்டங்கள் வந்ததால் அதனைக் கட்டியிருந்த சங்கிலியை கழற்றி விட்டதாகவும் அது தமது கூட்டத்தினரோடு சந்தோஷமாக சேர்ந்து கொண்டதாகவும், அவர் தெரிவித்தார்.

# நாவிதன்வெளி அன்னமலை வித்தியாலய வரலாற்றில் முதல் பெண் அதிபர் நியமனம்

**காரைதீவு குறூப் நிருபர்**



அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தின் அதிபராக நிலந்தினி ரவிச்சந்திரன் அண்மையில் தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

1936ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் 87 வருட வரலாற்றில் பெண்மணி ஒருவர் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டமை இதுவே முதல் தடவையாகும்.

இப்பாடசாலையில் ஏற்கெனவே அதிபராக இருந்து வந்த சீ.பாலசிங்கன் தனது 60ஆவது வயதில் ஓய்வு பெற்றதை அடுத்து இந்த நியமனம் மேற்படி புதிய அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய அதிபரின் பதவியேற்பு நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.வை.யாசிர் அரபாத், கோட்டக் கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

# விலை மனுக்களுக்கான அழைப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வவுனியா

## வேலைகள் மற்றும் வழங்கல் சேவை

கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகள், சேவைகள் வழங்கக்கூடிய பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அ. வேலைகள்**

| S. No | Bid Number | Description of work | Estimate Mn without VAT | Contact period | Non-refundable fee without VAT | Refundable Bid Bound/ Validity | ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/04/43/03/BCP/**PSSP**/2023/01 | Renovation of Existing Building as an MO Quarters PMCU Kanagarayankulam | 2.48 | 60 days | 2,000.00 | 25,000.00 22/06/2023 | C9,C8 & C7 |
| 02 | NP/04/43/03/BCP/**PSSP**/2023/04 | Improvement of Infrastructure PMCU, Sooduventhapulavu | 0.98 | 60 days | 2,000.00 | 10,000.00 08/06/2023 | C9 & C8 |
| 03 | NP/04/43/03/BCP/**PSSP**/2023/05 | Renovation of PHM Quarters DH, Poovarasankulam | 0.98 | 60 days | 2,000.00 | 10,000.00 08/06/2023 | C9 & C8 |
| 04 | NP/04/43/03/BCP/**PSSP**/2023/08 | Construction of Staff Quarters DH, Omanthai | 6.40 | 90 days | 2,000.00 | 65,000.00 06/07/2023 | C8,C7 & C6 |
| 05 | NP/04/43/03/BCP/**PSSP**/2023/13 | Construction of Staff Quarters DH-Pavatkulam | 5.86 | 90 days | 2,000.00 | 60,000.00 06/07/2023 | C8,C7 & C6 |
| 06 | NP/04/43/03/BCP/**PSSP**/2023/14 | Construction of Paramedical Quarters-PMCU Bogaswewa | 5.86 | 90 days | 2,000.00 | 60,000.00 06/07/2023 | C8,C7 & C6 |
| 07 | NP/04/43/03/BCP/**PSSP**/2023/17 | Completion of PMCU Echchankulam | 8.53 | 90 days | 2,000.00 | 90,000.00 06/07/2023 | C8,C7 & C6 |

**அ. வைத்தியசாலைகளுக்கான உணவு வழங்கல் சேவை**

| | Description | Contract No | Location | Non-refundable fee without VAT | Refundable Bid Bound/ Validity date |
|---|---|---|---|---|---|
| 1 | Supply of Cooked meals (Agreement period-12M) | NP/04/43/02/Coc.S/2023/02 | Divisional Hospital, Mamadu | 2,000.00 | 20,000.00 08.06.2023 |
| 2 | | NP/04/43/02/Coc.S/2023/06 | Divisional Hospital, Puliyankulam | 2,000.00 | 20,000.00 08.06.2023 |
| 3 | | NP/04/43/02/Coc.S/2023/07 | Divisional Hospital, Ulukulam | 2,000.00 | 20,000.00 08.06.2023 |
| 4 | | NP/04/43/02/Coc.S/2023/05 | Divisional Hospital, Sithamparapuram | 2,000.00 | 20,000.00 08.06.2023 |
| 5 | | NP/04/43/02/Coc.S/2023/01 | Divisional Hospital, Nedunkeny | 2,000.00 | 20,000.00 08.06.2023 |
| 6 | | NP/04/43/02/Coc.S/2023/04 | Divisional Hospital, Poovarasankulam | 2,000.00 | 20,000.00 08.06.2023 |
| 7 | | NP/04/43/02/Coc.S/2023/03 | Divisional Hospital, Neriyakulam | 2,000.00 | 20,000.00 08.06.2023 |
| 8 | Supply of Dry food(Agreement period-12M) | NP/04/43/02/Rw.S/2023/07 | Base Hospital, Cheddikulam | 3,000.00 | 60,000.00 22.06.2023 |

1. தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறை மூலம் கேள்விகள் கோரப்படும்.
2. ஒவ்வொரு பிரிவுக்காகவும் எழுத்துமூலமான விண்ணப்பத்தை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு (தொ.பே இல 0242224865, தொலை நகல் 024 2222892) சமர்ப்பிப்பதுடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை பணிமனையின் கணக்கு கிளையில் செலுத்தி 09.03.2023 தொடக்கம் 22.03.2023 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 15.00 மணிவரை ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றினை பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைமனுக்கள் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மன்னார் வீதி, வவுனியா என்ற முகவரிக்கு 23.03.2023 அன்று மு.ப 10.00 மணிக்கு முன்னதாக சேர்த்தல் அல்லது பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும், பங்கேற்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் 23.03.2023 அன்று மு.ப 10.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் வேலை நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணி வரை விலைமனுக்களை பரீட்சிக்கமுடியும்.
5. விலைமனுவுக்கு முந்திய மாநாடு 2ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் 16.03.2023 அன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.
6. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவலின்படி மீளளிக்கப்படக்கூடிய விலைமனுப் பிணையை கொண்டதாக விலை மனுக்கள் இருத்தல் வேண்டும்.

**வைத்தியர். மு. மகேந்திரன்.**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**வவுனியா.**

**09.03.2023**

---

# மஹர பிரதேச சபை

## திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான திறந்த விலைமனுக்களைக் கோரல்

**(காலம்: 2023.05.26 முதல் 2024.12.31 வரை)**

மஹர பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் இரு வீதிகளில் (மஹர சந்தியின் இருந்து கொகிஸ் கடை சந்தி வரை கண்டி வீதி, மஹர சந்தி முதல் எண்டேரமுல்ல வரை பன்சல வீதி மற்றும் தேவைப்பாட்டின் அடிப்படையில் வேறு பிரதேசங்களிலும்) குப்பைகளை அகற்றுவதற்காக சுத்திகரிப்பு முகாமைத்துவம் பற்றிய அனுபவம் உள்ள நிறுவனங்களிலிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. இவ் ஒப்பந்தத்தின் குப்பைகளை அகற்றும் இடத்தை உறுதியாக குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் மனித வாழ்வுக்கு பாகதமற்ற இடமாக இருத்தல் வேண்டும். அத்துடன் சுற்றாடல் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.
02. குறித்த துறையில் தமக்குள்ள திறமை மற்றும் அனுபவம் பற்றி சபை திருப்திப்படுமாறு விடயங்கள் மற்றும் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. மஹர பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் குறித்த பாதைகளில் குப்பைகளை சேகரித்து போக்குவரத்துச் செய்து அகற்றுவதற்காக குப்பை 01 தொன் சார்பாக அறவிடப்படும் கட்டணத்தை குறிப்பிடுதல் வேண்டும். வெட் உடனா, வெட் இன்றியா என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.
04. உக்கிப்போகும், உக்கிப் போகாதது என குப்பைகளை வேறாக்கி சேகரித்தல் வேண்டும். இங்கு நிறையளவு அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். தேவைப்பாட்டின் அடிப்படையில் உக்கிப்போகாத குப்பைகளையும் சேகரித்தல் வேண்டும்.
05. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் கேள்வி வைக்கும் முழுமையான ஆவணத் தொகுதியொன்றை 2023.03.09 முதல் 2023.04.10 பி.ப. 2.00 வரை மீளளிக்கப்படாத ரூ. 2500/- தொகையை தவைவர், மஹர பிரதேச சபை, பஹல கரகஹமுன முகவரிக்கு வருகைதந்து காசாக செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்கள் 2023.04.11 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு கேள்விப் பிணையாக மஹர பிரதேச சபையின் காசாளரிடம் காசாக செலுத்தும் ரூ. 40,000 மீளளிக்கப்படும் வைப்புப் பற்றுச்சீட்டுடன் தலைவர், மஹர பிரதேச சபை, பஹலகரகஹமுன, கடவத்த என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது மஹர பிரதேச சபையின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் 02 பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென்று குறிப்பிட்டு வேறுவேறாக இரு உறைகளில் உள்ளிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் விலைமனுக்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
08. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “திண்மக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான விலைமனுக் கோரல்” என்று குறிப்பிடுதல் வேண்டும்.
09. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் ஏற்கப்பட்ட தினம் முதல் 2024.12.31 வரை செல்லுபடியாகுதல் வேண்டும்.
10. கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை மஹர பிரதேச சபைக்கு உரியது.

**தலைவர்,**
**மஹர பிரதேச சபை (011-2927076)**
**2023.03.03**




Repeat Your Ad For Better Offers


**பெயர் மாற்றம்**

ஒலுவில்-01, அஷ்றப் நகர், 103ல் வசித்து வரும் (மட்டக்களப்பைச் சேர்ந்த) சிவநேசகுரு பாசமலர் ஆகிய நான் 1993.08.10ந் திகதியிலிருந்து எனது சுய விருப்பின் பேரில் புனித இஸ்லாம் மார்க்கத்தை ஏற்று, எனது பெயரை சிவநேசகுரு சம்ஷாத் பேகம் என மாற்றிக் கொண்டேன் என்றும், இனிமேல் சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்தி ஒப்பமிடுவேன் என்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிற்கும், பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**- சிவநேசகுரு சம்ஷாத் பேகம்.**

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

# விலைக்கோரலுக்கான அழைப்பு

## கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள பயணப்பொதி ட்ரொலிகளில் விளம்பரம் செய்தல்

**(விலைக்கோரல் இலக்கம். 001/Q/CP/2022)**

**(ADVERTISING ON BAGGAGE TROLLEYS AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT (BIA), KATUNAYAKE)**

03 வருட காலத்திற்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள 1,750 பயணப்பொதிகள் ட்ரொலிகளில் விளம்பரம் செய்வதற்காக புகழ்பெற்ற விளம்பர நிறுவனங்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விளம்பரத்திற்காக வழங்கப்படும் குறைந்தபட்ச ட்ரொலிகளின் எண்ணிக்கை 250 ஆகும். வெற்றிகரமான விலைமனுதாரர் தமது சொந்த அல்லது அவர்களின் முதன்மை நிறுவனம் / வர்த்தக நாமத்தை அல்லது தங்கள் வாடிக்கையாளர்கள் விளம்பரங்களை பயணப்பொதி ட்ரொலிகளில் பயன்படுத்துதல் வேண்டும்.

இதற்கான விதிமுறைகளும் வரையறைகளும் மற்றும் குறித்த ஏனைய தகவல்கள் விலைக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். விலைக்கோரல் ஆவணங்களை, 2023 மார்ச் 28ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 09.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணிவரையிலான காலப்பகுதிக்குள் நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றை முன்வைப்பதன் பேரில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனையக் கட்டிடத்தில், 02ஆம் மாடியில், 34ஆம் இலக்க அறையில் அமைந்துள்ள வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேலும் விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் www.airport.lk என்ற இணையதளத்திலிருந்தும் தரவிறக்கம் செய்யலாம்.

நிறுவனத்தினால் வழங்கப்படும் விலைக்கோரல் மாதிரிப்படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், வங்கி வரைவு, வங்கி உத்தரவாதம் அல்லது காசாக பிணை முறை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இயக்குபவர் ஒவ்வொரு ட்ரொலியின் பொருட்டும் 1,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் பிணைமுறியை இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் அல்லது இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைக்குள்ளே செயல்படும் உரிமம் பெற்ற விஷேட வங்கியொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவாக அல்லது பிணைமுறியாக அல்லது பணமாக முன்வைக்க முடியும். விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 150 நாட்கள் செல்லுபடியாகும் அல்லது தேவைப்பட்டால் வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினால் நீடிக்கப்படக் கூடியதாகவிருத்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023 மார்ச் 20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெறும்.

முத்திரை குறியிடப்பட்ட விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்க விலைக்கோரல் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்கள் 2023 மார்ச் 29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். இயைபுடைய தரப்பினர் அல்லது அவரால் முறையாக அங்கீகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கேள்விகள் தொடர்பான அனைத்து விபரங்களையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பயணிகள் முனையக் கட்டிடத்தின் 2ஆம் மாடி, 31ஆம் இலக்க அறையிலுள்ள வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவிலிருந்து 011-2264006, 011-2252744 எனும் தொலைபேசி இலக்கங்களில் அல்லது head.cp@airport.lk எனும் மின்னஞ்சலினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

# விலைமனுக்கோரல்

## கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள பயணிகள் வருகை சுங்கத் தீர்வையற்ற கட்டிடத் தொகுதியின் 2ஆம் மாடியில் விளம்பர உரிமைக்காக தேசிய போட்டி ரீதியில் விலைமனு கோரல்

**விலைக்கேள்வி இலக்கம். 0085/T/2022)**

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE FRANCHISE OF ADVERTISING IN THE 2ND FLOOR OF ARRIVAL DUTY FREE COMPLEX AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT KATUNAYAKE)**

03 வருட கால தவணை ஒப்பந்தத்திற்காக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள பயணிகள் வருகை சுங்கத் தீர்வையற்ற கட்டிடத் தொகுதியின் 2ஆம் மாடியில் விளம்பர உரிமைக்காக புகழ்பெற்ற விளம்பர நிறுவனங்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விளம்பர உரிமையைப் பெற்றுக்கொண்டவர் அவருக்கு வழங்கப்பட்ட விளம்பர உரிமையை உப நிறுவனத்திற்கு வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. விளம்பர உரிமை ஒப்பந்தத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட குறைந்தபட்ச விளம்பர இடமானது பின்வரும் வகையில் 18 அமைவிடங்களில் இருத்தல் வேண்டும். (1,125.70 சதுர அடிகள்).

(i) வீடியோ மதில் - 02 அமைவிடங்கள் (564.79 சதுர அடிகள்)
(ii) ஒளிரும் பெட்டி - நிலையான விளம்பரங்கள் - 13 அமைவிடங்கள் (484.96 சதுர அடிகள்)
(iii) ஸ்டிக்கர் விளம்பரங்கள் - 03 அமைவிடங்கள் (75.95 சதுர அடிகள்)

இதற்கான விதிமுறைகளும் வரையறைகளும் மற்றும் குறித்த ஏனைய தகவல்கள் விலைக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். அக்குறித்த ஒரு தொகுதி விலைக்கோரல் ஆவணங்களை, 2023 மார்ச் 28ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 09.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணிவரையிலான இடைப்பட்ட காலப்பகுதிக்குள் நிறுவனக் கடிமத் தலைப்பில் எழுத்துமூலமான வேண்டுகோள் முன்வைக்கப்பட்டு மீளளிக்கப்படாத 25,000/= ரூபா பணம் செலுத்தி, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனையக் கட்டிடத்தில், 02ஆம் மாடியில், 34ஆம் இலக்க அறையில் அமைந்துள்ள வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் www.airport.lk என்ற இணையதளத்திலிருந்தும் மீளளிக்கப்படாத 25,000/= ரூபா கட்டணத்தை நிகழ்நிலை (online) மூலமாகச் செலுத்தி கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யலாம். விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவுத் தலைவரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

நிறுவனத்தினால் வழங்கப்படும் விலைக்கோரல் மாதிரிப்படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு விலைக்கோரல் ஆவணத்தின் பொருட்டும் 2,650,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் பிணைமுறியானது விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் விலைக்கோரல் ஆவணங்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் செல்லுபடியான விதத்தில் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது உள்நாட்டு வங்கியினூடாக வெளிநாட்டு வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கி வரைவாகவோ அல்லது மீளப்பெற முடியாத உத்தரவாதமாக அல்லது பணமாக முன்வைக்க முடியும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தைத் தொடர்ந்து விளம்பரத்திற்காக அடையாளம் காணப்பட்ட இடங்களை பார்வையிடும் தள விஜயம் 2023 மார்ச் 21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இலங்கை, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பறும். முத்திரை குறியிடப்பட்ட விலைமனுக்களை தலைவர், கேள்விப்பத்திர சபை இலக்கம் 01, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு நேரடியாக கையளிக்கலாம். விலைமனுக்கள் 2023 மார்ச் 29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுதாரர் அல்லது அவரால் முறையாக அங்கீகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கேள்விகள் தொடர்பான அனைத்து விபரங்களையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பயணிகள் முனையக் கட்டிடத்தின் 2ஆம் மாடி, 31ஆம் இலக்க அறையிலுள்ள வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவிலிருந்து 011-2264000, 011-2264006 எனும் தொலைபேசி இலக்கங்களில் அல்லது head.cp@airport.lk எனும் மின்னஞ்சலினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சு

**சிறைச்சாலைகள் திணைக்களம்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கான உணவுப் பொருட்களின் பெறுகை - 2023/2024

**ஒப்பந்த அடையாள இல. PRI/SUP/RATION/2023/2024**

01. நாடெங்கிலுமுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்களின் வகைகளை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்காக தகுதியுடைய இலங்கை வர்த்தக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களிடமிருந்து சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கான உணவுப் பொருட்களின் பெறுகைக்கு சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சார்பில் அமைச்சரவை நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக்குழு (SCAPC) தலைவரினால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வழங்கல் காலம் 2023 ஜூலை 16ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூலை 15ஆம் திகதி வரை.

**அட்டவணை 01 - நிறுவனங்களின் குழுமம் மற்றும் தொடர்புடைய வகுதிகள்**

| இல. | நிறுவனங்கள் | முகவரி | வகுதிகள் |
|---|---|---|---|
| 01. | அம்பேபுஸ்ஸ | பபோத மெத் செவன, சிறைச்சாலை முகாம், அம்பேபுஸ்ஸ | 1. பாண்<br>2. தேங்காய்<br>3. கருவாடு<br>4. உலர் உணவுகள்<br>5. முட்டை<br>6. மீன்<br>7. பழங்கள்<br>8. இறைச்சி<br>9. இலை மரக்கறி<br>10. அரிசி<br>11. மரக்கறி |
| 02. | அங்குனுகொலபெலஸ்ஸ | இலங்கை சிறைச்சாலை, அங்குனுகொலபெலஸ்ஸ | |
| 03. | அனுராதபுரம் | இலங்கை சிறைச்சாலை, அனுராதபுரம் | |
| 04. | பதுளை | இலங்கை சிறைச்சாலை, பதுளை | |
| 05. | மட்டக்களப்பு | இலங்கை சிறைச்சாலை, மட்டக்களப்பு | |
| 06. | பூஸா | இலங்கை சிறைச்சாலை, பூஸா | |
| 07. | கொழும்பு விளக்கமறியல் | கொழும்பு விளக்கமறியல் சிறை, கொழும்பு 09 | |
| 08. | தலுபொத்த | இளம் குற்றவாளிகளுக்கான சீர்திருத்த நிலையம், தலுபொத்த, பள்ளன்சேன, நீர்கொழும்பு | |
| 09. | தும்பர | இலங்கை சிறைச்சாலை, தும்பர, பல்லேகலை, குண்டசாலை | |
| 10 | காலி | இலங்கை சிறைச்சாலை, காலி | |
| 11. | ஹங்கிலிபொல | சிறைச்சாலை பணி முகாம், ஹங்கிலிபொல | |
| 12. | யாழ்ப்பாணம் | இலங்கை சிறைச்சாலை, யாழ்ப்பாணம் | |
| 13. | கந்துருகஹசார | சிறைச்சாலை பணி முகாம், கந்துருகஹசார, துன்கம | |
| 14. | களுத்துறை | இலங்கை சிறைச்சாலை, களுத்துறை வடக்கு களுத்துறை | |
| 15. | கேகாலை | இலங்கை சிறைச்சாலை, கேகாலை | |
| 16. | குருவிட்ட | இலங்கை சிறைச்சாலை, குருவிட்ட | |
| 17. | மஹர | இலங்கை சிறைச்சாலை, மஹர, ராகம | |
| 18. | மாத்தறை | இலங்கை சிறைச்சாலை, மாத்தறை | |
| 19. | மீத்திரிகல | சிறைச்சாலை பணி முகாம், மீத்திரிகல | |
| 20. | மொனராகலை | இலங்கை சிறைச்சாலை, மொனராகலை | |
| 21. | நீர்கொழும்பு | இலங்கை சிறைச்சாலை, நீர்கொழும்பு | |
| 22. | புதிய மெகசின் | புதிய மெகசின் சிறைச்சாலை, கொழும்பு 09 | |
| 23. | பல்லேகலை | திறந்த சிறைச்சாலை பணி முகாம், பல்லேகலை | |
| 24. | பொலன்னறுவை | இலங்கை சிறைச்சாலை, பொலன்னறுவை | |
| 25. | தெல்தென | இளம் குற்றவாளிகளுக்கான சீர்திருத்த மத்திய நிலையம், தெல்தென | |
| 26. | திருகோணமலை | இலங்கை சிறைச்சாலை, திருகோணமலை | |
| 27. | வவுனியா | இலங்கை சிறைச்சாலை, வவுனியா | |
| 28. | வாரியபொல | இலங்கை சிறைச்சாலை, வாரியபொல | |
| 29. | வட்டரெக்க | இளம் குற்றவாளிகளுக்கான பயிற்சிப் பாடசாலை மற்றும் சிறைச்சாலை பணி முகாம், வட்டரெக்க, பாதுக்க | |
| 30. | வீரவில | சிறைச்சாலை பணி முகாம், கோனகமுவ, உடுவில | |
| 31. | வெலிக்கடை | இலங்கை சிறைச்சாலை, வெலிக்கட, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09 | |

1.1 உணவுப் பொருட்களின் ஒவ்வொரு வகுதிகள் தொடர்பிலான விபரங்கள் மற்றும் விவரக்குறிப்புகள் என்பன விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.

1.2 ஒவ்வொரு சிறைச்சாலை நிறுவனம் மற்றும் உணவுப் பொருட்கள் வகுதிகளின் கீழ் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்

1.2.1 தனித்தனியாக ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்காக நிறுவன அடிப்படையில் மற்றும் பிரிவு அடிப்படையில் விலைமனுக்கள் சமர்ப்பித்தல் வேண்டும். சிறைச்சாலையின் குறிப்பிட்ட பிரிவின் விலைமனு ஒன்றுக்காக விலைமனுதாரர் அந்தப் பிரிவின் அனைத்து உருப்படிகளுக்காகவும் விலைக்கோரலை மேற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட பிரிவில் விலைமனுதாரர்கள் அனைத்து உருப்படிகளுக்கும் விலைகோரத் தவறினால், அவ்வாறான விலைமனு பதிலளிக்காதவையாக கருதப்படும்.

1.2.2 எந்த ஒரு விலைமனுதாரருக்கும் ஒரு நிறுவனம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு மற்றும் தனித்தனியான உருப்படிகளில் குறித்த பிரிவுகளுக்காக விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும். விலைமனுதாரரின் திறன்களை பொறுத்து கொள்வனவாளர் மூலம் அவை மதிப்பீடு செய்யப்படும்.

02. இந்த ஒப்பந்தத்தின் ஓர் அங்கமாக தெரிவு செய்யப்படும் வழங்குநர்கள் இயைபுடைய நிறுவனத்திற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை பொறுப்பேற்க வேண்டும். குறித்த விநியோகப் மையங்கள் தொடர்பான விபரங்கள் மேலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

03. 2006 - பெறுகை வழிகாட்டியின் 3.2 உட்பிரிவிற்கு அமைய தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைக்கோரல் இடம்பெறும். வெளிநாட்டு விலைமனுதாரர்களுக்கு விலைகோருவதற்கு அனுமதி இல்லை.

04. விலைகளைக் கோருவதற்கு தகுதியைப் பெறுவதற்கு, விலைமனுதாரர் விலைக்கோரல் அறிவித்தல் வெளியான திகதியில் உள்நாட்டு வியாபாரப் பதிவுடன் இலங்கை வியாபார நிறுவனம், உற்பத்தியாளர், வர்த்தக நிலையம், வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாக இருத்தல் வேண்டும் (தொடர்புடைய உணவுப் பொருட்கள் வழங்கலில் ஈடுபடும் நிறுவனமாக இருத்தல் வேண்டும்). விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும்.

05. விலைமனுவுடன் தேவைப்படும் சகல ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்களை மதிப்பிடுவதில் பின்பற்றப்படும் விரிவான வழிமுறை விலைமனு ஆவணத்தின் IIIஆம் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ளன.

06. சகல விலைமனுதாரர்களும் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் முன் www.prisons.gov.lk எனும் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள கேள்வி அறிவித்தலை பார்வையிடுமாறு திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

07. விலைமனு ஆவணங்கள் வழங்கல், விலைமனுக்கள் ஏற்பது மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் திகதிகள் மற்றும் நேரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| விலைமனு ஆவணங்களை வழங்குதல் | - 2023-03-09 மு.ப. 9.00 மணி முதல் 2023-03-30ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை |
| விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் | - 2023-03-20 |
| தெளிவு பெறுவதற்கான இறுதி நாள் | - 2023-03-20 |
| விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் | - 2023-03-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு |
| விலைமனுக்கள் திறப்பதற்கான திகதி, நேரம் மற்றும் இடம் | - கொழும்பு-10, இல. 10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சு, 2ஆம் மாடி, பிரதான கேட்போர் கூடத்தில் (2023.03.31ஆம் திகதி (மு.ப. 10.00) விலைமனுக்கள் மூடப்பட்ட உடன் இடம்பெறும். |

08. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் கொழும்பு 09, பேஸ்லைன் வீதி, இல. 150, சிறைச்சாலை தலைமையகம், சிறைச்சாலைகள் திணைக்கள, பிரதான கேட்போர்கூடத்தில் 2023-03-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

09. மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 14ஆவது பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் வழங்கல் ஆணையாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். மீளளிக்கப்படாத கட்டணம் ஒவ்வொரு நிறுவனம்/ ஒவ்வொரு விலைமனுவுக்கும் இயைபாக 2016.06.17ஆம் திகதிய 06/2016ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தின் பிரகாரம் அமையும் (14ஆம் பந்தியில் தரப்பட்ட முகவரியில் வழங்கல் ஆணையாளரிடமிருந்து விலைமனுவிற்கான இயைபுடைய மீளளிக்கப்படாத கட்டணத்தின் அட்டவணையை பெற்றுக்கொள்ளலாம்.)

10. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு, விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள படிவங்களை மாத்திரமே விலைமனுதாரர்கள் பயன்படுத்த வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையின் கீழ் பெக்கட் 1 இல் ஆவணங்களையும் மற்றும் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையின் கீழ் பெக்கட் 2இல் விலைமனுக்களையும் நகல் பிரதிகளையும் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையில் இட்டு பெறுகைப் பணிப்பாளர், நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சு, இல. 10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் ஒப்படைத்தல் வேண்டும். அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன் உள்ளிடல் வேண்டும்.

11. 2023 ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

12. 2022 ஒக்டோபர் 02ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் விலைமனுப் பிணை ஒன்று விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் இருத்தல் வேண்டும். விலைமனு உத்தரவாதம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றின் மூலம் வழங்கப்பட்டதாக, நிபந்தனையற்ற கோரும்போது பெறக்கூடியதாக, அசலானதாக (வங்கியின் அசல் கடிதத் தலைப்பில்) இருத்தல் வேண்டும். 2006 - பெறுகை வழிகாட்டியில் பரிந்துரைக்கப்பட்டவாறு குறிப்பிட்ட விலைக்கோரல் ஒன்றுக்கான விலைமனுப் பிணைத் தொகையை காட்டும் அட்டவணை விலைமனு ஆவணத்துடன் வழங்கப்படும்.

13. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் சிறைச்சாலை தலைமையகத்தின் வழங்கல் ஆணையாளரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023 மார்ச் 09ஆம் திகதி முதல் 2023 மார்ச் 30ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி தொடக்கம் பி.ப. 03.00 வரையில் 14ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள அலுவலகத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

14. மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது
கவனம் : சிறைச்சாலை ஆணையாளர் (வழங்கல்)
முகவரி : சிறைச்சாலைகள் திணைக்களம், சிறைச்சாலை தலைமையகம், இல. 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.
தொலைபேசி : 011-4677177
தொலைநகல் : 011- 4677180, 011-2678531
மின்னஞ்சல் : **supplyprisons@gmail.com**

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**(சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கான உணவுப் பொருட்களின் பெறுகை - 2023/2024)**
**நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சு.**
**2023-03-09.**

## பத்திரிகை அறிவித்தல்

எனது குறிப்பு இல
- DSM/NU/LND/7/23-IX

காணி அமைச்சின் இலக்கம் -
4-3/9/2020/MV/288-H

1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம்)

**7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

இங்கு கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணிகள் வடமேல் மாகாண கால்வாய் திட்டத்திற்கு தொடர்புடைய போவதென்ன சுரங்கப்பாதை மற்றும் அதற்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான காணிகளை அரசாங்கத் திற்கு கைப்பற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க் கின்றது. மேலதிக விபரங்களுக்கு 2023.02.17 திகதி இல 2319/83 இலக்க இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

**உப அட்டவணை**

**மாவட்டம்**
: மாத்தளை

**பிரதேச செயலாளர் பிரிவில்**
: நாவுல

**கிராம உத்தியோகத்தர் பிரிவு**
:E 414 A முருத்தோலுவ

**கிராமத்தின் பெயர்**
: முருத்தோலுவ

**காணியின் பெயர்**
: அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட் டுள்ளமைக்கு அமைவாக.

**விஸ்தீரணம்**
: அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப் பட்டுள்ளமைக்கு அமைவாக.

**துண்டு இலக்கம்**
: 01,02,03,04
01, 02, 03, 04, 05, 06

**திட்டம் எண்**
: கடத்திரல் வரைபட இலக்கம் 310194 இல்தொகுதி இல 01 தாள் இலக்கம் 01
கடத்திரல் வரைபட இலக்கம் 310194 இல்தொகுதி இல 03 தாள் இலக்கம் 01

**விலாசம்**
: பிரதேச செயலாளர் காரியாலயம் - நாவுல

**திகதி :** 2023.03.01

**எஸ்.விஜயகுமார்**

**கைப்பற்றிக் கொள்வதற்கான அதிகாரி/பிரதேச செயலாளர், நாவுல**

## கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை 2023 பெப்ரவரி 28ம் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
ஆசியா பிரவுன் பொவேரி லங்கா (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இல :** பீவீ 96041

**பதிவு முகவரி:**
இல. 75 A/B, மாபிம வீதி மாபிம, ஹெயன்துடுவ.

**கம்பனியின் புதிய பெயர்:**
அக்சலரன் லங்கா (பிரைவட்) லிமிட்டட்

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி செயலாளர்கள், 03ம் மாடி,
இல 11, காசல் ஒழுங்கை. கொழும்பு 4.

ஊவா மாகாண சபை

**பிரதிப் பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) செயலகம்**

### ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தின் சிற்றுண்டிச்சாலையைக் குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி விலைமனுக்கோரல் – 2023/2024

01. ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெறும் பயிற்சிப் பாசறைகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களிற்கு உணவு பானங்களை வழங்குவதற்காக 2023.05.05 முதல் 2024.05.04 வரையான ஒரு வருட காலத்திற்கு சிற்றுண்டிச்சாலையைக் குத்தகைக்கு விடுவதற்காக, குறித்த துறையில் அனுபவம் மற்றும் அதற்கான வியாபாரப் பெயர்ப்பதிவு செய்யப்பெற்றுள்ள தனிநபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து கேள்வி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. மீளளிக்கப்படாத வைப்புத் தொகையான ரூபா 1,000.00 ஐ பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) செயலக கணக்குப்பிரிவின் சிறாப்பருக்குச் செலுத்தி, நிபந்தனைகள் மற்றும் தகவல்கள் அடங்கிய கேள்விப் படிவத் தொகுதியொன்றை 2023.03.10 முதல் 2023.03.30 வரை மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை அலுவலக நேரங்களில் ஊவா மாகாண சபையின் பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) செயலகக் கணக்குப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (விசாரணைகள் : 055-2228627)
03. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் இரண்டு பிரதிகளாக பெறுகைக்குழுவிற்கு 2023.03.31 அன்று பி.ப.2.30 இற்கு அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டு மென்பதுடன், கேள்விகள் 2023.03.31 அன்று பி.ப.2.30 இற்கு பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) செயலகத்தில் திறக்கப்படும்.
04. பெறுகை தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி)**
**செயலகம்**
**ஊவா மாகாண சபை பதுளை**

## பெறுகை அறிவித்தல்

### சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசர

வெலிசர சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் பிரதேச கேள்விக் குழுவினால் இலங்கை நிர்மாண, பயிற்சி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வைத்தியசாலையின் பராமரிப்பு விடயங்களுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | உருப்படி | தகைமை | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | கேள்விப் பிணைத் தொகைத் கட்டணம் | கேள்விகள் ஏற்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | டிஜிட்டல் XRAY இயந்திரத்தை நிறுவுவதற்கான அலகை அமைத்தல் | C09 அல்லது அதற்கு மேல் மற்றும் EM-04 அல்லது அதற்கு மேல் | ரூ. 2500.00 | ரூ. 83000.00 | 2023.03.30 |

02. இவ் ஒப்பந்தத்திற்காக மீளளிக்கப்படாத ரூ. 2500.00 கட்டணத்தை வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பொது 172 பற்றுச்சீட்டு மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை வைத்தியசாலையின் கணக்காளருக்கு சமர்ப்பித்து 2023.03.09 முதல் 2023.03.30 வரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் போது மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மேற்படி ஐந்தாம் நிரலில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு சமமான தொகையை கேள்விப் பிணைமுறியொன்று அல்லது அப்பெறுமதிக்கு சமமான தொகையை வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பொது 172 பற்றுச்சீட்டினை, கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2023.03.30 மு.ப. 10.00 அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை, வெலிசர என்ற முகவரிக்கு அனுப்பலாம் அல்லது அம் முகவரியிலேயே பிரதான பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. கேள்விகளை திறத்தல் 2023.03.30 மு.ப. 10.00 இற்கு இடம் பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை**
**வெலிசர.**
**தொ.பே.இல. 0112958271(111)**
**பெக்ஸ் இல. 0112958272**

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிட அதிகார சபை

## கேள்வி கோரலுக்கான அழைப்பு

### நுவரெலியா வசந்தகால களியாட்ட விழா - 2023

நுவரெலியா வசந்தகால களியாட்ட விழா - 2023 இற்காக, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபைக்கு உரித்தான நுவரெலியா குதிரைப்பந்தய திடலில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களை 2023.04.01 முதல் 2023.04.30 வரை குத்தகைக்கு வழங்கப்படுவதுடன், அதற்காக ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

**குத்தகைக்கு வழங்கப்படும் இடங்கள்**

| | களியாட்டம் நடைபெறும் அமைவிடம் | கேள்விப் பிணையம் ரூபா | பிணை வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|
| 01 | சினெசிடா விளையாட்டரங்கு | 71,500.00 | 500,000.00 |
| 02 | கீழ் விளையாட்டரங்கு | 75,000.00 | 500,000.00 |
| 03 | பிரதான நுழைவாயிலின் வலப்புறமாக உள்ள நிலம் சுமார் 4273 ச.அடி | 9,000.00 | 20,000.00 |
| 04 | பதுளை வீதியின் ரேஸ்கோஸ் வீதி ஊடாக அமைந்துள்ள காணி - காமினி பாடசாலைக்கண்மையில் சுமார் 14466 ச.அடி | 30,000.00 | 200,000.00 |
| 05 | பிரதான நுழைவாயிலுக் கண்மையில் இடதுபக்க நிலம் சுமார் 3422 ச.அடி | 7,500.00 | 20,000.00 |
| 06 | மின்சார சபைக்கண்மையிலுள்ள காணி: (சாரதிகள் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படும் காணி) சுமார் 27103 ச.அடி | 45,000.00 | 300,000.00 |

**நிபந்தனைகள்**

01. மீளளிக்கப்படாத ரூபா 1,500.00 இற்கான தொகையை (வரிகளுட்பட) செலுத்தி சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகார சபையின் நுவரெலியா மற்றும் கொழும்பில் அமைந்துள்ள அலுவலகங்களில் இதற்கான கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. 2023.03.10 முதல் 2023.03.23 வரை வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை மேற்படி அலுவலகங்களில் இதற்கான கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.
03. கேள்வி மனுதாரர் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும் இடத்திற்கான கேள்விப் பிணைக்கான தொகையை கேள்வி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் அதிகார சபையில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் பிரதியொன்று கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர் குறித்த இடத்தைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில், அவரால் வைப்புச் செய்யப்படும் கேள்விப் பிணையம் மீளளிக்கப்படமாட்டாது.
04. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர், மேற்படி பிணை வைப்புத்தொகையை; குறித்த இடங்களில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க முன்னர் அதிகார சபையில் வைப்புச் செய்தல் வேண்டும். நிறுவனத்தின் நிலத்திற்கு சேதங்கள் ஏற்படுமெனில், உங்கள் வைப்புத்தொகையிலிருந்து, அத்தொகையானது அறவிடப்படும்.
05. 2023.03.24 அன்று மு.ப.10.00 மணிக்கு கொழும்பு - 13 இல் அமைந்துள்ள சுகததாச அதிகார சபையின் திறந்தவெளி விளையாட்டரங்கின் நிருவாகக் கட்டிடத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அனைத்து கேள்விகளும், கணக்குப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, கீழ்க்காணப்படும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் அனைத்துக் கேள்விகளும் நிராகரிக்கப்படும்.
06. இது தொடர்பான மேலதிக தகவல்களை, கீழ்க்காணப்படும் தொலைபேசி எண்களை அழைத்து அல்லது எமது நுவரெலியா குதிரைப்பந்தயத்திடலில் அமைந்துள்ள அலுவலகம் மற்றும் கொழும்பிலுள்ள பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
07. அனைத்து விண்ணப்பதாரர்களும், நுவரெலியா மாநகர சபையினால் (இவ் விழாக் காலத்திற்காக) வழங்கப்படும் தற்காலிக வர்த்தக உரிமப்பத்திரம் ஒன்றை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
08. கேள்விதாரர்கள், விழாக்காலத்தில் நுவரெலியா அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர் பணிமனை, நுவரெலியா மாநகரசபை, சுகாதாரத்திணைக்களம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள், கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு கடப்பாடு உடையவராவர்.

**தொலைபேசி எண்கள் : 0112384385/ 0112445677 கொழும்பு அலுவலகம் , நீடிப்பு - 120 (பெறுகை முகாமையாளர்)**
**- 0522222659 (நிலையப் பொறுப்பதிகாரி - நுவரெலியா)**
**தொலைநகல் - 0112445675**

**தலைவர் - பெறுகைக்குழு**
**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி,**
**ஆதர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 13**

CSIAP THE WORLD BANK

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**கமத்தொழில் அமைச்சு**

### தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**செயற்றிட்ட இல.: P163742**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக 125 ஐ.அமெ. டொலர்கள் பெறுமதியான கடனைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத்தலைவர் (கிழக்கு மாகாணம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | வேலையின் விபரம் | CIDA பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (LKR) மற்றும் செல்லுபடித் திகதி | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | மதிப்பீட்டுக் கிரயம் ரூபா (மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | LK-MOA-309718-CW-RFB/ EP/ DPDO/Machinery Yard (09)/ 2022/33 | அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் பொத்துவில் கமநல சேவை நிலையம், கோமரி கமநல சேவை நிலையம் மற்றும் லகுகல பிரதேச செயலாளர் பிரிவு லகுகல கமநல சேவை நிலையம், பானம கமநல சேவை நிலையங்களில் இயந்திராதிகள் முற்றவெளியை நிர்மாணித்தல் | C 6 அல்லது அதற்கு மேல் (கட்டிட நிர்மாணம்) | ரூபா 7,500.00 | 210,000.00 2023 ஜூலை 13ஆம் திகதி வரை | 90 | 13.93 |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை திருகோணமலை, உப்புவெளி, லவ் லேன், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (கிழக்கு மாகாணம்), பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2054999, தொலைநகல்: 026-2054999) மற்றும் அதே இடத்தில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர் செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டிட நிர்மாணத் துறையில் விசேடத்துவமாக மேற்குறிப்பிடப்பட்ட தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்கள் நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
6. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) 2023 மார்ச் 09ஆம் திகதி முதல் 2023 மார்ச் 28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்றும் மற்றும் வேலைத் தள விஜயமும் 2023 மார்ச் 16ஆம் திகதி மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தை தங்கள் சொந்த செலவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனு ஆவணத்திலுள்ள BOQ இன் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.
11. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2023 மார்ச் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (கிழக்கு மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (கிழக்கு மாகாணம்), லவ் லேன், உப்புவெளி, திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
12. கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் 2023-03-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**டாக்டர் ஆர்.எம். ஆரியதாச,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (கிழக்கு மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (கிழக்கு மாகாணம்),**
**லவ் லேன், உப்புவெளி,**
**திருகோணமலை.**

**2023-03-09ஆம் திகதி.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலையின் வருமானத்திலிருந்து நிதியிடப்பட்டது**

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

## ஒரு வருட காலப்பகுதிக்கு அதிவேகநெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவில் நிறுவப்பட்டுள்ள வளிச்சீராக்கல் இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் சேவைகளுக்கான அழைத்தல். 2023/ 2024

1. மேலேயுள்ள பெறுகைக்காக தகுதியும் முழுமையாக தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இலக்கம் | அதிவேகநெடுஞ்சாலை |
|---|---|---|
| 1. | RDA/EOM&M/PRC/2023/ELE/01 | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை |
| 2. | RDA/EOM&M/PRC/2023/ELE/02 | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் நீடிப்பு |
| 3. | RDA/EOM&M/PRC/2023/ELE/03 | வெளியக சுற்றுவட்ட நெடுஞ்சாலை |
| 4. | RDA/EOM&M/PRC/2023/ELE/04 | மத்திய அதிவேக நெடுஞ்சாலை |

2. சிறிய தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் எமது தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்வதற்காக அவர்களின் திறன்களை உரித்தான அதிவேக நெடுஞ்சாலையின் தொடர்புள்ள பிரதேசங்களின் சிறிய தொழில்முயற்சியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹாஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 038-2289122/ தொலைநகல்: 038-2289560) அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. 2023.03.24 மு.ப. 10 மணிக்கு பண்டாரகம, வல்கம அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
5. விலைமனுதாரர்கள் ஒன்றிற்கு அல்லது அனைத்து விலைமனுக்களுக்கும் தனித்தனியாக விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.
6. 2023.03.09 ஆம் திகதியிலிருந்து 2023.03.30 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் 2,500 மற்றும் தேவையான வரிகளுடனான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹாஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், சிங்கள மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் ஒவ்வொரு தொகுதியையும் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யலாம்.
7. 2023.03.31 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒன்றில் பதிவுத் தபாலில் பண்டாரகம, வல்கம, கஹட்டகஹாஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளருக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் உரித்தான ஒப்பந்த இலக்கத்தை தயவு செய்து குறித்துரைக்கவும்.
8. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே பண்டாரகம, வல்கம, கஹட்டகஹாஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பணிப்பாளரின் பெறுகைக் குழு,**
**EOM&M பிரிவின் பதில் கடமையாற்றும் பணிப்பாளர் மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹாஹேன, வல்கம,**
**பண்டாரகம.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/ PT/6436(MAR) | Spares for Wartsila 8L 26 Engines of M/T Nandimithra | 85,000.00 | 1,000.00 | 2023.04.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/LP/22/ PT/07/056 | MS Plates LR "A" 6000 X 1500 X 8MM | 80,000.00 | 1,000.00 | 2023.03.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/08/052 | 3536 Ltr. Diesel Engine Oil SAE 15W – 40 CI-4 | 63,000.00 | 1,000.00 | 2023.03.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/16/052 | 50 Nos, Sealed type Battery 12V 90 AMPH (Semi – Maint, Free) | 25,000.00 | 1,000.00 | 2023.03.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 மார்ச் 10 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443.**

## களனி பல்கலைக்கழகம் - இலங்கை

# வெற்றிடங்கள்

**கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 2023.03.31ம் திகதி வரை என்னால் ஏற்கப்படும்**

வர்த்தக மற்றும் முகாமைத்துவ கற்கை பீடம்

**01. வர்த்தக மற்றும் நிதி முகாமைத்துவ கற்கை பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**02. நிதி கற்கை பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**03. கணக்கியல் கற்கை பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**04. விற்பனை முகாமைத்துவ கற்கை பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i

கணனி தொழில்நுட்ப பீடம்

**01. கட்டமைக்கப்பட்ட கணனி கற்கை பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**02. கணனி வலையமைப்பு பொறியியல் கற்கை பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**03. மென்பொருள் பொறியியல் கற்கை பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i

சமூக விஞ்ஞான பீடம்

**01. பொறியியல் கற்கை பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**02. புவியியல் கற்கை பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**03. சர்வதேச கல்வி கற்கை பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**04. நூலக மற்றும் ஆவணவியல் கற்கை பிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i /நூலக ஆவணவியல் பற்றிய பேராசிரியர்/சிரேஷ்ட பேராசிரியர்

மருத்துவ பீடம்

**01. குடும்ப மருத்துவ கற்கை பிரிவு**
குடும்ப மருத்துவவியல் பற்றிய சிரேஷ்ட பேராசிரியர்/பேராசிரியர்
**02. சத்திர சிகிச்சை கற்கை பிரிவு**
சத்திர சிகிச்சையியல் பற்றிய சிரேஷ்ட பேராசிரியர்/பேராசிரியர்
**03. மருத்துவவியல் கற்கைப்பிரிவு**
மருத்துவவியல் பற்றிய சிரேஷ்ட பேராசிரியர்/பேராசிரியர்
**04. நோயியல் கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**05. சிறுவர்நோய் கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**06. ஒட்டுண்ணியியல் கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**07. பொது சுகாதார கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**08. உடலியல் கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**09. உடற்பயிற்சி கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**10. உடற்கூறியல் கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**11. மருத்துவக்கல்வி கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i

மானிடவியல் பீடம்

**01. அழகியற்கலை கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**02. ஆங்கிலமொழி கற்பித்தல் கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i

விஞ்ஞான பீடம்

**01. கணித கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**02. புள்ளிவிவர மற்றும் கணனி கல்வி கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**03. பௌதிகவியல் மற்றும் இலத்திரனியல் கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**04. இரசாயனவியல் கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**05. தாவரம் மற்றும் மூலக்கூறு உயிரியல் கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**06. நுண்ணுயிரியல் கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**07. உயிரியல் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i
**08. கைத்தொழில் நிர்வாக கற்கைபிரிவு**
விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/சிரேஷ்ட விரிவுரையாளர் ii/i

மேற்படி ஒவ்வொரு பதவிக்கும் சேர்த்துக்கொள்ளும் தகைமை மற்றும் குறித்த சகல தகவல்களையும் https://www.kln.ac.lk/vacancies மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

சம்பள அளவு

**01. விரிவுரையாளர் (பயிலுநர்)**
ரூ.54,600-10X1335-67590 p.m.(U-AC 3 (iv) கிட்டிய தேறிய சம்பளம் ரூ.136,110/-)
**02. விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத**
ரூ.69,580-5X1630-77730 p.m.(U-AC 3 (ii) கிட்டிய தேறிய சம்பளம் ரூ.182,445/-)
**03. சிரேஷ்ட விரிவுரையாளர் - II**
ரூ.79,360-11X1630-97290 p.m.(U-AC 3 (ii) கிட்டிய தேறிய சம்பளம் ரூ.222,865/-)
**04. சிரேஷ்ட விரிவுரையாளர் - I**
ரூ.91,310-7X2170-106,500 p.m.(U-AC 3 (i) கிட்டிய தேறிய சம்பளம் ரூ.255,250/-)
**05. பேராசிரியர்**
ரூ.117,350-13X2700-152,450 p.m.(U-AC 5 (ii) கிட்டிய தேறிய சம்பளம் ரூ.338,727/-)
**06. சிரேஷ்ட பேராசிரியர்**
ரூ.139,175-11X2925-171,350 p.m.(U-AC 5 (i) கிட்டிய தேறிய சம்பளம் ரூ.407,232.25)

**விண்ணப்பிக்கும் முறை**

இப்பதவிக்காக குறித்த விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதிப்பதிவாளர்/நிறுவன கற்கை இடம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் இணையதளத்தில் **https://www.kln.ac.lk/vacancies** என்ற பல்கலைக்கழக இணையதளத்திற்கு பிரவேசித்து குறித்த விண்ணப்பம் மற்றும் தகவல்களை பதிவறக்கம் (Downloads) செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தபாலில் பெற்றுக்கொள்ள அவசியமாயின் அதற்காக வேண்டுகோளுடன் முகவரி எழுதப்பட்ட முத்திரையுடனான 23X10 செ.மீ அளவிலான உறையொன்றை அனுப்புதல் வேண்டும் விண்ணப்பதாரிகளால் ஒவ்வொரு பதவிக்கும் வேறுவேறாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியதுடன் விண்ணப்பங்களை குறித்த சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2023.03.31ம்** திகதி அல்லது அதற்கு முன்பு பிரதி பதிவாளர்/நிறுவன கற்கை, களனிப் பல்கலைக்கழகம், களனி என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அல்லது கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பபப்படும் உறையில் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி திணைக்களம் மற்றும் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பங்களை அனுப்பும் போது தலைப்பு (Subject) ஐ குறிப்பிடும் நிரலில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திணைக்களத்தை குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தியற்ற, தெளிவற்ற விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித்திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| | |
|---|---|
| வர்த்தக, முகாமைத்துவ கற்கை பீடம் | - applycm@kln.ac.lk |
| கணனி மற்றும் தொழில்நுட்பபீடம் | - applyct@kln.ac.lk |
| சமூக விஞ்ஞான பீடம் | - applyss@kln.ac.lk |
| மருத்துவ பீடம் | - applyme@kln.ac.lk |
| மானிடவியல் பீடம் | - applyhu@kln.ac.lk |
| விஞ்ஞான பீடம் | - applysc@kln.ac.lk |

**அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவன தலைமையூடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை குறுகிய பட்டியல்படுத்தும் முழுமையான உரிமை பல்கலைக்கழகத்திற்கு உண்டு.**

**கவனிக்கவும்:**
**இப்பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் வெற்றிடங்களுக்காக சேர்த்துக்கொள்ளல், சேர்த்துக்கொள்ளாதிருத்தல் அல்லது பத்திரிகை அறிவித்தலை இரத்துச் செய்தல் பற்றிய நிர்வாக சபையின் தீர்மானம் இறுதித்தீர்மானம் ஆகும்.**

**களனிப்பல்கலைகழக்கத்தின் நிர்வாக சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தின் பிரகாரம் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது. நிதி அமைச்சின் முறையான அனுமதி கிடைத்தபின்பு சேர்த்துக்கொள்ளல் இடம்பெறும்.**

பதிவாளர்
களனி பல்கலைக்கழகம்
களனி
2023.03.07

### உலக டெஸ்ட் சம்பியன்சிப் எதிர்பார்ப்புடன்

# இலங்கை அணியின் நியூசிலாந்து டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பம்



இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி இன்று (09) கிரைஸ்சேர்ச்சில் ஆரம்பமாகவுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற எதிர்பார்த்திருக்கும் இலங்கை அணிக்கு இந்த டெஸ்ட் தொடர் முக்கியமானதாக உள்ளது. இந்த வாய்ப்பை பெறுவதற்கு அடிப்படையில் இலங்கை அணி இந்த டெஸ்ட் தொரை 2–0 என முழுமையாக வெல்வது அவசியமாகும்.

எனினும் உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதில் அஹமதாபாத்தில் இன்று ஆரம்பமாகும் இந்திய மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டியும் தீர்க்கமாக உள்ளது. ஏற்கனவே அவுஸ்திரேலிய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறி இருக்கும் நிலையில் இலங்கை அணி அந்த வாய்ப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு இந்தப் போட்டியில் ஆஸி. அணி போட்டியை வெல்வது அல்லது சமநிலை செய்வது அவசியமாகும்.

“(உலக டெஸ்ட் சம்பியன்சிப்) இறுதிப் போட்டிக்கு முன்னேறவே நாம் அனைவரும் எதிர்பார்த்துள்ளோம். என்றாலும் மற்றைய போட்டிகளில் எம்மால் தாக்கம் செலுத்த முடியாது. எமக்கு எதிரில் இருக்கும் போட்டிகளை மாத்திரமே எம்மால் கட்டுப்படுத்த முடியும். அதனால் இரண்டு போட்டிகளில் வெல்வதற்கு முன்னால், எமக்குக் கிடைக்கின்ற முதல் போட்டியில் நாம் வெல்ல வேண்டும். அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியே நாம் பேச வேண்டும்” என்று இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த டெஸ்ட் தொடருக்காக இலங்கை அணி தாய் நாட்டில் முழு தயார்நிலையுடனேயே நியூசிலாந்து புறப்பட்டுச் சென்றது. இலங்கை கிரிக்கெட் சபை நடத்திய தேசிய சுப்பர் லீக் நான்கு நாள் போட்டித் தொடர் மற்றும் நியூசிலாந்து சூழலுக்கேற்ப புதிதாக புனரமைக்கப்பட்ட ரதெல்ல மைதானத்தில் ஒரு வார பயிற்சி முகாமுக்குப் பின்னரே நியூசிலாந்து பயணித்தது.

எனினும் நியூசிலாந்து சென்றிருக்கும் இலங்கை அணியின் பந்துவீச்சு குழாம் போதிய அனுபவம் அற்றதாக உள்ளது. விஷ்வ பெர்னாண்டோ, கசுன் ராஜித்த, அசித்த பெர்னாண்டோ மற்றும் பிரபாத் ஜயசூரி ஆகியோர் முறையே 17, 13, ஏழு மற்றும் மூன்று டெஸ்ட் போட்டிகளிலேயே ஆடியுள்ளனர்.

எனினும் துடுப்பாட்ட வரிசையில் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் மற்றும் குசல் மெண்டிஸ் போன்ற அனுபவ வீரர்கள் உள்ளடங்குகின்றனர். தவிர ஒஷத பெர்னாண்டோ, தனஞ்சய டி சில்வா மற்றும் விக்கெட் காப்பாளர் நிரோஷன் திக்வெல்லவும் துடுப்பாட்டத்தில் பலம் சேர்க்கின்றனர்.

இங்கிலாந்துக்கு எதிராக அண்மையில் முடிவடைந்த டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியை ஒரு ஓட்டத்தால் வெற்றியீட்டி தொடரை 1–1 என சமநிலை செய்த உத்வேகத்துடனேயே நியூசிலாந்து அணி இன்றைய போட்டியில் களமிறங்கவுள்ளது. கேன் வில்லியம்சன் முதற்கொண்டு நியூசிலாந்து துடுப்பாட்ட வரிசையும் அணித் தலைவர் டி சௌதி முதற்கொண்டு அதன் பந்துவீச்சு வரிசையும் பலமாக இருக்கும் நிலையில் சொந்த மைதானத்தில் ஆடும் சாதகமான சூழலிலேயே நியூசிலாந்து இந்த டெஸ்ட் தொடரில் களமிறங்குகிறது.

1983 தொடக்கம் இலங்கை அணி நியூசிலாந்தில் ஒன்பது டெஸ்ட் தொடர்களில் ஆடியிருப்பதோடு 1995 ஆம் ஆண்டு நடந்த தொடரில் மாத்திரம் 1–0 என வெற்றியீட்டியது.

இன்றைய போட்டி நடைபெறும் ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு சாதகமாக அமையும் என்றபோதும் முதல் இரு நாட்களிலும் மழை குறுக்கிட வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 3.30 மணிக்கே ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

## குறிப்புகள்

★ இலங்கை அணி நியூசிலாந்து மண்ணில் ஆடிய 19 டெஸ்ட் போட்டிகளில் இரண்டில் மாத்திரமே வெற்றியிட்டியுள்ளது. கடைசியாக 2006 ஆம் ஆண்டு அங்கு வெற்றியீட்டிய இலங்கை அணி அதன் பின் ஆடிய ஆறு டெஸ்ட்களில் ஐந்தில் தோல்வியை சந்தித்துள்ளது.

★ இம்முறை உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்தில் நியூசிலாந்து அணி ஒரு டெஸ்ட் தொடரில் கூட வெல்லவில்லை. கடைசியாக அந்த அணி 2021 ஆரம்பத்திலேயே சொந்த மைதானத்தில் டெஸ்ட் தொடர் ஒன்றில் வெற்றியீட்டி இருந்தது.

★ கேன் வில்லியம்சன் இன்னும் எட்டு ஓட்டங்களை பெற்றால் இலங்கைக்கு எதிராக 1000 டெஸ்ட் ஓட்டங்களை பூர்த்தி செய்வார். இதற்கு முன்னர் அவர் இந்த மைல்கல்லை பாகிஸ்தானுக்கு எதிராக மாத்திரம் பெற்றுள்ளார்.

★ இலங்கை துடுப்பாட்ட வீரர்களில் நியூசிலாந்துக்கு எதிராக சிறப்பாக செயற்பட்டவராக அஞ்சலோ மத்தியூஸ் உள்ளார். கடந்த முறை அவர் நியூசிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது நான்கு இன்னிங்ஸ்களிலும் முறையே 83, ஆட்டமிழக்காது 120, ஆட்டமிழக்காது 33 மற்றும் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களை பெற்றார். நியூசிலாந்தில் அவரது ஓட்ட சராசரி 55.8 ஆகும்.



## 'பொன் அணிகளின்' டி20: புனித பத்திரிசியார் வெற்றி




யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் புனித பத்திரிசியார் கல்லூரிகளுக்கு இடையில் நடைபெற்ற 3ஆவது பொன் அணிகளின் சமர் டி20 போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி 09 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

சொந்த மண்ணில் நடைபெற்ற இந்தப்போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 19.5 ஓவர்களில் 86 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த புனித பத்திரிசியார் கல்லூரி 10.2 ஓவர்களிலேயே ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 87 ஓட்ட வெற்றி இலக்கை எட்டியது. சௌத்ஜன் ஆட்டமிழக்காது 69 ஓட்டங்களை பெற்றார். இதன்மூலம் அவர் ஆட்டநாயகன் விருதையும் வென்றார்.

ஏற்கனவே பொன் அணிகளின் சமரின் ஒருநாள் மற்றும் இரண்டு நாள் மாபெரும் கிரிக்கெட் போட்டிகளிலும் புனித பத்திரிசியார் கல்லூரி வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

## 18 பேர் கொண்ட இளையோர் வலைப்பந்து குழாம் அறிவிப்பு



ஆசிய இளையோர் வலைப்பந்து சம்பியன்சிப் தொடருக்கு தயாராவதற்காக இலங்கை வலைப்பந்து சம்மேளனத்தினால் 18 வீராங்கனைகள் கொண்ட இளையோர் குழாம் அறிவிக்கப் பட்டுள்ளது. ஆசிய இளையோர் வலைப்பந்து சம்பியன்சிப் போட்டி தென் கொரியாவில் வரும் ஜூன் 10 தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தக் குழாம் தலைமை பயிற்சியாளர் அமல்கா குணதிலக்கவின் கீழ் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபடவுள்ளதோடு எதிர்வரும் வாரங்களில் 12 பேர் கொண்ட இறுதி அணி தேர்வு செய்யப்படவுள்ளது.

இளையோர் குழாம்: எஸ்.என். உடகெதர, மினகி கங்கானிகே, திசாரா உமயங்கனி, ஹருனி ஹேஷனி, டில்மினி விஜேனாயக்க, சஜினி ரத்னாயக்க, இதுரஷா பெரேரா, நெத்மி பெரேரா, நெத்மி விஜேநாயக்க, உதாரி குருகே, சலனி நீஷா, தருஷி பெரேரா, டீ.எம். வசன்தபிரிய, எஸ்.டீ. பத்திரணகே, நெதன்கா குணரத்ன, சரசி கவிந்திக, தெவ்மி பமுனுவாரச்சி, ஜினாலி பாலசூரிய.

## இலங்கை சார்பில் கராத்தே போட்டிகளில் 24 பதக்கங்கள்



மாளிகைக்காடு குறூப் நிருபர்

சொட்டகன் கராத்தே டு ஜப்பான் ஸ்கூல் ஏற்பாட்டில் அநுராதபுரம் அன்றுவ் குமாரகே உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற 10ஆவது திறந்த கராத்தே சம்பியன்சிப் போட்டியில் இலங்கை சார்பில் யூ.எஸ்.கே.யூ. கராத்தே சங்கத்தின் மாணவர்கள் 24 பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதில் பங்கேற்ற ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனையைச் சேர்ந்த மாணவர்கள் ஆண்களுக்கான சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவின் கீழ் 11 தங்கம், 06 வெள்ளி மற்றும் 07 வெண்கலப்பதக்கங்கள் உட்பட 24 பதக்கங்களை வென்றனர். இப்போட்டியில் இலங்கை, இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கராத்தே வீர, வீராங்கனைகள் பங்கேற்றனர்.

## சர்வதேச செய்திகள்

## டாக்கா கட்டடத்தில் வெடிப்பு: 19 பேர் பலி




பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் அலுவலகக் கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பில் குறைந்தது 19 பேர் கொல்லப்பட்டு மேலும் 50க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை (07) ஏற்பட்ட இந்த வெடிப்புக்கான காரணம் உறுதி செய்யப்படாதபோதும் எரிவாயு வெடிப்பு ஒன்றாக இருக்கலாம் என்று டாக்கா பெருநகர பொலிஸ் மேலதிக ஆணையாளர் மஹிதி உத்தீன் கொன்டகர் தெரிவித்துள்ளார். வெடிப்பு நிகழும்போது கட்டடத்திற்குள் அதிகம் பேர் இல்லாதபோதும் மக்கள் அதிகம் கூடும் பரபரப்பான பகுதி என்பதால் பாதசாரிகளே அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பங்களாதேஷில் போதிய பாதுகாப்பு இல்லாத சூழலில் தொழிலிடங்களில் இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

## நாட்காட்டி விற்ற நபருக்கு இரண்டு ஆண்டுகள் சிறை



அரச குடும்பத்தை கேலி செய்வது போன்ற நையாண்டி கருத்துகள் மற்றும் இறப்பர் வாத்துகளைக் கொண்ட நாட்காட்டிகளை விற்றதற்காக தாய்லாந்தில் ஒருவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மன்னரை அவமதித்ததாகக் குற்றங்காணப்பட்டிருக்கும் 26 வயதான நரதோர்ன் சொட்மன்கொங்சின் என்ற இளைஞரே தண்டனைக்கு உள்ளாகியுள்ளார்.

மன்னரை அவமதிப்பதற்கு எதிரான சட்டத்தின் கீழ் கடந்த 2020 தொடக்கம் சுமார் 200க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரானது என்று குற்றம்சாட்டப்படுகிறது. இதில் இறப்பர் வாத்துகள் ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டத்தின் குறியீடாக உள்ளது.

## குவாட் அமைப்பு அழைப்பு

உக்ரைன் அமைதிக்கு குவாட் அமைப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். அணுவாயுதங்கள் பயன்படுத்தப்படும் என்ற ரஷ்யாவின் அச்சுறுத்தலை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குவாட் அமைப்பு வெளிவிவகார அமைச்சர்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் இவ்விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு டோக்கியோவில் நடைபெற்ற உச்சி மாநாட்டுக்குப் பின் குவாட் அமைப்பு நாடுகளது தலைவர்களின் கூட்டு ஆவணத்தில் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### ஜெனின் நகரில் மீண்டும் சுற்றிவளைப்பு:

# இஸ்ரேலியப் படையினரால் 6 பலஸ்தீனர் சுட்டுக்கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகரில் இஸ்ரேலிய படையின் புதிய தேடுதல் நடவடிக்கையின்போது குறைந்தது ஆறு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை (07) இடம்பெற்ற இந்த சுற்றிவளைப்பில் இஸ்ரேலிய படையினர் வீடு ஒன்றை முற்றுகையிட்டு ரொக்கெட் தாக்குதல் நடத்தியதாக சம்பவத்தை பார்த்தவர்கள் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர். நகருக்கு மேலால் ஹெலிகொப்டர்கள் சுற்றிவர இராணுவ வாகனங்கள் நுழையும் காட்சிகள் சமூகதளத்தில் பதிவாகியுள்ளன.

இஸ்ரேலிய குடியேற்றத்தில் உள்ள இரு சகோதரர்களை சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர் ஒருவரும் இதன்போது கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அஸ்கார் அகதி முகாமில் மற்றொரு சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்ட இஸ்ரேலிய இராணுவம் மூவரை கைது செய்தனர். இதில் ஜெனினில் கொல்லப்பட்ட 49 வயது ஆடவரின் இரு மகன்களும் அடங்குகின்றனர்.

ஜெனினில் ரொக்கெட் குண்டுகளை பயன்படுத்தியது “ஒரு முழுமையான போர் செயல்” என்று பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் பேச்சாளர் நபில் அபூ ருதைனி தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவங்களைத் தொடர்ந்து ஹமாஸ் கட்டுப்பாட்டு காசா பகுதியில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ரொக்கெட் குண்டு ஒன்று வீசப்பட்டதை அடுத்து அங்கிருந்து சில கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் இஸ்ரேலிய நகரான நிர் ஆமில் சைரன் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டுள்ளது.

இஸ்ரேலியப் படையின் நடவடிக்கைக்கு எதிராக மேற்குக் கரை முழுவதும் பலஸ்தீனர்களால் நேற்று (08) ஒருநாள் வேலைநிறுத்தம் அனுஷ்டிக்கப்பட்டது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்களுக்கு இடையிலான பதற்றம் அதிகரித்திருக்கும் சூழலில் இந்த ஆண்டு ஆரம்பித்தது தொடக்கம் 71 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு 13 இஸ்ரேலியர்கள் பலியாகியுள்ளனர்.

## அம்ஸ்டர்டாம் பாலியல் மையத்திற்கு எதிர்ப்பு



பெல்ஜியத்தின் ஆம்ஸ்டர்டாம் நகரில் உள்ள ஐரோப்பிய மருந்துகள் நிறுவன தலைமையகத்திற்கு அருகில் பாலியல் மையம் ஒன்றை நிர்மாணிக்க திட்டமிட்டிருப்பதற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

இதனால் போதைப்பொருள் விற்பனை, ஒழுக்கக்கேடான நடத்தைகள் போன்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் என்று அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அம்ஸ்டர்டாமில் பிரபலமான சிவப்பு விளக்குப் பகுதியில் இருந்து சட்டபூர்வமான விபசார பகுதியை இடம் மாற்றுவதற்கு அந்த நகர சபை திட்டமிட்டுள்ளது. இவ்வாறு இடமாற்ற திட்டமிடப்பட்டிருக்கும் பகுதி ஐரோப்பிய மருந்துகள் நிறுவனத்தின் தலைமையத்திற்கு அருகில் அமையவுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 9ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.